www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஒக்.29–நவ.04,1995
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

125

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு

## பொட்டம்மானுக்கு ஆபத்தா?

## வெளியான செய்திகளும் வெளிவராத நிலவரங்களும்



## தூதர் கடத்தலில் துணிகரம்

## அதிசய மனிதனோடு கிளிண்டன்

## ரன் குவிக்கும் லாரா ஸ்போர்ட்ஸ்

## 125வது பிரமாண்ட சினிவிசிட்

சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஆயிரம் யானைப் பலம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
தீபாவளி வருவதற்கிடையில்
வாழ்த்து மடல்கள்
கரம் சேர்ந்து
அகம் முழுக்கப் பூச்சொரிந்தன.

எந்த மத திருநாளானாலும்
முரசுக்கு கொண்டாட்டம்தான்.
வாழ்த்துக்கள் வந்து
உங்கள் நேசம் சொல்லி
நெஞ்சை நெகிழ வைத்துவிடுகின்றன.

நேசம் என்னும் தோள் கொடுத்து
நீங்கள் வளர்த்துவிட்ட
முரசு-இன்று-
125வது வெற்றிப்படியில்
காலடிவைத்திருக்கிறது.

முரசை மேலும் மெருகூட்ட
என்ன செய்யலாம்
என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்;
ஏனெனில், முரசு
ஏதாவது புதுமை செய்தால்தான்
முரசிடமிருந்து
இலவச யோசனைக்காக
காத்திருக்கும்
நகலெடுப்பார்களுக்கும்
பெரிதும் உதவியாக இருக்கும்!

பொறாமையால்
முரசை வசைபாடியவர்களெல்லாம்
முரசைத் தழுவத்
துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.
அமைப்பு வடிவம் முதல்
எழுத்து நடை வரை
முரசின் பாணியே
எங்கும் மேலோங்கியிருக்கிறது.

இது தற்பெருமையல்ல
என்பதை முரசின்
புத்திசாலி வாசகர்கள் அறிவீர்கள்!

கனடாவில் மட்டும்
நான்கு தமிழ் பத்திரிகைகள்
முரசின் ஆக்கங்களை
மறுபிரசுரம் செய்கின்றன.

நம்நாட்டு நிலவரம் பற்றி
வாசகர்கள் அறிவார்கள்
என்பதால்-
சுட்டிக்காட்டும் தேவையில்லை.
எனினும்-யார்மீதும்
முரசுக்கு வருத்தமில்லை.

ஆசையிருப்பதால்தானே
தழுவத்துடிக்கிறார்கள்!
ரஜினிகாந்த் போல
சின்னி ஜெயந்த் நடித்தால்
அது போட்டியுமல்ல.
பொறாமையுமல்ல.
சின்னி ஜெயந்துக்கு
ரஜினியை பிடித்திருக்கிறது
என்றுதானே அர்த்தம்!

நகல் எடுப்பார்களுக்கு
நன்றிதான் சொல்ல வேண்டும்.
முரசின் முத்திரை பதித்தலுக்கு
அவர்கள்தானே
அத்தாட்சி தந்துகொண்டிருக்கிறார்கள்!

அனைத்துப் பெருமையும்
முரசின் வாசகர்களுக்கே!
மேலும் வித்தியாசமாய்-
மேலும் இனிதாய்- புதிதாய்
முரசு தன்
பயணத்தை தொடரும்!

125 படிக்கட்டுக்கள்
என்பது சிறு தூரம்தான்!
கடக்க வேண்டியவை
அதிகம்! அதிகம்!!

வரிக்கு வரி படித்து
மடலிலும், தொலைபேசியிலும்
விலாவாரியாக விமர்சிக்கும்
உங்கள் ஆர்வமும்-அன்பும்
ஆயிரம் யானைப்பலம்!

இதுவரை புதிய
படைப்பாளர்கள் பலரை
முரசு களம் தந்து
ஊக்குவித்திருக்கிறது.
இனியும் அது தொடரும்!

எரியும் பிரச்சனைகளோடு
இணைந்த படைப்புக்களுக்கு
முரசு முதலிடம் தரும்.

துணிச்சலாய் எழுதுங்கள்.
ஆனால்-சுவையாக எழுதுங்கள்.
கரம் கொடுக்க
முரசு காத்திருக்கிறது!

படைப்பாளிகளைவிட
படைப்புக்களின் வலிமைக்கே
முரசு முகம் மலர்த்தும்.
திறமை கண்டு சிலிர்த்து
ஆசனம் கொடுத்து கௌரவிக்கும்!

வாசக நெஞ்சங்களை
125வது படிக்கட்டில் நின்று
முரசு ஆரத்தழுவுகிறது.
என்றென்றும் உங்கள்
நம்பிக்கைக்கு
முரசு-விசுவாசமாயிருக்கும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## பயப்படாதே!

நீ பயப்படாதே! நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன். (ஏசாயா 41:10)

கர்த்தர் நம்மைப் பார்த்து "பயப்படாதே" என்று சொல்லுகின்றார். இதைமீறி நாம் பயப்படுவோமாகில் கர்த்தரை நாம் விசுவாசிக்கவில்லை என்று அர்த்தம். பயமுள்ளவனால் சத்துருவை எதிர்த்துநிற்க முடியாது. பயமுள்ளவன் தோல்வியை நோக்கி நடைபோடுகிறான். கர்த்தர் "நீ பயப்படாதே" என்று சொன்னது மாத்திரமல்ல; கூடவே ஒரு உடன்படிக்கையையும் கொடுக்கின்றார். "நான் உன்னுடனே கூட இருக்கிறேன்" என்கிறார். மனுஷரைக்கண்டு, பயப்படாதீர்கள். எங்களை குறித்து வீணாய் பேசும் நாவுகளை கண்டு பயப்படாதீர்கள். முன், பின் தெரியாத மக்கள் மத்தியில் வாழ்வதைக் கண்டு பயப்பட வேண்டாம். வேதம் சொல்லுகிறது. "நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்" (யோசுவா 1:9). அவர் எப்பொழுதும் எங்களுடனே இருக்கிறபடியால் நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. வாக்குரைத்தவர் உண்மையுள்ளவர். கலக்கங்கள், பீதிகள், துயரங்கள் வரும்போது தேவனை நோக்கி பார்ப்போம். இன்றைக்கு கர்த்தர் உன்னுடைய கரம் பிடித்து "நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை" என்று வாக்களிக்கிறார். நாம் தேவனுடைய ஜனங்கள் மாத்திரமல்ல, தேவனை நோக்கிப் பார்க்கிற ஜனங்களாக இருக்கவேண்டும். நம்பிக்கையோடு தேவனை நோக்கி பார்ப்போம். அவர் தாமே உதவி செய்வாராக.

ஜெயமணி போல், கொழும்பு-14.

# ஆன்மீகம்



## வள்ளல் நபியின் வதன வாட்டம்

ஒரு சமயம் ஆயிஷா (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ்வின் "திருத்தூதரே! ஆகாயத்தில் மேகக் கூட்டங்களைக் கண்டதும் மக்கள் மழை பெய்யப்போகிறது என்று குதூகலம் அடைகின்றார்கள். தாங்கள் மட்டும் இதற்கு மாறாக திடுக்கிட்டு வதனம் வாட்டம் அடையக் காரணமென்ன?" என்று கேட்டார்கள்.

அதற்கு வள்ளல் நபி (ஸல்) அவர்கள் "இந்த மேகத்தினால் மழையே பெய்யும் என்று எவ்வாறு நம்ப முடியும்? இது அல்லாஹ்வின் சோதனை மேகக் கூட்டமாக இருந்துவிட்டால்?

"ஆத்" என்ற வர்க்கத்தினரின் அழிவுக்கு காற்றே காரணமாயிருந்தது. கரு மேகத்தைக் கண்ட இவர்கள் இன்று மழை பெய்யப்போகிறது என்று ஆனந்தமாய் ஆடிப்பாடி கூத்தாடினார்கள். அந்த மேகத்திற்கு பிறகு அதி வேகக் காற்றை அல்லாஹ் அனுப்பி அவர்கள் அனைவரையும் அழித்துவிட்டான் ஆயிஷாவே" என்றார்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-05..

## கவிதைப்போட்டி இல-122

### பரிசுக்குரிய கவிதை

### சுடுகாட்டிலும் இடமில்லையோ?

முத்து வளம் செழித்து வந்த
எந்தன் குடா நாட்டில்
செத்து செத்து மனித மங்கே
மடியுது பார் வீதியிலே!
பெத்த மனம் பித்து கொண்டு
அலையுது தம் வீட்டில்
எந்தனுக்கு இடமில்லையோ
இனிமேல் சுடுகாட்டில்!

எஸ். கோடீஸ்வரன், ஆல்டி கீ.பீ., பொகவந்தலாவை.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



**தற்கொலையோ?**

ஐயன் ஒருவன் அகந்தன்னை சர்த்து
மெய்யாய் கரம் பிடிப்பேன் என்றுரைத்த கதை
பொய்யாகிப் போனதால் வாழ்வு எதற் கென்று
தையல் மனமுடைந்து தற்கொலை புரிந்தனளோ?

திருமதி. மல்லிகா பத்மநாதன், டெமேரியா குரூப், பசறை.

**இறப்பு!**

வாசித்து முடித்த
வாழ்க்கை நூலுக்கு
நிரந்தர நிம்மதி!
இது தான்.

இளை ரவி, மட்/புன்னைச் சோலை.

**நவீன அகலிகை**

இராம பாதங்கள் அல்ல.
இராவண பாதங்களாவது
தன் மேல் படாதா
என-
கல்லாகிக் காத்திருக்கும்
நவீன அகலிகை
இவள்!

ஹஜேந்தினி மகேந்திரன், மட்டக்களப்பு.

**விடை பகரக் கூடாது!**

விடிந் தெழுந்து வேலைக்கு!
அனுப்பிவைத்த கணவரவர்!
கதிரவன் மறைந்த பின்னும்
வீடேக வில்லை யென்று?
வெம்பி அயர்ந் துறங்கும்
வெண்மனது தாயுனக்கு!
விடிவே: விதவை என்று
விடை பகரக் கூடாது!

திஜந்திக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு.

**தொடர்ந்தும் பலன்....**

தூவிய இனவாத விதைகள்
தொடர்ந்தும் பலன் அளிக்குது-
வாவிகளில் மட்டுமல்ல
வழி நெடுக சடலந்தான்
ஏவுங்கள்... ஏவுங்கள்...
எல்லோர்க் குந்தான் அழிவு!

சிவா . ஜீ. மட்டக்களப்பு.

**ருசி**

மங்கையிவள் மனத்துள்
மறைத்துவைத்த கனவுகள்
நனவுகள் ஆகுமுன்னே
நடுரோட்டில் நாய்க்கோலம்!
சந்தி சிரித்தாலென்ன
சவச்சாலை அழுதாலென்ன
ருத்திரதாண்டவம்
ருசிகண்டுவிட்டதே!

தர்மபாலன் கீதாஞ்சலி, மட்டக்களப்பு.

**மனிதாபிமானம்**

மறைந்து விட்ட மனிதாபிமானம்
மறுபடியும் உதிக்கும் வரை
மனித பிணங்கள் வீதியிலே
மதிப்பற்று கிடக்குமம்மா

கி. ராஜேஸ்வரி, சம்பூர்-07.

**கொடுமை!**

கடல்வழியே வந்து
கரையொதுங்கும் காரிகையும்,
குறிதவறிய கோரப் போரின்
கொடுமையில்தான் சிக்கியதோ??

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

**சோகம் மாறுமா...?**

"முன்னோக்கிப் பாய்தலால்"
மூண்ட சோகம்
மாறுமுன்னே
"இடி மின்னல்" வந்ததனால்
இடையில் விழுந்தாளோ...?

ச. கண்ணன், பேராதனை.

## கவிதைப் போட்டி இல-125



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 04.11.1995 -முகவரி- கவிதைப் போட்டி இல: 125
தினமுரசு வாரமலர் த.பெ.இல-1772, கொழும்பு.

**சமூக வதை**

சீதன அபராதம்
செலுத்தத் தவறியவள்
அடுப்பு எரித்து எரித்து
சமையல் அ(சி)றைக்குள்ளே
சருகாகிப் போனவள்
புகைத்து முடிந்தபின்
விசப்பட்ட-ஒரு
சிகரட் பில்டர் போல....

அ.லெ. பதுர்தீன், காத்தான்குடி.

**முரண்பாடு!**

அந்தோ பரிதாபம்!
அனாதரவாய்-ஓர் அபலை
அமைதியாய் அடங்கிப்
போனாள்.......!
ஆனால்... நாமின்னும்
ஜனநாயக வாதிகளாம்!

தேன்மொழி, கொழும்பு.

**அநாதை**

பொது மேட்டு நிலமென்ன,
புதுசா?
இதை விட இடமில்லை.
கண்ணுறங்க.
வீட்டோடு பொருளும்.
ஊரோடு உறவும்,
ஒன்றாக(ப்) பலியான.
பின்னே!

ருத்திரா சின்னதுரை,
மட்/சிங்களவாடி.

**அபாயம்!**

மலிந்துவிட்ட
மனித வெடிகுண்டு இது!
மயங்கி விடாதீர்!!
சிதறிவிடுவீர்!!!

மட்டுநகர்-டினேஸ் கண்ணா.

**வாழ்க**

மஞ்சத்துக் கனவுகளை சுமந்த
நெஞ்சத்துக் கோபுரங்கள்,
மண்மீது விழ்ந்து
மாதின் உடல் சுமக்க,
வஞ்சித்த வீரமாந்தர்
வாழ்க வாழ்க!

இ.நவசீலன், களுவாஞ்சிகுடி.

## வாசகர் சாலை

இராஜதந்திரியின் அரசியல் அலசல் நிதானமாய் நின்று நாட்டு நிலமைகளை துல்லியமாகத் தொட்டுக் காட்டுகிறது.

வா.சண்முகநாதன், பதுளை.

தணிக்கை மத்தியிலும் பக்கச் சார்பின்றி வழக்கமான சூட்டோடு அரசியல் விமர்சனங்கள் தருவதைப் பாராட்டுகிறோம். முரசைப் பார்த்துபின்னர்தான் நாம் செவிவழி கேட்ட செய்திகளின் உண்மை எது? பொய் எது? என்று உறுதிசெய்ய முடிகிறது.

எம்.ரகுராஜ், கொழும்பு-13.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு முரசின் சேவை ஒருபடி மேலோங்கி விட்டது.

கே. வின்சன்ட், மட்/ சத்துருக்கொண்டான்.

அழகிய தகவல்களோடு அறிமுகமாகும் வியோடெயின் தகவல்கள் முரசுக்கு பிளஸ் பொயின்ட்.

செல்வி.சமீனா ஹுஸைசன், தர்காநகர்.

மனித வெடிகுண்டு கார்லோஸ் தொடரில் சூடுபிடித்திருக்கிறது. தனி ஒரு ஆளாய் எத்தனை சூரத்தனம்!

எல்.உதயகுமார், மட்டக்களப்பு.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:
சிறாஜ் றகுமான், சிறாஜ்நகர்.
செல்வின்ஸன், ஷிபா, பர்வீன், நுஸ்பா, நிலூபா-புத்தளம்.
மனோ, மனோகரன்-ஹப்புத்தளையூர்.
நஸ்ராஜ் சமக்தீன்-கந்தளாய்.
சி.விஜயகுமார், கிரான்-வாழைச்சேனை.
களுத்துறையூர் லைலா, கொழும்பு-12.
என்.சபீர், கின்னியா.
கே.ரணிகா தீபாஞ்சலி, பன்வேகொட.
மு.செல்வநாயகம், டென்ஸ்வர்த்.
எஸ்.ஏ.சி.உம்முஸலாஹிமா, ஹொறொவப்பொத்தானை.
ஏ.கனிசியஸ் ஜோன், கொழும்பு-15.
க.உதயகுமாரன், எருவில், களுவாஞ்சிக்குடி.
பா.பூபாலசிங்கம், கவிற்லவர்லாந்து.
எஸ்.சந்திரமூர்த்தி, செட்டியார்த்தெரு-கொழும்பு-11.
செல்வன் க. ஹரிகரராஜ், ஆரையம்பதி-01.
ரி.திரேஸ்குமார், பசறை.
பத்மா டெய்சி, கலவான.
செல்வன்.எம்.அகிலன், என்பீல்ட் எஸ்டேட்-டிக்கோயா.
ஹேமாதேவி வேலுசாமி, கொட்டல்பெத்த, ஹுனுகல.
மகேஸ்வரி ராமதாஸ், வரகாஸ்தென்ன-வத்தேகம.
த.ரஞ்சி, மட்/செற்றுக்குடா.
எஸ்.கிஷோக்குமார், மாத்தளை.
ஜெஸ்மின்-ஏறாவூர்.
செல்வி.தயா. அனானி, குவைட்.
பிரகதீசன்-மானிகாவத்தை.
மு.தர்மலிங்கம், கரவெட்டி, மட்டக்களப்பு.



கார்லோஸ் கதா நாயகனா, வில்லனா? ஒரே 'திரில்'லாக இருக்கிறதே.

மு.சரோஜினி, திருமலை.

அரசியல் தொடர், இராமாயணம், இலக்கியநயம் அனைத்தும் படு சூப்பர்.

செல்வி. ஸமீனா ஸலாம், நாவலப்பிட்டி.

மகாபாரதத்தில் மயங்கிவிட்டு, இப்போது இராமாயணம் ரசித்துக் கொண்டிருக்கிறேன்.

க.ரவி, பள்ளிக்குடியிருப்பு.

கடல் கடந்து வாழும் எமக்கு முரசு ஒரு வரப்பிரசாதம். அரசியல் செய்திகளும், இலக்கிய நயமும் வெகு பிரமாதம்.

ஏ.தேவகுமார், வி.லோரன்ஸ், சவுதி அரேபியா.

'விலை உயர்ந்த குற்றம்' பட்டுக்கோட்டை பிரபாகரின் எழுத்து நடையில் இளமையின் துள்ளல் கவருகிறது.

கே.பானுமதி, குருநாகல்.

நாட்டு நடப்போடு கலந்து வரும் சிறுகதைகளுக்கு முரசு முன்னுரிமை கொடுத்து வருவதையிட்டு பாராட்டவே வேண்டும்.
தொடரட்டும், தொடர்க.

செல்வன்.சத்தியேந்திரன், கொட்டாஞ்சேனை, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# வடக்கில் 29 பேருக்கு மரண தண்டனை

# உளவாளிகள் என்று புலிகள் தெரிவிப்பு

## முகாம்களை காட்டிக் கொடுத்ததாகக் குற்றச்சாட்டு

(யாழ் நிருபர் வர்மா)

**கடந்தவாரம் வடபகுதியில் புலிகள் இயக்கத்தினரால் 29 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 29 பேரும் தமிழர்களாவர். தமது முகாம்கள் பற்றி தகவல் கொடுத்தனர் என்று புலிகளது யாழ் மாவட்ட உளவுப்பிரிவுப் பொறுப்பாளர் 'பொஸ்கோ' பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்-**

### விபரங்கள் தெரிவிப்பு

கடந்த ஜூலை மாதம் 28ம் திகதி புலிகள் அமைப்பினரால் வெலி ஓயாவில் நடத்தப்பட்ட 'இதய பூமி 2' தாக்குதல் தோல்வியில் முடிந்திருந்தது. படையினருக்கு முன்கூட்டியே தகவல் சென்றதால்தான் தோல்வி ஏற்பட்டது என்று புலிகள் அமைப்பினர் கூறியிருந்தனர்.

அதனையடுத்து நூற்றுக்கணக்கானோர் வடபகுதியில் புலிகள் அமைப்பினரால் கைது செய்யப்பட்டனர். இச் செய்தியை ஏற்கனவே முரசு வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

அவ்வாறு கைது செய்யப் பட்டவர்களில் 29 பேருக்கு கடந்த வாரம் 19.10.95 இல் புலிகள் அமைப்பினரால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் 29 பேரின் பெயர் விபரங்களும், குற்றச்சாட்டுக்களும் வெளியிடப்பட்டன.

புலிகளது யாழ் மாவட்ட உளவுப்பிரிவுப் பொறுப்பாளர் 'பொஸ்கோ' அந்த விபரங்களை வெளியிட்டார். வடபகுதியில் இருந்து தகவல்கள் வெளியே செல்வதை தடுக்கும் பலத்த எச்சரிக்கையாகவே 29 பேருக்கும் ஒரே நேரத்தில் மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

யாழ் குடாநாட்டுப் பத்திரிகைகள் மூலமும், புலிகளின் குரல் வானொலி மூலமாகவும் தமது நடவடிக்கையை புலிகள் அமைப்பினர் பெரியளவில் பிரசாரப்படுத்தியுள்ளனர்.

பத்திரிகையாளர் மாநாட்டில் பொஸ்கோ அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"மக்கள் தாம் அறிந்துகொண்ட எந்தத் தகவலையும் மற்றவர்களுக்குத் தெரியப் படுத்தக் கூடாது. குறிப்பாக இடம்பெயர்ந்த மக்க ளோடு தாமும் இடம்பெயர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு உளவாளிகள் தங்கியிருக்கலாம். எனவே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்" என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### குற்றச்சாட்டுக்கள்

மரணதண்டனை விதிக்கப்பட்ட 29 பேர் தொடர்பான குற்றச்சாட்டுக்களையும் பொஸ்கோ வெளியிட்டார்.

9.07.94 இல் வவுனியாவில் புலிகளது சோதனை நிலையம் இராணுவத் தாக்குதலுக்கு உள்ளாக காரணமாக இருந்தது- அதில் 2 புலிகளும் பொது மக்களில் ஒருவரும் பலியானார்கள்.

27.04.94 இல் ஓமந்தை இறம்பைக் குளத்தில் புலிகள் இயக்க முகாம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தாக்கப் பட காரணமாக இருந்தது.

13.01.94 இல் நெடுங்கேணிச் சந்தியில் புலிகள் இயக்க முகாம் விமானத்தாக்குதலுக்கு உள்ளாகக் காரணமாக இருந்தது.

12.07.94 இல் மன்னாரில் கடற்புலிகள் முகாம்மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட காரணமாக இருந்தது.

இந்த வருடம் 15.5.95 இல் மன்னார் குஞ்சுக்குளத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலுக்கு காரணமாக இருந்தது.

28.7.95 மணலாறில் (வெலிஓயா) மேற்கொள்ளப்பட்ட புலிகளது தாக்குதல் வெற்றிபெற முடியாமல் போனதுக்கு காரணமாக இருந்தது.

போன்ற குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப் பட்டுள்ளதாக புலிகளது யாழ் மாவட்ட உளவுப் பிரிவுப் பொறுப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

### பெயர் விபரங்கள்

புலிகளால் மரணதண்டனை விதிக்கப் பட்ட 29 பேரில் சிலரது பெயர் விபரங்கள் வருமாறு: காளிமுத்து இலட்சுமணன், கனகரத்தினம் சந்திரன்- அச்செழு, யாழ்ப்பாணம், வேலாயுதபிள்ளை மகேந்திரன்- கனகாம்பிகைக் குளம், கிளிநொச்சி, கந்தையா பஞ்சலிங்கம்- புதுக்குடியிருப்பு 4, முல்லைத்தீவு, பெனடிக்ற் குயின்ரன்- 3ம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம், கதிர்காமர் சுந்தரலிங்கம்- ஊரியான், கைதடி மேற்கு, யாழ்ப்பாணம், இராசையா இரஞ்சன்- சின்னக்கடை, மன்னார், வீரையா வைத்திலிங்கம்- விளக்குவைத்தகுளம், வவுனியா. ஐயம்பிள்ளை சிங்கராசா- நாம்பன் குளம், ஓமந்தை, ஆதிமூலம் தர்மலிங்கம்- புளியங்குளம், வவுனியா, செபஸ்தியாம் பிள்ளை அந்தோனிப்பிள்ளை- அலம்பில் முல்லைத்தீவு. சிவசம்பு ஜெகநாதன்- முள்ளியவளை-3, இராசரத்தினம் இராசேந்தின்- மயாவீதி, முழங்காவில் ஆகியோரும் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

### வதந்திகள்

யாழ் குடாநாட்டிலும் சகட்டுமேனிக்கு வதந்திகள் பரவிவருகின்றன. அதனால் புலிகள் இயக்க காவல்துறை கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. வதந்திகள் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

# வடக்கில் கடும் மழை

யாழ் குடாநாட்டில் இடம்பெயரும் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது.

கடந்தவாரத்தில் கழிபுரம், பொன்னாலை, பண்டத்தரிப்பு, வடலியடைப்பு,பண்ணாகம் பகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் சந்தி, மற்றும் புத்தூர்-நவக்கிரி பகுதிகளில் அடிக்கடி மோதல்கள் நடைபெற்றுவருகின்றன. கடந்த சில நாட்களாக கடும் மழை பொழிய ஆரம்பித்துள்ளது. கடும் மழை ஆரம்பமானபோது மோதல்களும் கடந்த சில நாட்களாக உக்கிரமடைந்துள்ளன. 21.10.95 அன்று புத்தூரில் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை கடும் சமர் நடைபெற்றது. இரவு பகலாக ஷெல் முழக்கங்கள் கேட்ட வண்ணமுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு-செங்கலடி தாக்குதலில் பலியான 16 புலிகளது பெயர் விபரங்கள் யாழப்பாணத்தில் வெளியிடப் பட்டுள்ளன.

# எரிபொருள் குத தாக்குதல்கள்

## வடக்கில் புலிகள் வெளியிட்ட செய்தி

கடந்த 20.10.95 அன்று கொழும்பில் எரிபொருள் குதங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து இதுவரை புலிகள் இயக்கத்தினர் உரிமை கோரவில்லை.

எனினும் மறைமுகமாக ஒப்புக் கொள்ளும் வகையில் புலிகளின் குரல் வானொலி செய்திகளை ஒலிபரப்பியது.

"புலிகளைத் தவிர வேறு யாரும் இப்படியான தாக்குதலை நடத்த முடியாது என்று சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்" என்று புலிகளின் குரல் வானொலி கூறியது.

அதேபோல சிங்கள கிராமங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்தும் புலிகளின் குரல் பின்வருமாறு 21.10.95 இரவு அறிவித்தது. "பொலநறுவைப் பகுதியில் இனம் தெரியாத நபர்கள் தாக்குதல்." என்று மட்டும் தெரிவிக்கப்பட்டது. அத் தாக்குதலுக்கு புலிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள போதும், அதனைப் புலிகள் மறுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை

## தமிழ் கட்சிகள் எதிர்ப்பு!

கப்பல், துறைமுக, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் மீது பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

2.11.95 அன்று ஐ.தே.கட்சியின் மூத்த தலை வர்களில் ஒருவரான விஜயபால மெண்டிஸ் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

காலி துறைமுகத்தை கட்டி முடிக்கும் பணியை குத்தகை விட்டதில் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்து வருகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான கந்தசாமி நாயுடுவுக்கே குத்தகை வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரனை வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் ஆளும் தரப்பு எம்.பிக்களும், தமிழ் கட்சி எம்.பிக்களும் பிரேரனைக்கு எதிராகவே வாக்களிப்பார்கள் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

இரகசிய வாக்கெடுப்புக்கு விடுமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுக்கலாம் என்றும் தெரியவருகிறது. இரகசிய வாக்கெடுப்பா.பகிரங்க வாக்கெடுப்பா என்பதை சபாநாயகரே தீர்மானிப்பார்.

# "சர்வதேச நீதிமன்ற விசாரணை தேவை"

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் புலிகள் அமைப்பினரால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் 2½ மணிநேரம் நீடித்தது.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமைச் செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சிறிலங்கா அரசால் தமிழீழத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை விசாரிக்க பொஸ்னியா, ருவாண்டா போன்ற நாடுகளில் செய்தது போல சர்வதேச நீதிமன்றம் நிறுவப்படவேண்டும். தமிழீழ அரசை அங்கீகரிக்க வேண்டும். தமிழ் மக்களது ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை அங்கீகரிக்க வேண்டும், போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

# கண்டியில் மின் விநியோகம்

கண்டி மாநகர சபையின் பொறுப்பிலிருக்கும் மின்சார விநியோகத்தை புனரமைக்க நீர்ப்பாசன மின் சக்தி அமைச்சர் கேர்ணல் அநுருத்த ரத்வத்தை உறுதி பூண்டுள்ளார்.

கண்டி மாநகர சபையின் நிருவாகத்தில் இயங்கும் மின் விநியோகம் அடிக்கடி தடைப்படுவதால் மாநகரசபை எதிர்க்கட்சியினரும் வரியிறுப்பாளர்களும் அமைச்சரிடம் கேட்டுக்கொண்டதையடுத்தே மின் விநியோகம் அமைச்சிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதன் பொருட்டு 39 கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

# பொறுப்பில் இருந்து பொட்டம்மான் நீக்கம்!

## பொருளாதாரப்பிரிவுத் தலைவருக்கும் பிரச்சனை

(நாரதர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டம்மான் பதவியில் இருந்து நீக்கப் பட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இது தொடர்பாக முரசுக்கு கிடைத்துள்ள தகவல்கள் வருமாறு:

கடந்த ஜூலை மாதம் வெலிஓயாவில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பொட்டம்மானின் நேரடி வழிநடத்தலின்படியே உளவறியும் வேலைகள் நடத்தப்பட்டன. தாக்குதல் நடத்தப்படுவதற்கு முதல் நாளன்றும் பொட்டம்மானின் உளவுப்பிரிவினர் தாக்குதல் நடத்தப்பட வேண்டிய முகாம்களையும், அவற்றின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கண்காணித்து பச்சைக்கொடி காட்டியிருந்தனர்.

அதனை நம்பியே தாக்குதல் நடத்தப் பட்டது. ஆயினும் படையினர் தமது பாதுகாப்பு ஏற்பாடுகளில் பல மாற்றங்களை செய்து வைத்திருந்து புலிகளது தாக்குதல் பிரிவுகளை சுற்றிவளைத்தனர். பாதுகாப்பு ஏற்பாடுகள் மாற்றமடைந்தமையை கண்டறிய முடியாமையால் உளவுப்பிரிவுத் தலைவரே தோல்விக்குரிய முக்கிய பொறுப்பை ஏற்கவேண்டியதாகியது.

அதுதவிர கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த சில தாக்குதல்கள் காலம் தள்ளிப் போனதும், புலிகளது உளவுப்பிரிவினர் சிலர் கைதுசெய்யப்பட்டு தகவல்கள் சில வெளியானதும் குறிப்பிடத் தக்கது. சரியான நபர்களை தெரிவு செய்து அனுப்பத் தவறிவிட்டதாகவும் பொட்டம்மான் குற்றம் சாட்டப்பட்டார்.

யாழ்-குடாநாட்டில் அக்டோபர் மாதத்தின் பின்னரே தாக்குதல் நடத்தப்படும் என்றே புலிகளது உளவுப்பிரிவுக்கு தகவல் கிடைத்திருந்தது.

ஆனால், படையினர் அக்டோபர் மாத ஆரம்பத்திலேயே தாக்குதலை ஆரம்பித்து விட்டனர்.

திறமைக்கே முதலிடம் என்று புலிகளது தலைவர் பிரபாகரன் கூறிவருவதால், பொட்டம்மான் மீது நடவடிக்கை எடுத்தேயாக வேண்டியிருந்தது.

அதனால் உளவுப்பிரிவுத் தலைவர் பதவியிலிருந்து பொட்டம்மான் தூக்கப் பட்டார். பொட்டம்மானின் கீழ் இரண்டாவது பொறுப்பில் இருந்த கபில் அம்மான் பொறுப்பாளராக்கப்பட்டுள்ளார். வேறு தண்டனை எதுவும் இதுவரை வழங்கப் படவில்லை.

இதேவேளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகத்தின் பொறுப்பாளராக இருந்த புலிகளது மூத்த உறுப்பினர் டொமினிக் பொறுப்பில் இருந்து விலக்கப் பட்டதோடு, கடுமையான விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார்.

டொமினிக் நிதி மோசடியில் சம்பந்தப்பட்டதாலேயே விலக்கப்பட்டார் என்று புலிகளது வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் வேறு ஒரு தகவலின்படி, பிரபாகரன் மீது விமர்சனம் செய்தது மூலமே அவர் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

"தாக்குதல்கள் வெற்றி பெற்றால் தலைவரது நெறிப்படுத்தலில் நடத்தப் பட்டதாக கூறுகிறோம். அப்படியானால் வெலிஓயாத் தாக்குதல் தொடர்பாக என்ன சொல்லுவது? அதையும் தலைவர்தானே நெறிப்படுத்தினார்" என்று டொமினிக் தனக்கு நெருக்கமானவர்களோடு பேசியிருக்கிறார். விஷயம் எட்டவேண்டிய இடத்தை எட்டி விட்டதுதான் பிரச்சனைக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

டொமினிக் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்.

# பிதா அவரை மன்னிப்பாரா?

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் நடைபெற்ற சில அசம்பாவிதச் சம்பவங்களுக்கு மத குருவானவர் ஒருவர் பின்னணியில் நின்றதாகக் கூறப்படுகிறது.

பிரார்த்தனைக் கூட்டத்தில் வைத்து தமிழர்கள் விஷம் போன்றவர்கள் கவனமாயிருக்க வேண்டும் என்று அவர் கூறினாராம். அதனையடுத்தே சில அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றதாக தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட மதகுரு இனவாதம் கொண்டவர் என்பதற்கு பல உதாரணங்கள் கூறப்படுகின்றன.

பொதுத் தொலைபேசி கூண்டு ஒன்று அவரது தேவாலயம் முன்பாக இருந்ததாம். அதனை தமிழ் மக்களே அதிகம் பயன் படுத்தியதால், அங்கிருந்து அந்த தொலைபேசிக் கூண்டையே அகற்ற வைத்துவிட்டார்.

தற்போது பெரிய நாய் ஒன்று வளர்த்து வருகிறார். வீதி வழியாக தமிழர்கள் யாராவது செல்வதாகத் தெரிந்தால் நாயைச் 'சூ'க்காட்டி விடுகிறாராம். பரமபிதாவே அவரை மன்னிப்பீரா? அவர் தான் செய்வது இன்னதென்று தெளிவாக அறிந்தே தவறு செய்து கொண்டிருக்கிறார்.

# கிழக்கில் எரிபொருள் நெருக்கடி

## ஒரு போத்தல் பெற்றோல் 60 ரூபாய்

(ஏறாவூர்-ஊத்தான்குடி நிருபர்)

கொழும்பில் எரிபொருள் குதங்கள் தாக்கப்பட்ட செய்தியை அறிந்தவுடன் கிழக்கு மாகாணத்தில் எரிபொருள் பதுக்கல் ஆரம்பித்தது.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக வாகனங்களின் நீண்ட கியூவரிசை காணப்பட்டது. பொலிஸ் பாதுகாப்பும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் எரிபொருள் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. ஒரு போத்தல் பெற்றோல் 60 ரூபாய்க்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டது.

பருவமழை தாமதமானதாலும், எரிபொருள் தட்டுப்பாட்டாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் உயிர் நாடியான பெரும் போகச் செய்கையில் இம்முறை பெரும் வீழ்ச்சி ஏற்படக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இதேவேளை சமீபத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட மட்டக்களப்பு பதுளை வீதி உள்ளூர் போக்குவரத்திற்காக மட்டுமே திறந்து விடப்படுகிறது.

### கண்ணிவெடி மாட்டியது.

ஏறாவூருக்கு அருகில் உள்ள ஆறுமுகத்தான் குடியிருப்பில் நிலக் கண்ணிவெடிகள் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டன. நிலத்திற்கடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த அக் கண்ணிவெடிகள் பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்தே கண்டுபிடிக்கப்பட்டன. நிலக்கண்ணிவெடி தாக்குதல்கள் குடியிருப்புக்கள் மத்தியில் நடைபெற்றால் தாமும் பாதிக்கப்படலாம் என்று பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

மொரக்கொட்டாஞ்சேனையில் சமீபத்தில் நடந்த சம்பவம் ஒன்றில் 7 வயது சிறுவனும் 50 வயதுப்பெண்மணியும் பலியானார்கள். 14 பேர் காயமடைந்தனர்.

# கூடை-விளக்குமாறு சகிதம்

## நகரசபை உறுப்பினர் ஆஜர்

திருமலை நகரசபைக் கூட்டம் 25.10.95 அன்று நடைபெற்றது. அப்போது அரைக் காற்சட்டையும், மேலே வெற்றுடம்போடும் ஒரு உறுப்பினர் சபைக்குள் பிரவேசித்தார். அவரது கையில் குப்பைக் கூடை ஒன்றும் விளக்குமாறும் இருந்தன.

ரெலோ இயக்க திருமலை மாவட்ட கிளைச் செயலாளரும், நகரசபை உறுப் பினருமான கந்தசாமி லிங்கராஜா (சிங்கன்) என்பவரே அவ்வாறு சபைக்கு வந்த வராவார்.

கடந்த 16.10.95 அன்று பொலிசார் தன்னைக் கைது செய்தமையைக் கண்டிக்கவும், நகரசபை உறுப்பினர்களுக்கு மரியாதை கிடையாது என்று காண்பிக்கவுமே அவ்வாறு சபைக்குள் பிரவேசித்ததாக அவர் சொன்னார். ஆனால் திருமலை நகரசபையில் ரெலோ இயக்கமே நிர்வாகத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# மத்திய மாகாண ஆசிரியர் நியமனம்

## திருப்திதராத புதிய முடிவு!

(கண்டி நிருபர்)

நாடுபூராவும் நிலவும் 8000 தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சையிலிருந்து 5000 ஆசிரியர்கள் மாத்திரமே நியமனம் செய்யப்பட இருக்கின்றனர்.

இதற்கான விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 7ம் திகதியுடன் முடிவடையும். மத்திய மாகாணத்தில் நிலவும் 2800 ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க 1700 பேர் மாத்திரமே நியமிக்கப்பட உள்ளனர். இத் தொகையை தமிழ் பாடசாலைகளின் நலன்கருதி மேலும் 800 ஆக அதிகரித்துத் தரும்படி மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் திரு.வீ.புத்திரசிகாமணி கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு.பத்திரனவை கடந்த வாரம் நடைபெற்ற மாகாணசபைக் கூட்டத்தின் போது கேட்டுக்கொண்டார்.

தோட்டப் பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்படும் ஆசிரியர் நியமனத்தில் இந்து சமயமும் ஜி.ஸி.ஈ.சாதாரண தர பத்திரமும் கருத்திற்கொள்ளப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

# கமிஷனைக் குழப்பிய சந்திராசாமி

இந்திய செய்திகள்

ராஜீவ் காந்தி கொலைச் சதி பற்றி விசாரித்து வரும் ஜெயின் கமிஷன் முன் சந்திராசாமியும் விசாரிக்கப்பட்டார்.

கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சந்திரசாமி பதில் சொன்னார்.

"நான் ஆட்சிகளை உருவாக்கவும் மாட்டேன். கவிழ்க்கவும் மாட்டேன். அரசியலைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் முற்றும் துறந்தவன். மந்திரிகள் என்னிடம் அருள் வாக்குக் கேட்கவும் வருவார்கள். தற்போதைய ஆட்சியில் எனக்கு எந்தச் செல்வாக்கும் கிடையாது. நரசிம்மராவிடம் தனிப்பட்ட முறையில் எனக்கு தொடர்பு உண்டு. பிரதமர் நரசிம்மராவை எனக்குத் தெரியாது. பி.வி.நரசிம்மராவைத்தான் தெரியும்.

அவர் இப்போது பிரதமராகிவிட்டார் அவ்வளவுதான். நான் சி.ஐ.ஏ.ஏஜண்டு அல்ல. இந்திய கலாசாரத்தின் ஏஜெண்டுதான் நான்." என்று தெரிவித்திருக்கிறார் சந்திராசாமி.

# காட்டூண் மூலை




# ஜெயலலிதா சார்பில் ரஜினிக்கு தூது!

## கர்நாடக மாநிலத்தில் சமரச முயற்சி!

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நெருக்கமானவர் கர்நாடக முதல்வர் தேவகவுடா. தேசிய முன்னணியில் ஜெயலலிதா கட்சியை இணைப்பதிலும் தேவகவுடாதான் ஆர்வமாக இருக்கிறார்.

சமீபத்தில் கர்நாடக மாநிலத்திற்கு ரஜினிகாந்த் சென்றிருந்தார். அவரை தனது இல்லத்துக்கு வரவழைத்து சுமார் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தினார் தேவகவுடா.

மிக இரகசியமாக நடைபெற்ற இச் சந்திப்பில் ரஜினிக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே உள்ள பிரச்சினைகளை கேட்டறிந்த தேவகவுடா,



ரஜினியை ஜெயலலிதாவோடு நேரில் சந்திக்க விருப்பமா என்று கேட்டாராம். ரஜினி மரியாதையோடு நாசுக்காக மறுப்பு தெரிவித்து விட்டார். அதனால் தேவகவுடாவின் சமரச முயற்சி பயனளிக்காமல் போய் விட்டது.

இதே வேளை பொதுத் தேர்தல் நெருங்கும் சமயத்தில் ரஜினிகாந்த் அரசியலுக்குள் காலடிவைப்பார் என்று ரஜினி இரசிகர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர் வராவிட்டாலும் ஜெயலலிதா அவரை வரவைத்துவிடுவார் என்று ஆர்.எம். வீரப்பன் நம்பியிருக்கிறார்.

# கொச்சிக்காப் போடியார் எழுதுவது

மட்டக்களப்பு புதினம்

*அய்யாத்துரை அண்ண,*

வெகு காலமாக கடதாசி எழுத மறந்து போனன். எழுத வேணுமெண்டு நினைச்ச நான்தான். பெரிய சவுப்பா கிடந்தித்தன். விடிஞ்சா, பொழுது போகங்காட்டிலும், ஒட்டமும், நடையுந்தான். என்னைத்தயும், புறக்கிக் கிறக்கி எடுக்கத் தானே, புள்ளயள, குடும்பத்த கொண்டு கர சேக்கலாம். காசி கையில நாலு சதம் கிடைக்குது எண்டிதுக்காக கன்னா, பின்னா எண்டும் நாம காரியங்கள பாக்கக் கூடாது தானே அண்ண. வாங்கிக் குடிச்ச தண்ணிக்கு தெண்டமா அண்ண நாவேனும்?

மத்தது, இப்ப-கன்னா, பின்னா எண்டும் எழுதவும் ஏலா அண்ண. விசயம் தெரியாம எழுதிப்போட்டு, புறகு கை கட்டி நிக்கவும் ஏலா. நமக்கென்னத்துக்கு அண்ண, தேவல்லாத புழைப்பு எண்டு கிடந்தித்தன்.

எதுக்கும், அண்ண-நம்மட பழைய கட்டயள் சொல்கிற மாதிரி, 'கோழி மேய்க்கிற தெண்டாலும், 'கோறண மேந்தில மேய்க்க வேணுமெண்டு ஏனெண்டு சொன்னா-கால், கை இசக்கங்' கெட்டுப்போற காலத்தில, இலுவா தெரியும் கோறண மேந்தில வேல.

அண்ண, இந்த கூட்டுக்க சீவன் கிடிந்தா போதும். பென்சன் கின்சன் எல்லாம் கிடைக்கும் இலுவா...?

அப்பிடி இல்லாத ஊட்டில இந்த கிழடு, கட்டயள நாயெண்டும் நம்மட ஆக்கள் கவனிக்கிற இல்ல. கிழிட்டப்பட்டு படிப்பிச்சி, கிடிப்பிச்சி எடுத்தாலும் திருப்பியும் பாக்காதுகள்.

எங்கட மட்டக்களப்பும்-ஒரு சாதியா கிடக்கு. சத்தங்கித்தம் ஊருக்குள்ளதான். என்னவோ தெரியா-பேய் அறஞ்ச போல கிடக்கு.

ஊருக்கு, கிருக்கு போயித்து வருவ மெண்டாலும் இங்கால காலவச்சிப் படுத்தடியும் வேண்டாம்- எண்டு போடி கணபதி வெள்ளாமைக்கு அடிக்க மருந்துப் போத்தல் வாங்க டவுணுக்கு வந்தாப்ப- சொல்லித்துப் போறாரு. நம்மட பழைய ஆக்களும் நல்லா பொடி வச்சிக் கதைப்பானுகள். அதுகும் நம்மட போடி கணபதி எண்டா புடி குடுக்காம கதைச்சிப் போடுவான்.

போடி கணபதி சொல்லித்துப் போறான் -ஆத்துக்கு அங்கால 'நேச்சர்' சரியில்ல எண்டு.


நேச்சர பட்டுக்கிட்டு வைக்க முடிய அண்ண. விளங்கினதெண்டா விளங்கிக்கக.

வாறது, மாரியும் மழையும். மாரிமழைக்கு முன்ன மேடு, பள்ளங்கல்ல என்னத்தையும், பயறு, கியறு, சூரக்கா, கிரக்கா, சோளன, கீளன, இறுங்க, கிறுங்க, எறிய வேணும்.

நாலு, நெல்ல நிலத்தில எறிஞ்சாத்தான், நாலு நெல்லுக் கொட்டயாலும் நம்மட வாயலுக்கு வரும். அப்பதான் அண்ண சந்தோஷம். நெல்லக்கில்ல வச்சிருந்தாத்தான் அண்ண போடி எண்டு நாலு பேர் கதைப்பான். இல்லாட்டி மானம் பறந்திடும் அண்ண.

ஊட்டில-புள்ள குட்டியளோட, இதுகும் பொலிவாக் கிடந்தாத்தான் அண்ண- லெச்சுமியும் கிடப்பா.

அண்ண, எல்லாரும் நம்மப் போட்டு ஆட்டாவண்ணம் ஆட்டுறானுகள். போதாக் குறைக்கு நாம படுற கக்கிசத்தப்பாத்து கடவுளும் கண்ண மூடித்துக்கிடக்காரு. ஒரு வேல வட்டிக்கும் போக ஏலாம கிடக்கு. வாகனத்தில, வண்டிலில ஏறி இறங்க ஏலாமக் கிடக்கு. மனசுக்கெண்டா ஒரு ஒள்ளுப்பமும் ஆறுதல் இல்ல. செத்துப்போனா நல்லம் போல கிடக்கு. ஊருக்குள்ள கிடக்கிறவனுகளும், சும்மா குத்திப் பேத்தித்துக் கிடக்கானுகள். சீவிக்க உட மாட்டான்



போல கிடக்கு. போற, போற வழியில எல்லாம் மசக்கத்துக்கு கடதுறந்தா போடியார் என்ன செய்வார்? புளங்கிற ஆக்கள் என்ன செய்வானுகள்? இது போனாத்தான் எல்லாம் நடக்குமெண்டு. கோணர் பாருக்குக்கிட்டால நடந்துபோன நாகண்டாப் பொடி சொல்லித்துப் போறாரு.

எங்கட ஊரிலயும் புதினத்துக் கெண்டா குறைச்சலில்ல. ஒண்டா, ரெண்டா, மூண்டு எண்டு எல்லாம் 'இசிரைக்'தான். வந்தாறு மூலைப் புள்ளயளும், பள்ளிக்குப் போகாம கிடந்ததாம் எண்டு சித்தாண்டியால வந்த சின்னவப் போடி சொல்லித்துப் போனாரு.

பொடியனுகள்-மாறி மாறி சாப்பிடாம இருந்ததாம்.

அய்யாத்துர அண்ண! வந்தாறுமூலயில இந்த பெரிய படிப்புப் படிக்கிற பள்ளியில பெரிய பெரிய ஆக்களெல்லாம் சேந்து ஏன் இப்பிடிக் கொள்ள கொட்டிறாங்க எண்டு தெரியல்ல. இப்பிடிப் பள்ளி நடத்தினா எப்பிடி அண்ண நம்மட புள்ளயள் பெரிய படிப்புப் படிச்சி பெரிய ஆக்களா வாற?

புள்ளயள நல்லா படிப்பிச்சிக் கிடிப்பிச்சி விடுவம் எண்டு எண்ணாம, வேற புழைப்புகள் எடுத்தா-புள்ளயள் றோட்டில நிக்காம எங்க நிக்கும் எண்டு- கரிச்சான் குஞ்சுர மகன் கதிரிப் போடி கத்தாக்கு மரத்துக்குக் கீழ நிண்டு கதைச்சாராம் எண்டு அறிஞ்ச நான் பொடியனுகள் சரியான கயிட்டப் படுறானுகளாம். இருக்கிற கயிட்டம் காணா எண்டு இதுவும் ஒரு கயிட்டம் வந்து தொட்டிருக்கு. படிக்கிற புள்ளையளுக்கு எதுக்கும் விதைச்சிக் கிதைச்சிப் போட்டு, அங்கால வந்து போக வேணுமெண்டு நினைச்சிருக்கன். பாப்பம் சீவனோட கிடந்தா.


விளம்பரப் பகுதி

**நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!**

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


# சில்லறை லாபம்

(காத்தான்குடி நிருபர்)

புதிய பாண்விலை ஏற்றத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வர்த்தகர்களுக்கு மேலதிகமாக 20 சதம் இலாபமாகக் கிடைக்கிறது. காரணம் சத நாணயங்கள் மட்டு மாவட்டத்தில் பாவனையிலில்லை. அதனால் 3.80 சதமாக விற்கும் பாணுக்கு 4 ரூபாய் கொடுத்தால் 20 சதம் மிச்சமாகக் கொடுப்பதில்லை.

3.75 சதம் கொடுத்தால் 5 சதத்தைக்குறைத்து எடுக்காத வியாபாரிகள் 4 ரூபாய் கொடுத்தால் 20 சதம் தர மறுக்கிறார்கள். இது என்ன நியாயம் என பாண் வாங்குபவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.


அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுந்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28




கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள் நூல்கள் என்வற்றை மொழிபெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
விளம்பர இல: T95, மே/பா தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772 கொழும்பு.

மணிமண்டபம்
WEDDING HALL at WELLAWATTA
மணிமணவறை, வீடியோ, போட்டோ, தம்பதிகளின் அலங்காரம் ஐயர், ஏனைய சகல நிரந்தர ஒழுங்குகளும்அடங்கிய மண்டபம் வேறு வைபவங்களுக்கும் வாடகைக்கு உண்டு.
Tele:503552,592586,595242,595243.
விலாசம்:
58, HAMERS AVE, WELLAWATTA.
பொலிஸ் நிலையத்துக்கு அருகில்

கணனி வகுப்புக்கள்
வெள்ளவத்தையில்
MDS
36,சின்சபா வீதி (சவோய் சினிமா-எதிரில்)
LECTURE IN SINHALA, TAMIL & ENGLISH LANGUAGE
DIP. IN COMPUTERS, WITH WORLD RECOGNIXED CERTIFICATES
கற்போர் வசதிக்கேற்ற வகுப்பு நேரங்கள் தரப்படும். சகலவிதமான கணனி வகுப்புக்களும் உண்டு. உடனே தொடர்பு கொள்ளுங்கள்.
Tele: 590515,592586

கவலை ஏன்?
கட்டுடல் வேண்டுமென ஏங்குகிறீர்களா?
கவலை வேண்டாம். மூன்று வித அளவுகளில்
SALONMAY BUST LINE INCREASER கிடைக்கிறது.
உங்கள் மார்பழகை மெருகூட்ட ஒரே ஒரு வழி.
எடுப்பான கவர்ச்சியான மார்பகங்களைப் பெற்றுவிடலாம். தேவை 'சலோன்மேய் பஸ்ற்லைன் இன்கிரீசர்' அதன் துணை கொண்டு அழகுக்கு அழகு பெறலாம்.



ஏக விற்பனையாளர்கள்
FASNAS BEAUTY SALON
(SCHOOL OF COUSMETOLOGY)
142, W.A. DE SILWA
MAWATTE, COLOMBO-06.
Tel:589457

WHY WORRY
ENLARGED OR FLAT CHEST
➡It Beautifys your shape
➡Uplifts your Bust
➡Firm & Stiffs
Three sizes. Buy a
SOLANMAY BUSTLINE INCREASER


# சிந்தனையை நிறுத்திக் கொண்ட சில்லையூர் செல்வராஜன்

## கலை-இலக்கிய உலகில் உதிர்ந்த நட்சத்திரம்

பல்கலை வேந்தன், தான்தோன்றிக் கவிராயர் என்ற பட்டங்களைத் தாங்கிய திரு.சில்லையூர் செல்வராஜன் முத்தமிழிலும் வல்லவர். தமிழ் இலக்கிய உலகில் கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தனக்கென்றொரு தனிப் பாணியை வகுத்துப் பவனி வந்தார்.

ஐம்பதுகளின் ஆரம்பத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பில் மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. செல்வராஜன் மேடையேறிப் பேசினார். அவருடைய கன்னி(மேடை) பேச்சு அதுதான். 17 வயதுதானிருக்கும் அவருடைய தமிழ் பேச்சு வன்மையால் கவரப்பட்ட தந்தை செல்வா அவர்கள், உடனடியாக 'சுதந்திரன்' வார ஏட்டின் ஆசிரியர் குழுவில் செல்வராஜனையும் சேர்த்துக் கொண்டார். பின்னர் 'வீரகேசரி' வார இதழின் பொறுப்பாசிரியர் பதவியினை ஏற்று சில காலங்களின் பின்னர் 'தினகரன்' பத்திரிகை ஆசிரியர் குழுவில் இணைந்தார்.

சில்லையூரின் ஆற்றலுக்கும் சுதந்திர உணர்வுடன் கூடிய ஆக்கங்களுக்குமான தாகத்தை இப்பத்திரிகைகளால் தணிக்க முடியவில்லை. கட்டுப்பாடுகளற்ற களங்களை தானாகத் தனித்துநின்று அமைத்துக் கொண்டார். இதனால்



நல்ல கவிஞனாக, தலை சிறந்த எழுத்தாளனாக, மேடை திரைப்பட நடிகனாக பரிணமித்தார். தமிழ், சிங்களம், ஆங்கிலத் திரைப்படங்களிலும் தோன்றினார். விளம்பரக் கலையில் ஈடு இணையற்றவராகவும் விளங்கினார்.

சில்லையூர் செல்வராஜன் தனது சிந்தனையை நிறுத்திக்கொண்டார். கலை இலக்கிய வானிலிருந்து ஒரு நட்சத்திரம் உதிர்ந்துவிட்டது. பேரிழப்பு என்பதில் சந்தேகமில்லை.


வெளிவந்து விட்டது!
இம்முறை O/L பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு
விஞ்ஞானம் ஆண்டு 11
(குறிப்புகள், விரிவான வினா-விடை)
விஞ்ஞான விளக்கம் ஆண்டு 10, 11
(210 வினா-விளக்கம் அடங்கியது)
விஞ்ஞானச் சுருக்கம்
ஆண்டு 9, 10, 11
(ஆண்டு 9, 10, 11 இறுதிய சுருக்கம்)
எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும்.
ஆக்கம் : ஆ. யோகராஜா
தொடர்பு: A. Jogarajah,
90/1, Christuraja Mawatha,
Nayakakanda, Hendala, Wattala

DRESSMAKING
தையல் வகுப்பு
Full Course 1 month
Blouse Jacket
Shalwar Frocks
also
Cake icing Flower making
hairstyling beauticulture
AMS - Wellawatte - Opp. Roxy
571/101/1, Galle Rd, T/508062




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# படைகள் அங்கே புலிகள் இங்கே

# மடியில் கைவைக்கும் போர்த்தந்திரம்

அக்டோபர் 9ம் திகதி இரவு கொழும்பு நகரில் ஈ.பி.டி.பி தலைவரது இல்லம் தாக்கப்பட்டது.

மறுநாள் விடிவதற்கிடையில் தாக்கியது புலிகளல்ல என்று ஆளாளுக்கு வியாக்கியானம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

மக்கள் சந்தேகப்படுவதில் தவறில்லை. அவர்களுக்கு உண்மை நிலவரத்தை தெரிவிக்க வேண்டிய பத்திரிகைகள்கூட, தடயங்களை ஆராயாமல் தாமும் வதந்திகளுக்குள் சிக்கிக் கொண்டதுதான் ஆச்சரியம்.

பச்சைத் தொப்பி ஒன்று கிடந்தது. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் பச்சை உடை அணிந்திருந்தார்கள். பச்சை வேனில் வந்தார்கள். இத் தகவல்கள் யாவும் உண்மைதான்.

ஆனால், இரகசியத் தாக்குதலில் ஈடுபடும் எந்தவொரு குழுவும் தம்மை இனம்காட்டும் அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை என்பதை கவனிக்க வேண்டும்.

சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சுற்றிய பாதுகாப்பை மீறி தாக்கியவர்கள் எப்படித் தப்ப முடிந்தது? என்று சாதாரண பொதுமக்கள் சந்தேகம் எழுப்புவதில் நியாயம் இருக்கிறது.

ஆனால், செய்தியாளர்களோ, விமர்சகர்களோ அப்படி சந்தேகப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சுற்றி அமைந்திருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி ஆராய்ந்து விட்டே ஒரு முடிவுக்கு வரமுடியும்.

அதிரடித் தாக்குதல் என்பது சுலபமான பகுதிக்குள் ஊடுருவித் தாக்குவதல்ல. பாதுகாப்புள்ள பகுதிக்குள் இருக்கும் ஓட்டைகளை தீர ஆராய்ந்து தாக்குதல் நடத்தப்படும்.

ஈ.பி.டி.பி தலைவரது இல்லத்திலிருந்து தப்பிச் செல்ல பல ஓட்டைகள் இருந்திருக்கின்றன. தவிர கொழும்பில் அதிரடித் தாக்குதல் உத்தி புதியது என்பதால், ஒரு குழு தாக்கிவிட்டு திரும்பி வரும் என்று பாதுகாப்பு தரப்பினர் எதிர்பார்க்கவுமில்லை.

எங்கோ குண்டு வெடித்துவிட்டது என்ற பதட்டமே எங்கும் நிலவிக் கொண்டிருந்தது.

ஆனால் - வெளியே இருந்து நோக்கும்போது தப்பிச் சென்றமை பலருக்கும் ஆச்சரியத்தை கொடுத்து விட்டது.

முரசில் - கடந்தவார எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் தப்பிச்சென்றதை வைத்து புலிகளல்ல என்று ஒரு முடிவுக்கு வரமுடியாது என்று விளக்கியிருந்தோம்.

தப்பிச் சென்ற வாகனம் நுகேகொட பகுதியை நோக்கிச் சென்றது என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

தற்போது பிடிக்கப்பட்டுள்ள புலிகளது தங்குமிடம் நுகேகொட பாதையால் செல்லக்கூடிய இடத்தில்தான் இருக்கின்றது.

தலைநகரில் புலிகளது கொமாண்டோக்கள் பற்றிய சென்றவார எச்சரிக்கை, முரசு வெளியாகி இரு நாட்களுக்குள் உறுதி செய்யப்பட்டு விட்டது.

ஈ.பி.டி.பி தலைவரின் இல்லம் மீதான தாக்குதல் புலிகளது கொமாண்டோக்களைப் பொறுத்தவரை ஒரு ஒத்திகையாகவும் அமைந்து விட்டது.

அக்டோபர் 20ம் திகதி அதிகாலையில் கொலன்னாவ, ஒருகொடவத்தை எரிபொருள் குதங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் பாவிக்கப்பட்ட அதே ஆயுதங்கள் ஈ.பி.டி.பி தலைவரின் இல்லம் மீதும் பாவிக்கப்பட்டன.

'டொம்பா' என்று அழைக்கப்படும் கிரைனைட் ஏவும் ஆயுதம், மென்ரக மோட்டார் (LAW) போன்றவை பாவிக்கப்பட்டுள்ளன.

40 மில்லி மீற்றர் விட்ட குழாயைக் கொண்ட 'டொம்பா' மூலம் குறைந்தது 200 மீற்றர் தூரம் கிரைனைட் குண்டை ஏவ முடியும்.

தோட்டாக்களால் துளைக்க முடியாத எரிபொருள் குத தாங்கிகளை 'டொம்பா' ஏவிவிடும் கிரைனைட் குண்டு துளைத்துச் செல்லும். 'டொம்பா' என்பது ஆர்.பி.ஜி வகையைச் சேர்ந்தது.

சோவியத் தயாரிப்பான ஆர்.பி.ஜி B-7. ஏற்கனவே வடக்கு-கிழக்கில் ஏனைய தமிழ் இயக்கங்களாலும், புலிகளாலும் பயன்படுத்தப்பட்டது. ஆனால், அவை சற்றே பெரியளவிலானவை. தோளில் வைத்துத்தான் இயக்க முடியும்.

'டொம்பா' சிறிய வடிவிலானது. கையில் வைத்தே சுலபமாக இயக்க முடியும். அதிரடித் தாக்குதலுக்கும் வசதியானது.

LAW என்றழைக்கப்படும் மென்ரக மோட்டார் ஏவிவிடும் ஷெல்லும் தாங்கிகளை உடைக்கக் கூடியது. மோட்டார் ஷெல்களை ஏவியே பிரதான தாக்குதலை புலிகள் நடத்தியிருக்கலாம் என்று நம்பமுடிகிறது.

'LAW' மோட்டாரும் அளவில் சிறியதாக இருப்பதால், சுலபமாக மறைத்துக் கொண்டு செல்லக் கூடியது.

'டொம்பா' மூலமும், LAW மோட்டார் மூலமும் ஈ.பி.டி.பி தலைவரது இல்லம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

கொலன்னாவைத் தாக்குதலும், ஒருகொடவத்தை தாக்குதலும் புலிகளைப் பொறுத்தவரை பாதியளவான வெற்றி மட்டுமே.

புலிகளது இலக்கு டீசல் குதமும், மசகு எண்ணைய் குதமும் அல்ல. பெற்றோல் குதம்மீதுதான் புலிகளது பிரதான குறி இருந்தது.

ஒருகொடவத்தையில் சமையல்வாயு குதம்மீதுதான் புலிகளது குறி. ஆனால், மசகு எண்ணைய் குதம் மட்டுமே மோட்டார் தாக்குதலில் சிக்கிக் கொண்டது.

சமையல் வாயு குதமும், பெற்றோல் குதமும் தாக்கப்பட்டிருந்தால் அனர்த்தம் பயங்கரமாக இருந்திருக்கும். தலைநகர நிலவரம் கவலைக்கிடமாக மாறியிருக்கும்.

போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்துப போய், நிலைமை சீராகவே நீண்டகாலம் பிடித்திருக்கும்.

ஆனால், பலத்த நஷ்டம், பாதுகாப்பு ஏற்பாடுகளில் விழுந்த பலத்த அடி என்பவற்றைத் தவிர, தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது என்று அரசு மூச்சுவிட்டுக் கொள்ள முடிந்திருக்கிறது.

புலிகளைப் பொறுத்தவரை தமது பிரதான தளமான யாழ்ப்பாணத்தில் சமீபகால சமர்களில் கிடைத்த தோல்விகளை, நாட்டின் தலைநகரில் நடத்திய அதிரடித் தாக்குதல் குறித்த வியப்புக்களால் ஈடுகட்ட முனைந்திருக்கிறார்கள்.

யாழ் குடாநாடு புலிகளது தலைப்பகுதியாகும். அங்கு படையினரின் பிடி இறுகும்போது, புலிகள் வெளியே உக்கிரமான தாக்குதல்களை நடத்தக்கூடும் என்று படையினரும் எதிர்பார்த்தே இருந்தனர்.

அது தவிர கொழும்பில் புலிகளது அதிரடிப் பிரிவு நிலைகொண்டிருப்பதை ஈ.பி.டி.பி தலைவரின் இல்லத் தாக்குதல் மூலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியுமிருந்தனர்.

எனினும், சரியாக 11 நாள் இடைவெளியில் இரண்டு பாரிய அதிரடி நடவடிக்கைகளை புலிகள் நடத்தி முடித்துள்ளார்கள்.

இவையெல்லாம் திடீரென்று நடத்தப்பட்ட தாக்குதல்களல்ல. தாக்குதல் திடீரென்று நடத்தப்பட்டாலும் திட்டம் போடவும், தகவல் திரட்டவும் நீண்டகாலம் எடுத்திருக்கிறார்கள்.

ஒருகொடவத்தை எரிபொருள் குதம் அருகே வீடு எடுத்து புலிகள் தங்கியிருந்து நிதானமாக நோட்டமிட்டிருக்கிறார்கள். சந்தேகம்வராதவகையில் நடமாடியிருக்கிறார்கள்.

ராஜகிரியவில் கொட்டா வீதியில் ஒரு வீடெடுத்து தங்கியிருந்து கொலன்னாவ எரிபொருள் குதத்தை கண்காணித்திருக்கிறார்கள்.

அது தவிர, தூரத்தில் இருந்து வருவதைவிட, இலக்குக்கு அருகில் இருந்தே தாக்குதலுக்கு செல்வது சுலபம் என்பதையும் கவனிக்க வேண்டும்.

தாக்குதலுக்கு தலைநகரின் தற்போதைய சூழலில் தம்மால் பயன்படுத்த முடிந்த உச்சபட்ச பலத்தை புலிகள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

குறைந்தது 20 பேர் தாக்குதலில் பங்கு கொண்டுள்ளனர். மூன்று வாகனங்கள் வரை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

தீ பரவாமல் தடுக்கவும், மேலும் பல குதங்களை உள்ளே நின்று தாக்கவும் புலிகள் திட்டமிட்டிருக்கலாம்.

அதற்காக ஏழு பேர் கொண்ட அதிரடிப் பிரிவை மட்டுமே கொலன்னாவ எரிபொருள் குதப் பகுதியில் விட்டுவிட்டு, ஏனைய அதிரடிப் பிரிவினர் தப்பிச் சென்றுள்ளதாக ஊகிக்க முடிகிறது.

நாரதர்



பாதுகாப்புப் படையினர் புலிகள் எதிர்பார்த்ததை விட வேகமாக கொலன்னாவ எரிபொருள் குதத்தை நெருங்கினார்கள்.

அதனால்தான், மூன்று குதங்களை தாக்கியதோடு நிறுத்திக் கொண்டு, புலிகளது அதிரடிப்பிரிவைச் சேர்ந்த ஏழு பேரும் படையினரையோ, தீயணைப்பு படையையோ உள்ளே செல்லாமல் தடுப்பதில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த விமானப் படையினர் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தடயங்கள் மூலம் தெரிகிறது.

முடிந்தால் தப்பிச் செல்வது. அல்லது உயிரோடு மாட்டுவதில்லை என்ற திட்டத்தோடு புலிகளது அதிரடிப் பிரிவின் ஏழு பேரும் செயற்பட்டிருக்கிறார்கள். ஏழு பேரில் ஒருவர் மாட்டியிருந்தால்கூட படையினருக்கு பல தகவல்கள் கிடைத்திருக்க முடியும்.

இதேவேளையில் தாக்குதலுக்கு பயன்படுத்திய ஆயுதங்கள் லொறி ஒன்றில் பத்திரமாக வைக்கப்பட்டு, நீண்டகாலமாக கொழும்பில் ஒரு இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக சந்தேகிக்கப் படுகிறது.

முன்னர் புலிகளது வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனம் ஒன்று கொழும்பு நகரில் ஒரு பௌத்த மத நிறுவன வளாகத்தில் பல மாதங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை நினைவிருக்கலாம். வாடகை செலுத்தி அவ்வாறு நிறுத்தி வைத்திருந்தார்கள்.

அதே பாணியை புலிகள் மீண்டும் பயன்படுத்தியிருக்கலாம். தாம் தங்குமிடத்தில் ஆயுதங்களை வைத்திருக்காமல், லொறியில் லக்ஸ்பிறேயோடும், மீன் ரின்னோடும் பத்திரமாக பாதுகாத்து வைத்திருக்கிறார்கள்.

சம்பவம் நடைபெற்ற தினம் லொறியும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தாக்குதல் குழு ஓரிடத்தில் இருக்கும். தாக்குதல் நடத்தப்படும் தினத்தன்றுதான் அக் குழுவிடம் ஆயுதங்கள் வந்து சேரும்.

தாக்குதலை முடித்துவிட்டு மீண்டும் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும். அப்படித்தான் புலிகளது திட்டம் இருக்க வேண்டும். அதனால்தான் தப்பிச்செல்ல முடிந்த ஒரு குழு தமது ஆயுதங்களை லொறியில் மீண்டும் திருப்பி ஒப்படைத்திருக்க வேண்டும்.

அந்த ஆயுதங்களோடு திரும்பிய லொறிதான் பொலிசாரின் சோதனையில் சிக்கியிருக்கிறது. லொறி என்றால் சந்தேகம் வராது. வேனில்தான் புலிகள் வருவார்கள் என்று பொலிசார் நினைப்பார்கள் என்று புலிகள் கணக்குப் போட்டிருக்கலாம்.

ஆனால், அதிகாலை நேரமும், லொறியில் இருந்த தமிழ் பெயரும் சந்தேகத்தை உண்டுபண்ணியதால் பொலிசார் தீவிரமாக அலசியிருக்கிறார்கள். கிரைனைட், 'டொம்பா', 'LAW' மோட்டார், தற்கொலைத் தாக்குதலுக்கு உடலோடு வெடிகுண்டை தாங்கிச் செல்லும் கவச உடை என்பவை லொறியில் மாட்டிக் கொண்டன.

லொறியில் இருந்தவர்கள் மூலமாக உபயோகமான பல தகவல்களை பொலிசார் திரட்ட முடிந்திருக்கிறது.

முழு விபரமும் தெரியாவிட்டாலும் தமக்கு தெரிந்த விபரங்களையெல்லாம் லொறிச் சாரதியும் கூட இருந்தவர்களும் ஒப்புவித்து விட்டார்கள்.

அதனால் கொழும்பில் இருந்து பறந்த தகவலை வைத்து வவுனியாவில் சிலர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் முன்பு புலிகளுக்கு சீருடைத் துணி கொண்டு செல்லும்போது படையினரால் பிடிக்கப்பட்டு பின்னர் விடுதலையானவர் என்று ஒரு தகவல். எனினும் தாக்குதலில் ஈடுபட்டுத் தப்பிச்சென்ற குழுவினரை இதுவரை பொலிசாரால் கண்டறிய முடியவில்லை. அதுவே பாதுகாப்புப் படையினருக்கு பெரிய சவால்தான்.

பலத்த பாதுகாப்பு வியூகங்கள் மத்தியிலும் எங்கோ ஒரு ஓட்டையைக் கண்டறிந்து புலிகள் மீண்டும் தப்பிச் சென்றுள்ளார்கள்.

தலைநகரில் புலிகளது 'அதிரடி நடவடிக்கை உத்தியை சமாளிக்கப் படைத்தரப்பும் தனது பாதுகாப்பு நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியாக வேண்டிய நிலையில் உள்ளது.

வடக்கில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் புலிகளது ஊடுருவித்தாக்கும் நடவடிக்கைகள் முன்புபோல வெற்றியளிக்கத் தவறியுள்ளன.

தமது வசமுள்ள பகுதிகளில் படையினர் தொடர்ந்து நிலைகொண்டிருப்பது புலிகளது இராணுவபலம் தாழ்ந்திருப்பதாக வெளியே கருதப்படும் நிலையை உருவாக்கலாம்.

யாழ் குடாநாட்டில் புலிகளது கைகள் மேலோங்கியிருந்தமையானது, நாட்டின் ஒரு பகுதியில் புலிகளது ஆட்சி நடப்பதற்கான அத்தாட்சியாக இருந்தது. புலிகளது பலத்தை வெளிப்படுத்தும் உதாரணமாகவும் இருந்தது.

தற்போது படையினர் பெரியதொரு நிலப்பரப்பை தமது வசப்படுத்தியுள்ளதால் புலிகள் பலவீனமாகிவிட்டது போன்ற கருத்து வெளியுலகில் ஏற்படக் கூடும்.

எனவே அதனை முறியடிக்க புலிகள் தமது பலத்தை ஏதாவது ஒரு முனையில் வெளிப்படுத்தவே செய்வர்.

புலிகளது முதுகெலும்பாக இருக்கும் யாழ்குடா நாட்டில் தம்மால் முன்னேற முடிந்திருப்பதை காட்டுவது மூலமே படைத்தரப்பு தனது பலத்தை பிரகடனப்படுத்தியிருக்கிறது.

எனவே புலிகள் அரசின் தலைப்பகுதியில் தம்மால் தாக்குதல் நடத்தமுடியும் என்று காட்டுவதன் மூலம் சமபல நிலையை தக்கவைக்க முயலுகிறார்கள்.

புலிகளுக்கு வடபகுதி எப்படி முக்கியமோ,அதுபோல அரசாங்கத்துக்கு தலைநகரம் முக்கியம்.

இருதரப்பும் மறுதரப்பின் மடியிலே கைவைப்பதுமூலமாக தமது பலத்தை வெளிப்படுத்த முற்பட்டுள்ளன.

ஆனால்-வடபகுதியில் படையினரது நடவடிக்கைகளின்போது புலிகளுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை விட, தலைநகரில் புலிகளது நடவடிக்கையால் அரசாங்கத்துக்கு ஏற்படும் நஷ்டம் பெரியளவானதாக இருக்கிறது.

அரசாங்கமும்,அதன் நிறுவனங்களும் பகிரங்கமாக இருந்து கொண்டு போரை நடத்துகின்றன. புலிகளது தலைமையும், அவர்களது நிறுவனங்களும் இரகசியமாக இருக்கின்றன. எனவே அரச தரப்புக்கு இலக்கறிந்து தாக்குவது கடினமானதாக இருக்கிறது.

தலைநகரில் எரிபொருள் குதங்கள் எங்கேயிருக்கின்றன என்று புலிகளுக்குத் தெரியும். புலிகளும் எரிபொருட்களை நிறைய சேமித்து வைத்திருக்கிறார்கள். அவை எங்கே இருக்கின்றன என்று படைகளுக்குத் தெரியாது. போரில் புலிகளுக்குள்ள சாதகம் அதுதான்.

அந்த சாதகத்தை உடைக்க வேண்டுமானால் வடபகுதியை படைத்தரப்பு தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டியிருக்கும். ஆனால் அது எந்தளவுக்கு சாத்தியம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஏனெனில், நிலப்பரப்பை இழந்துள்ள போதும், தமது தாக்குதல் பலத்தை புலிகள் இழக்காமல் இருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒருபுறத்தில் ஏற்படும் வீழ்ச்சியை மறுபுறத்தில் ஈடுகட்டுவது மூலம் தமது இராணுவபலம் குறித்த 'இமேஜை' புலிகள் பாதுகாத்து வருகிறார்கள்.

எனவே - முடிவு காண முடியாத ஒரு யுத்தம் என்ற கருத்தோட்டம் மட்டுமே தற்போது நியாயமானதாக இருக்கின்றது.

## அதிரடி அய்யாத்துரை



தலைநகரில் நள்ளிரவில் மூண்ட தீயை அணைக்க தீயணைப்புப்படை ஒரு பக்கம் பறந்து கொண்டிருந்தது. மறுபக்கம் பெற்றோல் செற்றுகளை நோக்கி வாகனங்கள் சொயிங்,சொயிங். அது பெற்றோல், டீசல் நிரப்ப! எரியிற செய்தி கேள்விப்பட்டவுடனை வாரிச் சுருட்டிக்கொண்டு எழும்பி வாகனங்களோடை பெற்றோல் செற்றுகளுக்கு ஓடினவை எண்டால்,எந்தளவுக்கு சூழலுக்குப் பழக்கப்பட்டுப் போச்சினம் பார்த்தியளோ.

சனம் அமைதியாக இருக்கவேணும் எண்டு ரேடியோவிலையும்,டி.வியிலையும் சொல்லிக் கொண்டிருந்தவையல்லோ. ஆனால் பாருங்கோ, அதைக் கேட்கவே சனத்துக்கு நேரமிருக்கேல்லை. ரேடியோ இருந்தவை கிரிக்கெட் கொமன்றி கேட்டுக் கொண்டிருந்தவை. டி.வி இருந்தவை கிரிக்கெட் ஆட்டத்தை ரசித்துக்கொண்டிருந்தவை. கிரிக்கெட்டுக்கு நன்றி சொல்லலாம்.

அயல் நாட்டுப் படை வரப்போகுது எண்டு வதந்தி கிளப்பினவை சந்தோஷப்படலாம். தீ அணைக்கும் அயல்நாட்டுப் படை வந்திருக்குதல்லோ. முன்னர் வந்த படை பிரச்சினையை அணைக்க வந்தது. ஆனால் வெற்றி கிடைக்கேல்லை. இப்ப வந்த படை தீயை அணைக்க வந்தது வெற்றி கிடைச்சிருக்குது. ஆக,அயல்நாடு அனுப்பின இரண்டாவது அமைதிப்படை இதுதான். முந்தி வந்த படை இனப் பிரச்சனை எண்ட தீயை அணைச்சிருந்தா, இப்ப வரவேண்டிய அவசியம் வந்திருக்காதல்லோ.

தலை நகர நிலவரம் மற்றும் கிழக்கில் ரெண்டு எழுத்தார் கிராமங்களில் புகுந்தது பற்றி கூட்டான கட்சியின் கருத்தைக் கேட்டதாம் ஒரு பத்திரிகை. தலைவர் சொன்னாராம் நீலமானவரைக் கேளுங்கோ எண்டு. நீலமானவரைக் கேட்க அவர் சொன்னாராம்,"ஐயாவைக் கேளுங்கோ அவர்தான் நல்லாச் சொல்லுவார்" எண்டு. "ஐயா உங்களிடம்தான் கேட்கச்சொன்னவர்" என்றாராம் நிருபர். உடனடியாக நீலமானவர் சொன்னாராம்,"அப்படியோ, நீங்கள் ஒரு பத்து நிமிஷத்திலை போன் எடுங்கோ சொல்லுறன்." பத்து நிமிஷத்திற்கு பிறகு பத்துத் தரம் போன் எடுத்தும் நீலமானவர் போனுக்கு வரவேயில்லையாம். சட்டத்தரணி புத்திசாலி.

பச்சைத்தொப்பி விவகாரம் எங்கேயோ உதைக்குது எண்டு போனகிழமை நான் சந்தேகப்பட்டது சரியாய் போச்சுது. இப்ப கதை என்னவென்று தெரிந்து போச்சு.

குடிச்சுப்போட்டு அடிவாங்கிப்போட்டும் கொட்டியா எண்டு அடிச்சுப் போட்டான்கள் எண்டு சொல்லுறவையை என்ன செய்யிறது? அய்யாத்துரை அதை வெளியே சொல்லும் வரை அடிவாங்கினவை ஏன் மௌனமாய் இருந்தவையாம்? நடந்தது அநியாயம் எண்டால் தாங்களே முதலில் சொல்லியிருக்கலாமல்லோ.

கிழக்கில் தனித்துவத் தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தள்ளிப்போடச் சொல்லிக் கேட்டும் பச்சைக் கட்சி ஒற்றைக் காலில் நிண்டதாம். அதிகாரத்தரப்பு வெகுஜனப் பிரதிநிதிகள் பலர் வெளிநாடுகளுக்கு போய் இருக்கினம். இதுதான் நல்ல சந்தர்ப்பம் எண்டு நினைச்சு பிரேரணையைக் கொண்டுவருகினமாம். வெளிநாட்டிலை இருப்பவையை உடனடியாகத் திரும்பச் சொல்லி உத்தரவு பறந்திருக்குதாம். சபையிலை வாக்கெடுப்பு நடக்குமல்லோ.

நிலவரம் கொஞ்சம் மோசமானால் கிளிநொச்சியை நகரமாக்கும் திட்டம் ரெண்டு எழுத்தாரிடம் இருக்குதாம். அதிகமாக வரேக்கை ஒண்டும் செய்யமுடியாது, விட்டுத்தான் பிடிக்க வேணும் எண்டு ரெண்டு எழுத்து வட்டாரம் சொல்லுறதாகத் தகவல். எண்டாலும் ஒரு கட்டத்திற்குப் பிறகு கடுமையாகத் தடுப்பினம் எண்டும் தெரியுது.

தலைநகரில் கத்தி பொல்லோடு கிளம்பிய குடுக் கோஷ்டியை பெரும்பான்மை சமூக இளைஞர்கள் தடுத்திருக்கினம். இந்த விஷயத்திலை சீருடையினரும் விழிப்பாகத்தான் செயற்பட்டவை எண்டதையும் சொல்லத்தான் வேணும்.

கவிஞர் மும்மின் எழுதிய கவிதை ஒன்றை படித்துப் பாருங்கோ.

"இது சங்கம இரவு
இந்த விளக்குகளை
அணைத்துவிடுங்கள்.
இன்பத்தின் சபையில்
எரிகின்றவர்களுக்கு
என்ன வேலை?"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை 50

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

## திம்புவில் நான்கு கோரிக்கைகள்

### நான்கு கோரிக்கைகள்.

திம்பு பேச்சுவார்த்தையில் முன்வைப்பதற்காக நான்கு இயக்கக் கூட்மைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) முன்வைத்த நான்கு அம்சக் கோரிக்கைகள் முக்கியமானவையாகும்.

அக்கோரிக்கைகளை நான்கு இயக்கக் கூட்டமைப்பு தயாரித்திருந்தபோதும், தமிழர் விடுதலைக் கூட்டணியும், புளொட் இயக்கமும் அவற்றை ஏற்றுக்கொண்டன.

அதனால் திம்பு மாநாட்டில் தமிழ் அமைப்புக்களது குரல் ஒரேவிதமாக ஒலிக்கக்கூடிய சூழ்நிலை உருவானது.

அதேசமயம் அக்கோரிக்கைகளை தெளிவாக ஆராய்ந்தால் ஒரு விடயம் புலப்படும்.

தமிழீழக் கோரிக்கையை கைவிடப் போவதில்லை என்று கூறமுடியாத நிலையில், தமிழீழக் கோரிக்கையை ஒத்ததாகவே அக்கோரிக்கைகள் அமைந்திருந்தன.

திம்பு பேச்சில் முன்வைக்கப்பட்ட அந்த நான்கு அடிப்படைக் கோட்பாடுகள் இவைதான்:

1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்று அங்கீகரிப்பது.
2. தமிழ் மக்களது பாரம்பரிய தாயகத்தை அங்கீகரிப்பது.
3. தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது.
4. மலையகத் தமிழ் மக்களது குடியுரிமையை அங்கீகரிப்பது.

மலையகத் தமிழ் மக்களது பிரச்சனையையும் இனப் பிரச்சனைத் தீர்விற்கான பேச்சுவார்த்தையில் முன்வைத்தமை அதுவே முதல் முறையாகும்.

## பேச்சு மேசையில் திடீர் யோசனை

### மூன்று நிலைப்பாடுகள்

இந்த இடத்தில் மலையகத் தமிழ் மக்கள் தொடர்பாக வடக்கு-கிழக்கு தமிழ் அமைப்புக்கள் மத்தியில் காணப்பட்ட மூன்று நிலைப்பாடுகளை குறிப்பிட்டேயாக வேண்டும்.

முதலாவது நிலைப்பாடு - தமிழர் விடுதலைக்கூட்டணியால் முன்வைக்கப்பட்டதாகும்.

மலையகத் தமிழர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வடக்கு-கிழக்கில் வந்து குடியேற வேண்டும் என்று சொன்னது கூட்டணி.

இரண்டாவது நிலைப்பாடு - ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கங்களால் முன்வைக்கப்பட்டது.

ஈழம் என்பதில் மலையகமும் அடங்கும். ஈழப் புரட்சிக்கு மலையகப் பாட்டாளிகளே தலைமைச் சக்திகள் என்று அவை கூறிக் கொண்டிருந்தன.

பின்னர் ஈபி.ஆர்.எல்.எஃப். அந்த முடிவை மாற்றிக் கொண்ட்து.

மூன்றாவது நிலைப்பாடு மலையக மக்கள் தமது உரிமைகளுக்காக தாமே போராடவேண்டும். மலையகத்தில் போராடும் அமைப்புகளுக்கு ஈழப் போராளிகள் உதவி செய்யலாம்.

இந்த மூன்றாவது நிலைப்பாட்டை புலிகள் இயக்கமும் கடைப்பிடித்தது.

முதல் இரண்டு நிலைப்பாடுகளும் வெறும் கற்பனைகளாக இன்று ஏற்கப்பட்டுவிட்டன. இனித் திம்பு பேச்சுக்குச் செல்லலாம்.

திம்புவில் பேச்சுவார்த்தையை இயக்கங்கள் குழப்பக்கூடும் என்று இந்தியாவுக்கு ஒரு சந்தேகம் இருந்தது.

இயக்கங்களின் நோக்கமெல்லாம் பேச்சில் அல்ல; போரை தொடர்ந்து நடத்தி ஈழம்வரை செல்வதுதான் என்று இந்தியாவுக்குத் தெரியும்.

எனவே இயக்கங்களுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க இந்தியா திட்டமிட்டது.

### நாடு கடத்தும் திட்டம்.

23.8.85 அன்று இரவு புலிகள் இயக்க ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும், தந்தை செல்வாவின் மகன் சந்திர காசனையும் கைது செய்தனர்.

தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) சார்பாக திம்புப் பேச்சில் கலந்துகொள்ள வந்திருந்தவர் சட்டத்தரணி சத்தியேந்திரா.

தமது தரப்பில் திம்புவில் கலந்துகொள்ள வெளிநாட்டிலிருந்து அவரை இறக்குமதி செய்திருந்தது ரெலோ. (இப்போது அவர் புலிகளது ஆதரவாளராக இருக்கிறார்).

அவரையும் கைதுசெய்து நாடு கடத்துவதற்காக இந்திய அதிகாரிகள் தேடுதல் நடத்தினார்கள். அவர் சென்னையில் தலைமறைவாகிவிட்டார்.

அன்ரன் பாலசிங்கத்தையும், சந்திரகாசனையும் சென்னையிலிருந்து இரவோடு இரவாக பம்பாய்க்கு கொண்டு சென்றார்கள். அங்கிருந்து டெல்லிக்கு அழைத்துப் போனார்கள்.

இருவரையும் நாடு கடத்தும் ஆயத்தங்கள் துரிதகதியில் நடத்தப்பட்டன.

அதேசமயம் சென்னையில் இருந்த நான்கு இயக்க கூட்டமைப்புத் தலைவர்கள் கூடி ஆராய்ந்தார்கள்.

அன்ரன் பாலசிங்கம் திரும்பிவராமல் பேச்சில் பங்குகொள்ள முடியாது என்று பிரபாகரன் தெரிவித்துவிட்டார்.

பேச்சில் கலந்து கொள்வதானால் அன்ரன் பாலசிங்கம் வரவேண்டும். பேச்சுவார்த்தையில் அவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று நான்கு இயக்கக் கூட்டமைப்பு முடிவு செய்தது.

அந்த முடிவு இந்திய அரசுக்கும் அறிவிக்கப்பட்டது.

### மாறிய முடிவு

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும், ஈழப் போராளி அமைப்புகளுக்குச் சார்பான

## இந்தியாவின் நாடுகடத்தல் நாடகம்

தமிழ்நாட்டு அமைப்புக்களும், நாடு கடத்தல் திட்டத்தை கடுமையாகக் கண்டிக்கத் தொடங்கிவிட்டன.

நிலைமையைக் கவனித்த இந்திய அரசு அன்ரன் பாலசிங்கத்தையும், சந்திரகாசனையும் நாடுகடத்தும் திட்டத்தைக் கைவிட்டது.

பேச்சுவார்த்தையில் ஏற்பட இருந்த தடை நீக்கப்பட்டது.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை ஒருவகையில் நாடு கடத்தும் திட்டம் உதவிகரமாக அமைந்தது என்றே கூறவேண்டும்.

ஈழப்போராளிகள் விடயத்தில் கண்டிப்பாகவே நடந்துகொள்வதாக காட்டிக்கொள்ள அது உதவியது.

தான் ஒரு நியாயமான மத்தியஸ்தர் என்று இலங்கை அரசுக்கும், வெளியுலகுக்கும் முன்பாக இந்தியா செய்த பிரகடனம் என்றும் அதனைக் குறிப்பிடலாம்.

### ஒரு கூத்து

திம்புப் பேச்சுவார்த்தை ஆரம்பமான முதலாவது நாள் ஒரு கூத்து நடந்தது.

இயக்கங்களும், கூட்டணியும் பொதுவான நிலைப்பாட்டையே முன்வைப்பது என்று, பேச்சுக்கு முன்னரே முடிவு செய்யப்பட்டதல்லவா?

அதன்படி பேச்சு மேசையில் நான்கு அம்சத் திட்டம் முன்வைக்கப்பட்டது.

அதே நேரம் ஈரோஸ் சார்பாக கலந்துகொண்ட சங்கர்ராஜீ தனியாக ஒரு திட்டத்தை விநியோகித்துவிட்டார்.

ஏனைய இயக்கப் பிரதிநிதிகளுக்கு நெத்தியடியான அதிர்ச்சி.

கூட்டணிதான் ஏதாவது கோளாறு செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அமிர்தலிங்கம் இயக்கங்களின் முடிவுக்கு கட்டுப்பட்டு இருந்துவிட்டார்.



நான்கு இயக்கக் கூட்டமைப்பில் ஓர் அங்கமாக இருந்துகொண்டு ஈரோஸ் இயக்கம் அப்படிக் குறுக்கால் ஒரு ஓட்டம் ஓடும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

அதனை ஒரு திட்டமாக முன்வைக்கவில்லை. விவாதத்திற்காகவே முன்வைப்பதாக சங்கர்ராஜீ விளக்கம் சொன்னார்.

திம்புவில் இருந்து தொலைபேசி மூலம் சென்னையில் இருந்த தலைவர்களுக்குச் செய்தி வந்தது.

சென்னையில் நடந்த கூட்டமைப்பு கூட்டத்தில் சங்கர்ராஜீயின் நடவடிக்கை தொடர்பாக பிரச்சனை எழுந்தது.

கூட்டத்தில் கலந்துகொண்ட ஈரோஸ் பாலகுமாரிடம் ஏனைய மூன்று இயக்கத் தலைவர்களும் கேள்விக் கணைகள் தொடுத்தனர்.

பாலகுமார் திணறிப்போனார். "சங்கர்ராஜீ இப்படிச் செய்வார் என்று எனக்கே தெரியாது. அது பெரிய பிழைதான். ஈரோஸ் சார்பாக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். சங்கர்ராஜீ முன்வைத்த யோசனை திரும்பப் பெறப்படும்" என்று கூறினார் பாலகுமார்.

### பிரபா சொன்னது

ஈரோஸின் முடிவில்லாமல் சங்கர்ராஜீ செயற்பட்டிருக்க முடியாது என்றே ஏனைய இயக்கத் தலைவர்கள் கருதினார்கள்.

கூட்டமைப்புக் கூட்டம் முடிந்தபின் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் பத்மநாபாவிடம் பிரபாகரன் சொன்னது இது:

"ஈரோஸ் இப்படிச் செய்யுமென்று எனக்குத் தெரியும். ஈரோசையோ, ரெலோவையோ நம்பி நாம் கூட்டமைப்பில் சேரவில்லை. உங்களை நம்பித்தான் சேர்ந்திருக்கிறோம்" என்றார் பிரபாகரன்.

இந்த இடத்தில் மேலும் ஒரு சம்பவம்:

ஒரு முறை பத்மநாபா தனது T.V.S.50 மோட்டார் சைக்கிளில் சென்னை அடையாறில் உள்ள புலிகளது அலுவலகத்திற்குச் சென்றார்.

அவர் தனியாக வந்ததைக் கண்டதும் பிரபாகரன் கேட்டார், "பாதுகாப்பில்லாமல் இப்படி வருகிறீர்களே?" அதற்கு பத்மநாபா சொன்ன பதில்: "நாங்கள் மக்கள் இயக்கம்; மக்கள் எங்குமிருப்பதால் அதுதான் பாதுகாப்பு!" அதைக் கேட்டு பிரபாவின் பதில் ஒரு சிரிப்பு மட்டுமே.

### திம்புவில் சர்ச்சை

திம்பு பேச்சுவார்த்தையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரிதான் முக்கிய பாத்திரம் வகித்தார்.

ரொமேஷ் பண்டாரியை இயக்கங்களுக்கு பிடிக்காது. அவருக்கும் இயக்கங்களைப் பிடிக்காது.

இலங்கைக்கு அடிக்கடி விஜயம் செய்பவர் ரொமேஷ் பண்டாரி. அவரை ஜே.ஆர். தனது கைக்குள் போட்டுக் கொண்டுவிட்டார் என்று இயக்கங்களுக்குச் சந்தேகம்.

ரொமேஷ் பண்டாரிக்கு முன்னர் இந்திய வெளியுறவுச் செயலாளர்களாக இருந்தவர்கள் இயக்கத் தலைவர்களோடு நல்ல உறவுகளை வைத்திருந்தனர்.

திம்புப் பேச்சில் சூடான ஒரு கட்டத்தில் ரொமேஷ் பண்டாரியின் மனதில் இயக்கங்கள் தொடர்பாக இருந்த அபிப்பிராயம் வெளிப்பட்டு விட்டது.

தன்னை மறந்த நிலையில் ரொமேஷ் பண்டாரி இயக்கப் பிரதிநிதிகளை நோக்கிச் சொன்ன வார்த்தை இது: 'BLOODY BOYS' (கெட்ட பையன்கள்)

இயக்கப் பிரதிநிதிகள் கொதித்துப் போனார்கள். பிரச்சனை பெரிதாகும் என்று உணர்ந்துகொண்ட ரொமேஷ் பண்டாரி இறுதியில் மன்னிப்புக் கேட்டார்.

அதேசமயம் திம்புப் பேச்சில் கலந்துகொண்ட இலங்கை அரசுப் பிரதிநிதிகளின் பார்வையில் ஒருபடி உயர்ந்தும்விட்டார்.

### ஜே. ஆர். உறுதி

திம்புவில் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தபோது கொழும்பில் தனது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ஜே.ஆர் சொன்ன உறுதிமொழி இதுதான்:

"திம்புவில் சமரசப் பேச்சு நடந்தாலென்ன, நடக்காவிட்டாலென்ன; தீவிரவாதிகளின் முகாம்களைத் தேடிக் கண்டுபிடித்து அழிப்பதில் முப்படைகளும் ஈடுபடும்.

இலங்கைத் தீவில் வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தமது மரபுவழித்தாயகம் என்று தமிழர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். இதை எனது அரசோ, நானோ ஏற்கமாட்டோம்."

இதேவேளை ஜுன் மாதத்தில் இருந்து செப்டம்பர் மாதம் வரையான போர் நிறுத்தம் மேலும் நீடிக்கப்பட்டது. இந்திய அரசின் தலையீட்டால் அக்டோபர் மாதம் 12ம் திகதி முதல் போர்நிறுத்தம் மேலும் நீடிக்கப்பட்டிருந்தது.

இரண்டாவது கட்டமாக போர்நிறுத்தம் நீடிக்கப்பட்டபோது, போர்நிறுத்த மீறல்களைக் கண்காணிக்க ஒரு குழுவை அரசு நியமித்தது.

போர் நிறுத்தத்தை கடைப்பிடிப்பதில் தனது அரசு நியாயமாக நடந்து கொள்கிறது என்று நிரூபிக்க ஜே.ஆர். செய்த தந்திரமே கண்காணிப்புக் குழுவாகும்.

### கார்டியனின் கணிப்பு

இலண்டனிலிருந்து வெளிவரும் கார்டியன் பத்திரிகையில் 19.06.1985இல் டேவிட் பலிஸ்டர் என்பவர் எழுதிய கட்டுரை ஒன்று முக்கியமானது.

டேவிட் பலிஸ்டர், தளபதி பிரிகேடியர் நளின் செனிவிரத்னாவை பேட்டி கண்டார். அப்போது நளின் செனிவிரத்னா பின்வருமாறு சொன்னாராம்;

"தமிழீழ விடுதலைப் புலிகளது கெரில்லாப் போரை எம்மால் வெற்றி கொள்ள முடியாது. எமது முகாம்களை மூடியுள்ள மணல் மூட்டைகளைக் கடந்து எமது ஆணை செல்லாது".

டேவிட் பலிஸ்டர், யூ.என்.பியின் மூத்த அமைச்சர் ஒருவரையும் சந்தித்தார்.

அந்த அமைச்சர் பின்வருமாறு கூறியிருந்தார்.

"ஜயவர்த்தனா பிரதமர் பதவியைப் பிடிப்பதற்கு 43 ஆண்டுகாலம் காத்திருந்தார். தமிழர் பிரச்சனையைத் தீர்க்கவும் ஒரு கால அட்டவணையை வைத்திருந்தார். ஆனால் இப்போது அவரிடம் பிடிஇல்லாமல் போய்விட்டது. அவர் கொஞ்சம் குழம்பிப்போய் இருக்கிறார். கடந்த காலங்களில் ஒவ்வொரு தடவையும் நாமே தமிழர்களைத் தாக்கியிருக்கிறோம். அவர்கள் ஓடினார்கள். இப்போது அவர்கள் எம்மைத் திருப்பித் தாக்குகிறார்கள். அவர்கள் மீது நாம் மரியாதை கொண்டுள்ளோம். கூடிய சலுகைகளை நாம் கொடுத்தேயாக வேண்டும்."

இவற்றையெல்லாம் வெளியிட்ட கார்டியன், இறுதியில் தனது கணிப்பைச் சொல்லியிருந்தது.

"பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும் என்று கூறிவிடமுடியாது". அதுதான் கார்டியன் வெளியிட்ட கணிப்பு. அந்தக் கணிப்பை உறுதிப்படுத்தும் காரியங்கள் அரங்கேற ஆரம்பித்தன.

(தொடர்ந்து வரும்)

**போர்நிறுத்த உடன்பாட்டை கேலிசெய்து– 1985ல் ஜலண்ட் வெளியிட்ட காட்டூன்.**






படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது – இராஜதந்திரி



# வடக்கே 'சூரிய ஒளிக்கதிர்' நடவடிக்கை

# தெற்கே கொடிய அஸ்த்தமனத்துக்கு கட்டியம் கூறிய கருமுகில்கள்

**யா**ழ்குடாநாட்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்ட 'ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கையையடுத்து, தொடர்ச்சியாக பல இராணுவ ஒப்பரேஷன்கள் முழுமூச்சுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதையே தற்போது உணரமுடிகின்றது.

இவ்வாறு ஆயிரக்கணக்கான துருப்புகள் மற்றும் ஆயுத தளபாடங்களுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ 'ஒப்பரேஷன்கள்' வடபகுதி மக்களை பெரும் 'திக்கு முக்காட்ட'த்துக்கு உள்ளாக்கியுள்ளன.

'ஒப்பரேஷன் இடிமின்னல்' தாக்குதல் என்ற இராணுவ நடவடிக்கை வடக்கே அண்மையில் இடம்பெற்றிருந்தது. இந்த இராணுவ நடவடிக்கையையடுத்து பல ஆயிரக்கணக்கான மக்கள் தமது குடிமனைகளிலிருந்து அகன்றிருந்தனர்.

எனவே அகதி மக்கள் ஆயிரக்கணக்கில் செய்வதறியாது திகைத்து நிற்பவர்களாகவும், வடக்கே நிலவும் பலத்த உணவுத்தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுக்க முடியாதவர்களாகவும் இருந்த தருணத்திலேயே 'ஒப்பரேஷன் சூரியக்கதிர்' என்ற புதிய இராணுவ நடவடிக்கையையும் படையினர் முடுக்கிவிட்டிருந்தனர்.

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை' என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கமைவாகவே 'ஒப்பரேஷன் இடிமின்னல்' தாக்குதலினால் திணறிப்போயிருந்த வடபகுதி மக்களை 'ஒப்பரேஷன் சூரியக்கதிர்' வாட்டிவதைப்பதாக இருக்கின்றது.

வடக்கே தற்போது இராணுவ நடவடிக்கைகள் மும்முரமடைந்திருக்கும் பிரதேசங்கள், மிகவும் வளம் கொழிக்கும் தரைப்பாங்கானவையாகும்.

புத்தூர், ஆவரங்கால், நீர்வேலி போன்ற பிரதேசங்களின் செந்நிற மண்வளம் எத்தகையதொரு பயிரையும் செம்மையாக வளரச் செய்யக்கூடியது.

அத்துடன் புத்தூர் பிரதேசத்திலுள்ள 'நிலாவரை'க்கிணறு வியத்தகு நீர்வளத்தைக் கொண்டதாகும்.

'நிலாவரை'க் கிணற்றின் ஆழம் சரியாகக் கணிப்பிடப்பட முடியாதது. இந்த ஆழக் கிணற்றில் இருக்கும் நன்னீர் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற ஒரு வரப்பிரசாதமாகவே இருக்கின்றது.

இதுதவிர வாழைப்பழச் செய்கை, முந்திரிகைப்பழச் செய்கை, புகையிலைச் செய்கை உட்பட பல்வேறு மரக்கறிவகைகளும் அண்மைக்கால இராணுவ நடவடிக்ககள் உக்கிரமடைந்துள்ள பிரதேசங்களில் வடபகுதி மக்களால் செய்கை பண்ணப்படுவதுண்டு.

ஆனால் இன்று இந்த உயர்ந்த ரக செம்மண்தரையில் இராணுவ டாங்கி வண்டிகளும், கவசவாகனங்களும் ஓடித்திரிவதையே அவதானிக்க முடிகின்றது.

1970ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில், அன்று பிரதமமந்திரியாக இருந்த ஜனாதிபதி சந்திரிகாவின் தாயார் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா வடபகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அப்போது அவருக்கு வடபகுதியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி என்ற முந்திரிகைப்பழ உற்பத்தியாளர் ஒருவர் நீண்டு அகன்ற கூடை ஒன்றை நிரப்பி முந்திரிகைப் பழங்களை அன்பளிப்புச் செய்திருந்தார்.

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவும், அவரோடு அன்று யாழ்ப்பாணம் வந்திருந்தவர்களும் இப்படியும் முந்திரிகைப்பழங்களா? என்று அதிசயித்திருந்தனர்.

இதுதவிர பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா 1970ம் ஆண்டுகளில் இலங்கையை ஆட்சிசெய்த போது, சோஷலிச அடிப்படையிலான அரசியல், பொருளாதார முறைகளுக்கே முன்னுரிமையளித்திருந்தார்.

சுயஉற்பத்திக் கொள்கையில் அவரது அரசாங்கம் அக்கறை கொண்டிருந்தது. இறக்குமதித்தடையைக் கொண்டுவந்து, உள்ளூர் உற்பத்திகளுக்கே முக்கியமளிக்க வேண்டும் என்றவகையில் திட்டங்கள் போடப்பட்டிருந்தன.

இருந்தபோதிலும் பிரதமர் திருமதி. சிறிமாவோவின் இந்த சுயஉற்பத்தித் திட்டம் அவர் எதிர்பார்த்ததைப்போல தென்னிலங்கையில் பெருவெற்றி பெறவில்லை. தென்னிலங்கை மக்கள் இத்தகைய பொருளாதாரத் திட்டத்தை மிகவும் சிரமப்பட்டே ஜீரணித்து வந்தார்கள்.

ஆனால் வடக்கே அன்று நிலைமைவேறு; வடபகுதியின் விளைநிலங்கள் யாவும் பொன்கொழிக்கும் பூமியாக மாறின. விவசாயிகள் போட்டியிட்டுக்கொண்டு, மிளகாய், வெங்காய உற்பத்திகளில் ஈடுபடலானார்கள்.

இதன் காரணமாக விவசாயிகள் பலரது வாழ்க்கைத்தரம் வடக்கே குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டிருந்தது. ஒவ்வொரு விவசாயியும் மோட்டார் வாகனங்களை வாங்கியும், புதிய வீடுகளைக் கட்டியும் தமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தலானார்கள்.

இன்று வடக்கே யுத்தம் இடம்பெறும் பகுதிகளில் பெரும்பாலானவை இருபது வருடங்களுக்கு முன்னர் விவசாயத்தினால் 'பொன்கொழிக்கும்' பூமியாக இருந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

டாங்கிகளும், கவச வாகனங்களும், நீரிறைத்து, வளமாக்கிய இந்த விளைநிலங்கள் மீது ஊடுருவிச் செல்வதைப் பார்க்கையில், வடக்கே மக்களின் அடி, ஆதாரமான வாழ்க்கை முறைக்கே வேட்டு வைக்கப்பட்டிருப்பதை உணர முடிகின்றது.

இத்தகைய நிலையிலேயே 'ஒப்பரேஷன் சூரியகதிர்' என்ற புதிய இராணுவ நடவடிக்கையையும் படையினர் மேற்கொண்டிருந்தனர்.

படையினரின் இந்த இராணுவ நடவடிக்கையில் வழமைபோன்றே ஆயிரக்கணக்கான துருப்புகள் குதித்திருந்தனர்.

'ஒப்பரேஷன் சூரியக்கதிர்' என்று பெயரிட்டதன் மூலம், வடக்கே அந்தகாரத்தில் உள்ள மக்களை ஒளிமயமான சூழ்நிலைக்கு கொண்டு செல்வதே தமது நோக்கம் என்று அபிப்பிராயத்தை படையினர் கொண்டிருக்கலாம்.

ஆனால் தமிழில் 'கண்கெட்டபின்னர் சூரிய நமஸ்காரம்' என்று ஒரு பழமொழியுண்டு.

எனவே வடக்கில் தற்போது நடைபெற்று வரும் தொடரான சமர் நடவடிக்கைகள் அந்தகார வாழ்க்கையே தமக்கு நியதி என்ற நிலைக்கு வந்துள்ள மக்களை மேலும் பாரதூரமான நிலைக்குத் தள்ளுவதாகவே காணப்படுகின்றன.

கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக வடக்கு-கிழக்கு மக்கள் அனுபவிக்கும் 'மரண அவஸ்த்தை'யை முழு உலகமுமே நன்கறியும்.

இந்நிலையில் அவர்களை அந்த 'மரண அவஸ்த்தை'யில் இருந்தும் மீட்கும் பணி என்பது பக்குவமானதாகவும், அமைதியானதாகவும், அறிவுபூர்வமானதாகவும் இடம்பெற வேண்டுமே தவிர, முரட்டுத்தனமானதாகவும், கொடூரமானதாகவும் அமைய முடியாது.



# யுத்த பூமியாக மாறிவரும் பொன் கொழிக்கும் விளைநிலங்கள்

மரணத்தின் விளிம்புக்கே சென்றுள்ள சூழ்நிலையில் குடாநாட்டு மக்கள் காணப்படுகின்றனர். இருப்பதற்கு, படுத்துறங்குவதற்குக்கூட அருகதையற்ற நிலையில் மந்தைக்கூட்டங்கள் போன்று அவர்கள் அலைந்து திரிகின்றனர்.

தெற்கே இருந்து பொதுமக்கள் செல்வது தடைப்பட்டுள்ளது. இதேவேளை வடக்கே தமக்கு வேண்டியவற்றை உற்பத்தி செய்யமுடியாதவர்களாகவும், அங்குள்ள மக்கள் விளங்குகின்றனர். விளைநிலங்கள்யாவும் மயான பூமிகள் போன்று விளங்குகின்றன.

இந்நிலையில் 'சூரியக்கதிர்' அஸ்த்தமன வேளையில் தென்படும் ஓர் ஒளிக்கதிர் போன்றதாவே இருக்கின்றது.

படையினர் மும்முரமாக வடக்கே 'சூரியக்கதிர்' ஒப்பரேஷன் நடவடிக்கையை மேற்கொண்டிருந்த தினத்திலேயே கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் வான்மண்டலம் புடைத்தெழுந்த கருமுகில் கூட்டங்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

அணுகுண்டொன்று போடப்பட்டதும் நச்சுப்புகை 'காளான் வடிவில்' உயரே கிளம்பும் (MUSHROOM CLOUD).

இத்தகைய காளான்வடிவை ஒத்ததாகவே கொழும்பின் வான்மண்டலத்தை கருமுகில் கூட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை ஆக்கிரமித்திருந்தன.

சூரியவெளிச்சத்தைக் கூட இந்த கருமுகில்கூட்டம் மூடி மறைக்கும் அளவுக்கு வானில் பரந்து வியாபித்திருந்தது. கார்காலம் போன்ற பிரமையை இந்த முகில்கூட்டங்கள் உண்டுபண்ணியிருந்தன.

ஒருகொடவத்த, கொலன்னாவைப் பகுதிகளில் உள்ள எரிபொருள் குதங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையடுத்தே இந்த கருமுகில்கூட்டங்கள் மேலெழுந்ததுடன், இலங்கையில் இதுவரை காலமும் ஏற்பட்டிராத மாபெரும் தீ அனர்த்தத்தையும் எரிபொருள் குதங்கள் மீதான தாக்குதல்கள் ஏற்படுத்தியிருந்தன.

எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் தற்கொலைப்படைக் கமாண்டோக்களே இந்த துணிகரத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளார்கள் என்பது தற்போது ஊர்ஜிதமாகியுள்ளது.

எரிபொருள் குதங்கள் மீதான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட பாணியை நோக்கும்போது, மிகவும் திறமையாகவும், கச்சிதமான முறையிலும் அவை நடத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் நாட்டின் எரிபொருள் விநியோகத்தின் சிரசாக இருக்கும் ஒருகொடவத்த, கொலன்னாவ மீதான தாக்குதல்கள், முழுநாட்டுக்குமே விடுக்கப்பட்ட ஓர் எச்சரிக்கையாகவுமே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் யுத்தம் என்று கூறிக்கொண்டு பலகோடிக்கணக்கான ரூபாய்களை அரசு செலவிட்டுவரும் இத்தருணத்தில் ஒரேநாளில் எரிபொருள் குதங்கள் மீதான தாக்குதல்கள் பலநூறு கோடி ரூபாய்களை எரித்து நாசமாக்கி விட்டுள்ளது.

எனவே வடக்கு-கிழக்கின் யுத்தம் என்பது இன்று வடக்கு-கிழக்கு பிரதேசத்துக்குள் மட்டும் இடம்பெறவில்லை. முழுநாட்டிலுமே இந்த யுத்தத்தின் தாக்கம் பிரதிபலிக்க ஆரம்பிக்கும் வேகம் அதிகரித்திருப்பதையே எண்ணெய்க் குதங்கள் மீதான தாக்குதல்கள் புலப்படுத்துகின்றன.

அத்துடன் எல்.ரி.ரி.ஈயினரின் யுத்த தந்திரங்களும் அவ்வப்போது மாற்றப்பட்டு, அவர்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றும் நடவடிக்கைகளை நன்கு திட்டமிட்டு மேற்கொள்வதையுமே அவதானிக்க முடிகின்றது.

நிமிடமொன்றுக்கு, நாள் ஒன்றுக்கு, வருடமொன்றுக்கு எனக் கோடிக்கணக்கில் போருக்குப் பணம் விரயமாகின்றது.

இந்த விரயம் ஒரே நாளில் பல நூறு கோடியாக மாறியிருப்பதையும், எரிபொருள் குதங்களின் நாசம் பல கோடி ரூபாய்களாகவும் இருப்பதை அறியமுடிகின்றது.

நாட்டின் பாதுகாப்புக்கும், பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இதுவரைகாலமும் விழுந்துவந்த அடிகள், தற்போது ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்று வருவதையே எரிபொருள் குதங்கள் மீதான தாக்குதல்கள் புலப்படுத்துகின்றன.

இந்நிலையில் முழுநாட்டுக்குமே ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்தும் அரசியல் ரீதியான ஓர் 'சூரிய ஒளிக்கதிர்' நடவடிக்கையே இன்று இன்றியமையாததாகின்றது.

எனவே நாட்டின் எதிர்காலம் ஒரு புதிய உதயத்தையா? அல்லது கொடிய அஸ்த்தமனத்தையா? கொண்டிருக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் வந்துள்ளதையே எரிபொருள் குதங்களிலிருந்தும் பீறிட்டுப்பரவிய கருமுகில் கூட்டங்கள் அச்சுறுத்தலோடு அறிவித்துள்ளன.


படிப்பகம்

www.padippakam.com





# தூதருக்கு விரித்த வலை 7

ஃபிரான்ஸ் சிறையிலுள்ள ஜப்பான் செம்படைத் தலைவர் யமடாவை விடுவிக்கும் நடவடிக்கைக்கு கார்லோஸ் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (PFLP) தளபதி வாடி ஹாட்டாட் பொறுப்பை கார்லோஸிடம் ஒப்படைத்தபோது சொன்ன நிபந்தனை தான் கார்லோஸுக்கு கசப்பாக இருந்தது.

"சிறைமீட்பு நடவடிக்கைக்கு கார்லோஸ் பொறுப்பாக இருக்க வேண்டும். ஆனால், நடவடிக்கையில் நேரடியாகப் பங்குபெறக் கூடாது. திட்டம் தீட்டுவதும், சரியான நபர்களை நடவடிக்கையில் ஈடுபடுத்துவதும் மட்டுமே கார்லோஸின் வேலை" என்று உத்தரவிட்டிருந்தார் வாடி ஹாட்டாட்.

கார்லோஸை இழக்க வாடி ஹாட்டாட் விரும்பவில்லை. கார்லோஸ் இருந்தால் மேலும் பல நடவடிக்கைகளை ஃபிரான்சிலும், வெளிநாடுகளிலும் மேற்கொள்ள முடியும்.

வாடி ஹாட்டாட் நினைத்தது அது தான். கார்லோஸுக்கு எந்த நடவடிக்கையிலும் நேரடியாகப் பங்குகொள்ளவே ஆசை. ஆனாலும், தளபதியின் உத்தரவுக்குப் பணிந்தான்.

யமடாவை விடுவிப்பதற்கு, யமடா எந்தச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார் என்பதைக் கண்டறிய வேண்டும்.

ஒரு மாத காலமாக யமடா இருக்கும் சிறையை அறிய கார்லோஸ் பல வழிகளில் முயன்றார். பலன் பூச்சியம்.

ஃபிரான்ஸ் சிறை இரகசியம் இறுக்கமாக இருக்கிறது. ஒரு சின்ன ஓட்டைகூட இல்லை.

மாற்றுவழி தேட வேண்டும். கார்லோஸ் யோசித்தார். யமடா எங்கே இருக்கிறார் என்று தேடிக்கொண்டிருப்பதைவிட, சுறு-சுறுப்பாக ஏதாவது செய்ய வேண்டும்.

கார்லோஸுக்கு ஐடியா வந்து விட்டது. ஏதாவது ஒரு வெளிநாட்டில் ஃபிரான்ஸ் தூதுவரைக் கடத்தி வைத்துக் கொண்டு, "தூதர் பத்திரமாக வேண்டும் என்றால் யமடாவை நல்லவிதமாக விடுதலை செய்துவிடுங்கள்" என்று ஃபிரான்ஸ் அரசுக்கு சொல்ல வேண்டியதுதான்.

தனது திட்டத்தை வாடி ஹாட்டாட்டுக்கு தெரியப்படுத்தினான் கார்லோஸ்.

"ஓ.கே. டண்!" அனுமதி கொடுத்தார் தளபதி வாடி ஹாட்டாட்.

இதற்கிடையே ஃபிரான்ஸ் உளவு நிறுவனம் ஜப்பான் நாட்டவர்களை மோப்பம் பிடித்துத் திரிந்தது.

பத்திரிகைக் காரியாலயங்களை தகர்த்த 'ஒப்பரேசன் பௌடியா' நடவடிக்கைக்கு உதவிய ஜப்பான் செம்படை உறுப்பினர்கள் கொரியா நாட்டு கடவுச் சீட்டுக்களோடு ஃபிரான்சிலும் பாரிஸ் நகரிலும் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் சிலரை மட்டும் தன்னோடு வைத்துக்கொண்டு, ஏனையோரை சுவிற்சர்லாந்துக்கு விமானத்தில் அனுப்பி வைத்தான் கார்லோஸ்.

அனுப்பி வைத்துவிட்டு அடுத்த நடவடிக்கைக்கு திட்டமிட்டான் கார்லோஸ்.

ஃபிரான்ஸ் நாட்டுக்கு உலகின் பல நாடுகளில் தூதரகங்கள் இருக்கின்றன.

பிரிட்டன், இத்தாலி, ஜெர்மன் போன்ற நாடுகளில் ஃபிரான்ஸ் தூதரகங்களில் கைவைப்பது கடினம். கைவைத்தாலும் அந்த நாடுகள் லேசில் வளைந்து கொடுக்கப் போவதில்லை.

'நெதர்லாந்து நாட்டில் உள்ள ஃபிரான்ஸ் தூதரகம் மீது வித்தையைக் காட்டினால் என்ன? ரைட். அதுதான் சரியான இடம்!' கார்லோஸ் தீர்மானித்தான்.

1974 ஆகஸ்ட் மாதம் முழுவதும் நெதர்லாந்தில் உள்ள ஃபிரான்ஸ் தூதரகம், ஃபிரான்ஸ் தூதரின் நடமாட்டங்கள் யாவும் கண்காணிக்கப்பட்டன.

> -கார்லோஸ்-
>
> உலகைக் கலக்கியவன். தனி ஒரு நபராக சாகசங்கள் படைத்தவன்.
>
> நம்பவே முடியாத அதிசய மனிதனாக கருதப்பட்டவன்.
>
> பாலஸ்தீன விடுதலைக்காக போராடிய வெனிசுலா நாட்டுக்காரன்.
>
> அவனது சாகசங்களின் தொகுப்பு இது. இத் தொடர் முடியும் போது நீங்களே தீர்மானிக்கலாம்-
>
> கார்லோஸ் நல்லவனா?
>
> கெட்ட வல்லவனா?

ஃபிரான்ஸ் தூதரகத்திற்குள் இருந்து ஒரு ஊழியரை விலைக்கு வாங்கினான் கார்லோஸ். தகவல்கள் பலாப்பழம் மாதிரி இனிக்க, இனிக்க சுளை, சுளையாகக் கிடைத்தன.

நெதர்லாந்தில் ஒரு கொமாண்டோத் தாக்குதலுக்கான திட்டம் கார்லோஸால் மிக நுணுக்கமாக வகுக்கப்பட்டது.

* * *

**பா**ரிசிலிருந்து ஒல்லாந்துக்குப் புறப்பட முன்னர், பாரிசிலுள்ள ரூ ரெளலியர் வீதிக்குச் சென்றான் கார்லோஸ்.

ரூ ரெளலியர் வீதியில் இரண்டு மாணவிகள் தங்கியிருந்தனர். இருவரும் சொர்போன் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தனர். படிப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், மாலை வேளைகளில் கும்மாளமிடுவதையும் குதூகலத்தோடு அரங்கேற்றிக் கொண்டிருந்தனர்.

இருவருமே வெனிசுலா நாட்டைச் சேர்ந்தவர்கள். கார்லோஸும் வெனிசுலாவைச் சேர்ந்தவர்தான். கார்லோஸ் பெரு நாட்டின் பெரும் பணக்கார இளைஞன் என்று நினைத்தார்கள் அழகிகள். அதனால் கார்லோஸை தங்கள் விருந்தாளியாக மாற்றிக் கொண்டார்கள்.

தினமும் மாலையில் சொர்போன் பல்கலைக்கழக மாணவிகள் பலர் 'ரூ ரெளலியர்' வீதி இல்லத்தில் ஒன்றாகக் கூடுவார்கள். பணமிருப்பவர்கள் அவர்களை நாடி வரலாம். வீட்டிலிருந்து அனுப்பும் பணம் நாகரிக மோகத்தை தீர்க்கப் போதவில்லை. எனவே, மாணவிகள் பலருக்கு பணம் தேடும் பாதையைக் காட்டியது 'ரூ ரெளலியர் இல்லம்.'

பல்வேறு நாட்டு மாணவிகள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரகம். அனுபவம் புதுமை. தேடி வந்தவர்கள் பலர். அனைவருமே பெரிய புள்ளிகள். ஃபிரான்ஸ் நாட்டு பொலிசாரும், உளவுத் துறையினரும் அவர்களில் அடக்கம்.

கார்லோஸுக்கு ஒரு கல்லில் இரண்டு மாங்காய். அழகிகளும் கிடைத்தார்கள். ஃபிரான்ஸ் உளவுத்துறை நபர்களோடு அறிமுகமும் கிடைத்தது.

"மாணவிகள் கற்றுக் கொடுப்பார்கள் என்பதை இங்கேதான் அறிந்து கொண்டிருக்கிறேன்" என்று கிண்டலடிப்பான் கார்லோஸ்.

மாணவிகளைத் தேடிவரும் ஒரு சல்லாபப் பிரியனாகவே ஃபிரான்ஸ் உளவுத்துறை நபர்களுக்கு கார்லோஸ் தெரிந்தான்.

ஒல்லாந்துக்குப் புறப்படும் முதல்நாள் இரவு 'ரூ ரெளலியர்' இல்லத்தில் உல்லாசமாய் தங்கிவிட்டுப் புறப்பட்டான் கார்லோஸ்.

* * *

**மூ**ன்று பேரோடு பாரிசிலிருந்து நெதர்லாந்து நாட்டின் தலைநகரான அம்ஸ்டர்டாம் நோக்கிப் புறப்பட்டான் கார்லோஸ்.

கடுகதி ரயில் மூலம் பயணம் ஆரம்பமானது. கார்லோஸ் தனியாகவும், ஏனைய மூன்று பேரும் தனியாகவும் அதே ரயிலில் பயணம் செய்தனர்.

நடவடிக்கைக்கு தேவையான M-26 ரக கைக்குண்டுகள், மற்றும் சில துப்பாக்கிகளோடு ஜப்பான் செம்படை உறுப்பினர் இருவரும் அதே ரயிலில் பயணம் செய்தனர்.

அவரை சோதனையிட்டபோதும் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களை பொலிசாரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அம்ஸ்டர்டாம் நகருக்குள் கார்லோஸ் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தான்.

ஆயுதங்களும் போய்ச் சேர்ந்து விட்டன. முன்கூட்டியே சொல்லி வைத்ததுபோல, அதிரடி நடவடிக்கைக்கு முதல் நாள் அனைவரும் ஒரே இடத்தில் கூடினார்கள்.

அனைவரும் கூடியது, அம்ஸ்டர்டாம் நகரில் இருந்த பிரபல ஹோட்டல் ஒன்றில்.

பெரும் வியாபாரிகள் தமது வியாபாரம் பற்றிப் பேசுகிறார்கள். ஏதோ ஒரு கொள்ளை லாபத்திற்கு குறி வைக்கிறார்கள் என்று ஹோட்டல் நிர்வாகம் நம்பிக் கொண்டிருந்தது.

ஃபிரான்ஸ் தூதர் தனது மதிய உணவுக்காக வீட்டுக்குப் புறப்பட்டுச் செல்லும் நேரம், வீட்டில் ஒரு குட்டித் தூக்கம் போட்டுவிட்டு தூதரகத்திற்கு வந்து சேரும் நேரம் இரண்டும் கார்லோஸுக்கு துல்லியமாக தெரிந்திருந்தது.

அதற்கேற்ப திட்டம் வகுக்கப்பட்டது. சரியாக 1.30 மணிக்கு தூதர் திரும்பி வரும்போது ஒப்பரேசன் ஆரம்பமாக வேண்டும்.

தூதரகத்திற்கு பாதுகாப்பு அதிகமில்லை. தனது மோட்டார் வண்டியில் இருந்து ஃபிரான்ஸ் தூதர் ஜாக்குயிஸ் செனார்ட் கீழே இறங்கியதும் துப்பாக்கி முனையில் அவரை மடக்க வேண்டும். அப்படியே அவரை உள்ளே அலுவலகத்திற்குள் கொண்டு சென்ற பின்னர் பேரம் பேச ஆரம்பிக்கலாம். கார்லோஸ் போட்ட திட்டம் அதுதான்.

திட்டத்தை செயற்படுத்த மூவர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் இருவர் ஜப்பானியர்கள்; ஒருவர் பிரேஸில் நாட்டைச் சேர்ந்தவர். பாரிசில் கலைக்கூடம் நடத்துவதாக நடித்துக்கொண்டு அங்கு ஆயுதங்களை பதுக்கி வைத்த அன்ரோனியோதான் அந்த மூன்றாவது நபர்.

▫ ▫ ▫ ▫ ▫ ▫

**அ**ன்று வெள்ளிக்கிழமை. தூதர் ஜாக்குயிஸ் தனது மோட்டார் வண்டியில் தூதரகத்தைவிட்டு புறப்பட்டுச் சென்றார்.

தூரத்தில் ஒரு வாடகைக் காரில் இருந்து அதனை அவதானித்துக் கொண்டிருந்தான் கார்லோஸ்.

நெதர்லாந்தில் ஃபிரான்ஸ் தூதரகமும், அமெரிக்க தூதரகமும் அருகருகே இருந்தன. அமெரிக்கத் தூதரகத்திற்கு பாதுகாப்பு அதிகம். துப்பாக்கிகளோடு காவலர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

காரில் தொடர்ந்தும் இருந்து கண்காணிப்பது சந்தேகம் எற்படுத்தும் என்பதால், காரை திருப்பி அனுப்பிவிட்டு வீதியோரத்தில் நின்று கொண்டார் கார்லோஸ்.

நேரம் - 1.10.... எதிர்பார்த்தபடி கார்லோஸின் அதிரடிப்படையைச் சேர்ந்த மூவரும் வரவேண்டிய நேரம் அதுதான். ஆனால்... வரவில்லை.

நேரம் 1.20... இப்போதும் அவர்கள் வரவில்லை. கார்லோஸ் பொறுமை இழந்தார். தூதர் வரப்போகிறார். கடத்தலில் ஈடுபடப் போகிறவர்களை காண வில்லை.

நேரம்-1.25... அவர்கள் வரவில்லை.

நேரம் - 1.32 தூதரின் கார் வந்து சேர்ந்தது. தூதர் உள்ளே போய் விட்டார். அதிரடிப்படை வரவேயில்லை. கார்லோஸ் பொறுமையிழந்துவிட்டான். நேரம் மாலை 4 மணியாகிவிட்டது. ஒரே இடத்தில் நின்று, மணிக்கட்டில் நேரம் பார்ப்பதும், வீதியைப் பார்ப்பதுமாக டென்ஷனாகியிருந்த கார்லோஸ் மீது தூதரக காவலர்களது பார்வை விழுந்தது. அது சந்தேகப் பார்வை.

நேரம்-4.35. கார்லோஸ் மெல்ல அவ்விடத்தைவிட்டு நழுவிப் போனான்.

அப்போது துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டது. கைக்குண்கள் வெடிக்கும் ஓசையும் தொடர்ந்து கேட்டது. கார்லோஸ் திரும்பி ஓடி வந்தான்.

அங்கே அவர் கண்ட காட்சி.....

(தொடர்ந்து வரும்)

## ஹலோ டாக்டர்

### முப்பது வயதாகி விட்டால்....

"வணக்கம், டாக்டர். இன்று நீரிழிவு நோய் பற்றிய சில சந்தேகங்களை கேட்கப் போகிறேன். பட்டுப் பட்டென்று நீங்கள் பதில் சொல்லப் போகிறீர்கள். ஆரம்பிக்கலாமா?"

"ஆரம்பிக்கலாமே. இன்று குஷியாக இருக்கிறீர்களே! வீட்டில் விசேஷமா?"

"இதற்காக நான் வெட்கப்பட வேண்டுமாக்கும்! முகம் சிவக்கிறதா பாருங்கள். சர்க்கரைக்குறைவு (Low sugar) ஏன் வருகிறது? எப்படித் தடுக்கலாம்."

"அதிக நேரம் ஆகாரம் எதையும் சாப்பிடாமல் இருந்தால் இரத்தத்தில் சர்க்கரைக் குறைவு ஏற்படும். மாத்திரைகள் மூலமாகவும் வரும். இதைத் தடுக்க நேரத்தைக் கடைப்பிடிப்பது முக்கியம். நேரத்தோடு உண்பது, உறங்குவது, எடை கூடியிருந்தால் மருத்துவர் கூறும் எடை வரை பயிற்சி செய்வது முக்கியம். இப்படிச் செய்வதால் சர்க்கரைக் குறைவைத் தடுக்கலாம்."

"சர்க்கரைக் குறைவினால் ஏற்படும் விளைவுகள் என்ன? அதனை தவிர்க்க எதுமாதிரியான உணவுகளை சாப்பிட வேண்டும்?"

"களைப்பு, மயக்கம், படபடப்பு தலைச்சுற்றல்,நடுக்கம், வியர்வை அதிகம் வெளியேறுதல் போன்றவை சர்க்கரைக் குறைவுக்கு அறிகுறிகளாகும். அப்போது எதையாவது சாப்பிட வேண்டும். வெறும் வயிற்றில் இருக்கக்கூடாது. 2 அல்லது 3 மணிக்கு ஒருமுறை உணவு உண்ண வேண்டும்."

"நீரிழிவு நோயாளர்கள் தவிர்க்க வேண்டிய உணவு வகைகளைக் கூறுங்கள் டாக்டர்?"

"சீனி,தேன்,குளுக்கோஸ் போன்ற இனிப்புப் பொருட்கள், பீட்ருட்,உருளைக் கிழங்கு, மற்றும் கிழங்கு வகைகள், மாம்பழம் ஆகியவற்றை சாப்பிடக்கூடாது. வாழைப் பழத்தை அதிகமாகச் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்."

"சாப்பிடக் கூடிய உணவு வகைகள் என்ன டாக்டர்?"

"கீரை,பச்சைக் காய்கறிகள்,வெண்ணெய் இல்லாத மோர், வெந்தயம்,பாகற்காய்,பீன்ஸ், எலுமிச்சை, தக்காளி, நார்சத்துப் பொருட்கள், புரோட்டீன்கள், முதலியவற்றைச் சாப்பிடலாம். ஆப்பிள் போன்றவற்றை மருத்துவரின் ஆலோசனையோடு சாப்பிடலாம். கோதுமைதான் சாப்பிடலாம். அரிசி உணவு சாப்பிடக்கூடாது. என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. நீரிழிவு நோய் இருக்கும் போது சோறு, மற்றும் கோதுமைப் பண்டங்களை அளவோடு சாப்பிடலாம். இட்லியில் நார் சத்து அதிகம் இருக்கிறது. இட்லி நீரிழிவு நோயாளிக்கு சிறந்த உணவு."

"சரி டாக்டர், நீரிழிவு நோயைச் சுலபமாக கண்டறிவது எப்படி என்று கூறுங்களேன்."

"மருந்துக் கடைகளில் குளுகொஸ்டிக் என்ற பொருளை விற்பனை செய்கிறார்கள். அதை சிறுநீரில் போட்டவுடன் அதன் நிறம் மாறிவிட்டால் நீரிழிவு நோய் இருப்பதை அறிந்து கொள்ளலாம். வைத்தியசாலைகளில் பல நவீன வசதிகள் வந்துவிட்டன."

"இன்சுலினை அதிகம் பயன்படுத்தலாமா டாக்டர்?"

"இரத்ததில் சர்க்கரை அளவு அதிகமாக இருக்கும் போதும், அறுவை சிகிச்சையின் போதும், கர்ப்ப காலத்திலும் இன்சுலினை



அதிகம் பயன்படுத்தலாம். மற்றைய நேரங்களில் டாக்டரின் ஆலோசனைப்படி செய்தால் போதுமானது."

"நீரிழிவு நோய் இருப்பது தெரிந்துதான் நோயாளிகள் சோதனை செய்து கொள்கிறார்களா டாக்டர்?"

"நாற்பது சதவிகிதம் பேருக்கு உடலில் நோய் இருப்பதற்கான எந்தவித அறிகுறிகளும் தெரியாது. இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனையின் போதுதான் தெரியவரும். நீரிழிவு நோய் என்று தெரியாமல் 60 சதவீதம் பேர் வேறு எதுவோ நோய் என்று நினைத்துக் கொள்கிறார்கள். இவர்களிலும் 30 சதவீதத்தினருக்கு குறைவானோரே பரிசோதனை செய்து கொள்கிறார்கள். முப்பது வயதுக்கு மேல் உள்ளவர்கள் வருடத்திற்கு ஒரு முறையாவது கண்டிப்பாக இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்."

"அப்படியானால் நானும் பரிசோதனை செய்யும் கட்டத்தில் இருக்கிறேன் என்கிறீர்கள்."

"உங்களுக்கு 30 வயதாகிவிட்டதா நம்ப முடியவில்லையே!"

"இந்த வாரத்தில் இதுதான் சிறந்த ஜோக், என்று தெரிவு செய்யப்படுகிறது. வரட்டுமா டாக்டர்."

"வாருங்கள்!"

## மாமியார் மறுப்பு

**பா**கிஸ்தான் கிரிகெட் வீரர் இம்ரான்கான்-ஜெமீமா திருமணம் பல சர்ச்சைகளை கிளப்பியது தெரிந்த சமாச்சாரம்.

இப்போது புதிதாக ஒரு வதந்தி கிளம்பியுள்ளது.

இம்ரான்-ஜெமீமா திருமணத்தின் பின்னணியில் பெரிய சதி ஒன்று இருப்பதாக அந்த வதந்தி மிரட்டுகிறது.ஜெமீமாவின் கோடீஸ்வர அப்பா இஸ்ரேல் யூதர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராம்.



அன்னபெல்

அவர் மகள் மூலம் யூதர் படை மெல்ல... மெல்ல பாகிஸ்தானில் நுழைந்துவிடுமாம்.

இந்த வதந்தி பற்றி இம்ரான் கானின் மாமியார் அன்னபெல் என்ன சொல்லுகிறார்? அவர் விழுந்து விழுந்து சிரிக்கிறார். "சதியா? என் மகள் மூலமாகவா? நினைத்துப் பார்த்தாலே சிரிப்பை அடக்க முடியவில்லை!" என்கிறார் அன்னபெல்.

## பல்லுக்கு கம்ப்யூட்டர்

**நோ**ய்க்கு வைத்தியம் செய்ய கம்பியூட்டர் உதவிக்கொண்டிருக்கிறது. பல்லில் விழும் ஓட்டையை அடைக்கவும் கம்பியூட்டரைப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

முதலில் ஓட்டையை அளவிடும் கம்பியூட்டர், அந்தப் பல்லுக்கு ஏற்ப பீங்கானைச் செதுக்கி கனகச்சிதமாகப் பொருத்திவிடும். இதில் நன்மையாதெனில், ஓட்டையை அடைத்த பின்னர் பார்த்தால் அந்தப் பல் இயற்கையான நல்ல பல் போல காணப்படும்.



## பத்திரிகை வழங்கிய பரிசு



போலந்து நாட்டில் 'இலெ' என்ற பெயரில் ஒரு பத்திரிகை வெளிவருகிறது. 1½ இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் அந்தப் பத்திரிகை வாசகர்களுக்கு ஏதாவது ஒன்றை இலவசமாகக் கொடுக்க நினைத்தது. நீண்ட நாள் யோசனையின் பின்னர் வாசகர்களுக்கு 'இலெ' பத்திரிகையோடு அந்த அன்பளிப்புக் கிடைத்தது. வாசகர்கள் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனார்கள். இலவசமாகக் கிடைத்த அந்த அன்பளிப்பு ஒரு ஆணுறை!



படிப்பகம்

www.padippakam.com

## வயதோ ஐந்து வடிவமோ ஐம்பது!





அகத்தின் அழகுமட்டுமல்ல, வயதின் அளவும் ஓரளவு முகத்தில் தெரியும். ஆனால் பிரேஸில் நாட்டில் உள்ள ஒரு கிராமத்தில் 5 வயதுக்குழந்தையைப் பார்த்தால் நீங்கள் ஐம்பது வயது மதிப்பிடுவீர்கள். படத்தில் பாருங்கள் குழந்தையும் அம்மாவும் முதியவர்கள் போல முகச்சாயலில் மட்டுமல்ல உடல் சாயலிலும் தோற்றமளிக்கின்றனர். சிறுவர்களும் அப்படியே. இந்த மாபெரும் சோகத்தை தாங்கிக்கொண்டு அந்த கிராமமக்கள் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். பிறந்தவுடன் வளர்ச்சிப் பருவத்தில் அதிகமான ஹார்மோன்கள் சுரப்பதால் இதுபோல உடம்பில் சுருக்கு விழுந்து விடுகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். என்று தீரும் இக் கொடுமை?!

## தகவல் பெட்டி

## மாறியது நீயோ!



அருகே படத்தில இருக்கும் மூவரும் பிரபல புள்ளிகளோ? என்று நினைத்துவிடாதீர்கள். தாடி வாலா சீக்கியரைப் போல தெரிகிறார். அவரது வயது ஒரு ஐம்பது இருக்குமா? பெண்மணி ஒரு ஆங்கில ஆசிரியை போல தெரிகிறாரே, சரிதானா? ஊகித்துவிட்டீர்களா? உங்கள் ஊகங்களையெல்லாம் இப்போது முட்டைக்கட்டி ஒரு ஓரத்தில் போடுங்கள்.



கீழே இருக்கும் அந்தப் பையனைப் பாருங்கள். அவர்தான் கச்சிதமாக மாறுவேடம் புனைந்து அசத்திப்புட்டாருங்கோ. பையனின் பெயர் போய்ஜோச், அம்மா ஒரு நடிகை. அதனால் நடிப்பு இரத்தத்தில் ஊறியிருக்கிறது. எல்லோருக்கும் எல்லா வேசமும் பொருந்தாதல்லவா. ஜோச்சுக்கு கச்சிதமாகப் பொருந்தி இருப்பதால்தான் இப் புகைப்படம் ஆச்சரியப் பட்டியலில் ஆஜராக முடிந்தது.




## கொஞ்சியதால் நாசம்

இருவேறு தண்டவாளங்களில் போய்க்கொண்டிருந்த ரயில் வண்டிகள் ஒரு சந்திப்பில் காதல்வசப்பட்டு... மன்னிக்கவும்.... விபத்துவசப்பட்டுக் கொஞ்சிக்கொண்டன. மனிதர்கள் கொஞ்சினால் நேசம், வாகனங்கள் கொஞ்சினால் நாசம். இருவர் பலியாக, இருபதுபேர் காயமடைந்தனர். கிரேக்க நாட்டின் லாரிசா நகரில் நடந்தது இது.

## இலண்டனைக் கலக்கும் சகோதரிகள்

பிரிட்டனில் உள்ள லிமோசின் இராட்சதக்கார்தான் இது. 4 கார்களின் நீளம் சேர்ந்தால்தான் இதற்கு ஈடுகொடுக்க முடியும். காரின் உள்ளே மதுபானவிடுதி, படுக்கையறை, டி.வி, ரெலிபோன் வசதி எனறு பல சமாச்சாரங்கள் உண்டு. இக்காரின் சொந்தக்காரிகள் இரு சகோதரிகள். அமண்டாஹாரிஸ் (வயது 20) ஆஞ்செலினா ஹாரிஸ் (வயது22). இந்தக்காரை வைத்து சகோதரிகள் கைநிறையச் சம்பாதிக்கிறார்கள். சமீபத்தில் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் நடந்தபோது மைதானத்திற்கு பல கோடீஸ்வரர்கள் இக் காரில்தான் ஜாலியாகப் போய் வந்தார்களாம். சிலர் தமது காதலிகளோடு காரில் ஜாலி ரவுண்ட் அடித்தார்களாம். சகோதரிகள் அதையெல்லாம் கண்டுக் கொள்ள மாட்டார்கள். கட்டண வசூலிப்பில் மட்டும் படு கண்டிப்பு. இக்காருக்கு லண்டனில் காதலர் வட்டாரத்தில் பலத்த வரவேற்பாம். காரை வைத்து கலக்கு கிறார்கள் இரு சகோதரிகள்.



www.padippakam.com



அக்சய்குமார் – ஊர்மிளா

## காதோடு சொல்லுகிறோம்

ரம்யமான கிருஷ்ணன் என்றால் அந்த நடிகை யாரென்று உடனே தெரிந்துவிடும். தெலுங்கு பட இயக்குநர் ஒருவரது பலத்த நெருக்கத்தால் கொடி கட்டிப் பறந்தவர். இப்போது ஒரு சிக்கல். தமிழிலிருந்து தெலுங்குக்கு போன 'சிவ' என்று பெயர் ஆரம்பிக்கும் நீலக்கண் நடிகை அந்த இயக்குநரை கைக்குள் போட்டுக் கொண்டாராம். அதனால் ரம்யம் பாடு கோவிந்தாவாம். ரம்யத்தை விட 'சிவ' நடிகை திறமைசாலி என்கிறாராம் அனுபவப்பட்ட இயக்குநர்.

அம்சமான பெயரை விசித்திரமாக மாற்றியவர் அந்த கவர்ச்சி நடிகை. சமீபத்தில் அவர் குடியிருந்த வீட்டிலிருந்து விரட்டப்பட்டாராம். உற்சாக பானத்தை ஓவராக போட்டுவிட்டு அவர் போட்ட கும்மாளம் தாங்கமாட்டாமல்தான் விரட்டப்பட்டாராம். பெரும் குடி மகள்.

ராகம் ஒன்றின் பெயர் கொண்ட நடிகை அவர். அரசியல் புள்ளி ஒருவர் கார் வாங்கிக் கொடுத்திருக்கிறாராம். அதனால் குளிர்ந்துபோய் தினமும் 'பல்லவி' பாடுகிறாராம் நடிகை. மார்க்கெட் போனாலும் மவுசு போகவில்லை என்று தெரிகிறது.

யுவ நடிகைக்கும் பிள்ளையார் பெயர் கொண்ட இளம் நடிகருக்கும் இடையில் லடாய். நடிகர் தன்னை துரத்தித்திரிவதாக 'யுவ' நடிகை சொல்லித் திரிய, விளம்பரத்திற்காக நடிகை புலம்புகிறார் என்று கொதிப்போடு கூறுகிறாராம் நடிகர். இருவரும் செல்லக் கண்ணு ஜோடியாக திரிந்தவர்கள். இப்போது யார் என்று புரிந்திருக்குமே.

## வினிதாவுக்கு சிபாரிசு

நடிகர் ஜெயராம் குஷ்புவோடு கிசுகிசுக்கப்பட்டவர் என்பது தெரிந்த செய்தி. இப்போது வினிதாவை தனது படங்களில் சிபாரிசு செய்கிறார் ஜெயராம். புத்திசாலியான வசீகரப் பெண் என்று வினிதாவைப் புகழுகிறார் ஜெயராம்.

* சரத்குமாரின் 'அரவிந்தன்' படத் இசையமைப்பாளராக அறிமுகமாகும் இளை இரண்டாவது மகன் யுவன்சங்கர்ராஜா இந் ஒரு பாடலையும் பாடியிருக்கிறார்.

* தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிக கையைச் சுட்டுக் கொண்ட ரோஜா மீண் இயக்கும் இப்படத்தின் பெயர் 'போராளி'

* 'மாணிக்கம்', 'சீதனம்', 'அரவிந்தன்' இவற்றை அடுத்து விஜய் கதாநாயகனாக

* படங்களின் பெயர்களைப் பதிவு தாளமுத்துக் கவுண்டர் ' என்ற பெயர் ப

* சமனுக்கு ஜோடியாக 'அல்லுடு கே வினிதா. இவர் விரைவில் சமனுக்கு ஜோட

* 'சோலையம்மா', 'தாய்மனசு' பெ ராமராஜனின் 'அம்மன் கோவில் வாசலி நடித்து வருகிறார்.

* அர்ஜுன் இயக்கி நடித்துவரும் 'தா தெரியுமா? நடிகர் கவுண்டமணியாகவே

* கமலின் 'குருதிப்புனல்' படத்திற்கு மு இளையராஜாவின் ஒப்புதலுடன் 'நம்மவர்'

* 'சூரியன்' படத்திற்குப் பின் பவித்ரன் படம் இயக்குநர்-தயாரிப்பாளர் பிரச்சனை தெலுங்கிலும் , தமிழிலும் இருபடங்கள் த

* கே.பிரபாகரன் தயாரிப்பில் விஜய படத்தில் விசித்திராவின் தங்கை இரண்ட

* 'கிழக்கு வாசல்', 'இதயம்', 'ராஜகும ரகுமான் விரைவில் படமொன்றை இயக்க என்று பெயரிடப்பட்டுள்ளது.

### முகப்பில்

பிரபு – சங்கீதா
படம்:– சீதனம்

வினிதா
படம்:– மாமனிதன்

## அக்காவாக மறுப்பு

நடிகை சரிதா தற்போது பிரபல நடிகைகளுக்கு பின்னணிக் குரல் கொடுத்து வருகிறார். ஒரு இளம் இயக்குநர் சரிதாவை அணுகி அக்காவாக நடிக்குமாறு கேட்டாராம். கதாநாயகியாக நடித்தவள் நான். அக்கா, அம்மா வேசம் எல்லாம் வேண்டாம் என்று விட்டாராம் சரிதா.



வினிதா – பிரபு – கனகா
படம் – பெரியகுடும்பம்

## டேக் இட் ஈசி ஊர்மிளா

கமல் நடித்த 'சாணக்யன்' என்னும் மலையாளப் படத்தில் அறிமுகமானவர் ஊர்மிளா. இப்போது 'ரங்கீலா' இந்திப்படம் மூலம் அகில இந்தியாவையே கலக்கிக் கொண்டிருக்கிறார்.

தெலுங்குப் படவுலகின் பிரபல இயக்குநர் ராம்கோபால் வர்மாவை வசியம் செய்து சான்ஸ் பிடித்தார்.

ரங்கீலாவில் வாய்ப்பு கிடைத்தது. படத்தில் நடிக்கும் போது நாயகன் ஜாக்கி ஷெராப்போடு நெருக்கமாகினார். அந்த நெருக்கம் படத்தின் வெற்றிக்கும் அட்டகாசமாக உதவியிருக்கிறது.

ஊர்மிளாவின் துறவறத் துணிச்சல் இந்திப் பட வாய்ப்புக்களை அள்ளிக் கொடுத்திருக்கிறது. கமலோடு இந்தியன் படத்தில் முக்கிய பாத்திரத்தில் தோன்றுகிறார் ஊர்மிளாவை 'இந்தியன்' படத்தில் முழுமையாக பயன்படுத்துவோம் என்கிறார் இயக்குநர் ஷங்கர். ரசிகர்களை பயட் படுத்தாமல் இருந்தால் சரி.

## பொலிஸ் அதிகாரியாக நக்மா

சரத்குமார் மூன்று வேடங்களில் நடிக்கும் படம் 'அரவிந்தன்' என்பது தெரிந்த செய்தி. சரத்குமாரின் ஜோடியாக நடிக்கும் நக்மாவுக்கு பொலிஸ் அதிகா வேடம். மகிழ்ச்சியோடு நடிக்க சம்மதித் துள்ளாராம் நக்மா.

## விசித்ராவுக்கு

விசித்ராவுக்கு 'சாக்லெட்' என் என்பது ஒரு குதிரை ரகம். குதிரைச் எடுத்துள்ளாராம் விசித்ரா. 'சாக்லெ விசேஷம் யாதெனில், அதன்மீது இஷ்டத்திற்கு ஓடத் தொடங்கிவிடுமா போல ஓடச்செய்வது அலாதியான

## மகளாக மதுபாலா

சிவாஜி கேணசன் மலையாளத்தில் நடித்துவரும் 'சுவர்ண சாமரம்' படத்தில் மதுபாலாவும் நடிக்கிறார். சிவாஜியின் மகளாக நடிக்கிறார். படத்தில் மதுபாலாவின் காதலர் நெப்போலியன். கதாநாயகன் மோகன்லால். அவரும் சிவாஜியின் மகனாக நடிக்கிறார்.

## ரங்கீலா சாதனை

ஏ.ஆர்.ரகுமான் முதன் முதலாக இந்தியில் இசையமைத்த ரங்கீலா படப்பாடல் கெசட் உரிமை மூன்று கோடியைத் தாண்டி விலைபோய் உள்ளது. இதுவரை எந்தப் பாடல் கேசட்டுகளும் இந்த விலையை எட்டியதில்லை.

## அமோக விற்பனை

சத்யராஜ் - மீனா கவுண்டமணி இயக்குநர் குரு தனபால் கூட்டணியில் வெற்றி பெற்ற படம் தாய்மாமன், அதே கூட்டணி வழங்கியுள்ள படம் மாமன் மகள். இதுவும் சூப்பர் ஹிட்டாகும் என்ற நம்பிக்கையில் படம் அமோக விற்பனையாகியிருக்கிறது.

www.padippakam.com

...ன மூலம் ...ராஜாவின் ... படத்தில்

...ல் உருவான அதிரடிப்படை படத்தைச் சொந்தமாகத் தயாரித்துக் ... ஒரு படத்தைத் தயாரித்து நடிக்கவுள்ளார். ஆர்.கே.செல்வமணி

...கிய மூன்று படங்களை ஒரே நேரத்தில் தயாரித்து வரும் டி.சிவா, ...டிக்கும் படமொன்றை தயாரிக்கவுள்ளார்.

...ய்யும் பிலிம் சேம்பரில் அண்மையில் 'தாலி கட்டத் தடுமாறிய ... செய்யப்பட்டிருக்கிறது.

... அம்மாய் ஜோரு' என்ற தெலுங்குப் படத்தில் அறிமுகமாகியவர் ...ாக தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

...ற படங்களில் வில்லனாக நடித்துள்ள கரிகாலன் தற்போது ... ஆபாவாணனின் 'கறுப்பு ரோஜா' ஆகிய படங்களில் வில்லனாக

... மணிக்கொடி' படத்தில் நடிக்கும் கவுண்டமணிக்கு என்ன வேடம் ...த்து வருகிறார்.

...ில் இளையராஜா தான் இசையமைக்க இருந்தார். இப்போது ...த்தில் அறிமுகமான மகேஷ் இசையமைக்கிறார்.

...யக்கத்தில் சரத்குமார் நடிக்கவிருந்த 'இந்தியா டுடே' என்ற ...ல் நிறுத்தப்பட்டது. தற்போது'இந்தியா டுடே' என்ற பெயரில் ...ரிக்கப்படுகின்றன.

...ாரின் மகன் அருண்குமார் நடிக்கும் 'முறை மாப்பிள்ளை' ...நு கதாநாயகியாக அறிமுகமாகிறார்.

...ன்' போன்ற படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ள அப்துல் ...ார். இவர் முதன் முறையாக இயக்கும் இப்படத்திற்கு 'மனசு'

## சுருட்டுப் பிரியர்

முஸ்தபா படத்தில் ஐயர் வீட்டில் குடியிருக்கும் முஸ்லீம் இளைஞராக நடித்துள்ளார் நெப்போலியன். சுருட்டுப்பிடிக்கும் பழக்கமில்லாத நெப்போலியன் முஸ்தபா படத்திற்காக இருமி இருமி சுருட்டுப் பிடித்தாராம். இப்போது சுருட்டுப் பிரியராகவே மாறிவிட்டார்.

## ரஜினி ஒரு வியாபாரி
## நடிகர் கமல் பேட்டி

நடிகர் கமலஹாசன் சமீபத்தில் ஒரு பேட்டியில் ரஜினிகாந்த் பற்றி கூறியிருப்பது இது:

கேள்வி: நடிகர்கள் தங்கள் பணத்தை திரையுலகில் முதலீடு செய்யாமல் பிற துறைகளில் முதலீடு செய்ய வேண்டும் என்று ரஜனிகாந்த் கூறி இருக்கிறாரே?

கமல்: அதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். அவர் ஒரு வியாபாரி. கலைஞனாக இருக்கும் அதிஷ்டம் பெற்றவர். நான் கலைஞன். அதிஷ்டவசமாக வியாபாரியானவன். எனவே எங்கள் இருவருடைய கருத்தும் மாறுபட்டுத்தான் இருக்கும். நான் என்னுடைய பணத்தை சினிமாவில்தான் போட்டிருக்கிறேன். மேலும் பணம் கிடைத்திருக்கிறது.

ரஜினிகாந்த் எனது நண்பர். நான் சொல்வதை அவர் தவறாக எடுத்துக்கொள்ளமாட்டார்.

## மறுபடி எழுகிறார்

கதாநாயகனாக நடித்து இடையிலே காணாமல் போயிருந்தவர் சரவணன். இப்போது 'விஸ்வநாத்' என்னும் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். ஏற்கனவே யாகம் என்ற பெயரில் தயாராகி பாதியில் நின்ற படத்தைத்தான் தனது சொந்த தயாரிப்பில் தொடர்கிறார் சரவணன்.



ராஜ்கிரண் — வனிதா விஜயகுமார்
படம் — மாணிக்கம்

## இந்தியைத் தழுவுகிறார்கள்

"ஹம் ஆப்கே ஹைன் கோன்" மாபெரும் வெற்றிபெற்ற இந்திப் படம். இப்போது அந்தப்படத்தை தழுவி தமிழில் தயாராகும் படம் 'பூவே உனக்காக'. இயக்குவது விக்ரமன். விஜய்-சங்கீதா ஆகியோர் ஜோடியாக நடிக்கின்றனர். விஜய் நடிக்கும் பல படங்கள் இந்திப் படங்களின் தழுவல்களாக இருப்பது வழக்கமாகிவிட்டது.

## விஜயகாந்த் — நக்மா

'தாயகம்' படத்தையடுத்து ராவுத்தர் பிலிம்ஸ் தயாரிக்கப் போகும் படம் பெரும் பொருட் செலவில் உருவாகப் போகிறது. படத்திற்கு 'உளவுத் துறை' என்று பெயர் வைத்துள்ளனர். தாயகம் படத்தில் விஜயகாந்தின் ஜோடியாக நடித்தவர் ரஞ்சிதா. உளவுத்துறை படத்தில் விஜயகாந்தின் ஜோடியாக நடிக்க நக்மாவை அணுகியிருக்கிறார்கள். விஜயகாந்த் இதுவரை நக்மாவோடு ஜோடி சேரவில்லை.

## சம்பளம் 25 இலட்சம்

நக்மா இதுவரை வாங்கிய சம்பளம் 15 இலட்சம். இனி புதிதாக ஒப்பந்தமாகும் படங்களுக்கு 25 இலட்சம் வாங்க முடிவு செய்திருக்கிறார். 'ரகசியப் போலீஸ்' படம் வசூலில் சாதனை படைக்கும் என்ற நம்பிக்கையில் தனது மவுசு ஏறும் என்று கணக்குப் போட்டுள்ளார் நக்மா. அதனால்தான் சம்பள உயர்வு.

## புலிகள் தப்பியது படமாகிறது

ஆர்.கே.செல்வமணி தனது படங்களில் உண்மைச் சம்பவங்களை புகுத்திவிடுவார். அதனால்தான் ராஜீவ் கொலையை வைத்து எடுக்கப்பட்ட 'குற்றப்பத்திரிகை' படம் வெளிவராமல் திணறுகிறது. இப்போது சத்யராஜ் நடிக்க ஆர்.கே.செல்வமணி இயக்கும் படம் அடிமை. வேலூர் சிறையிலிருந்து சுரங்கம் தோண்டிப் புலிகள் தப்பித்த சம்பவத்தை படத்தில் புகுத்தப் போகிறார் செல்வமணி.



## பெரிய குடும்பம் ஹிட்

'பெரிய குடும்பம்' படம் வெளிவந்த சூட்டோடு 'மிஸ்டர் மெட்ராஸ்' படமும் வெளியாகியது. இரண்டும் பிரபு படங்கள்.

இரண்டிலும் நகைச்சுவையே பிரதானம். எனவே இரண்டில் ஒன்று தியேட்டரை விட்டு ஓடிவிடும் என்று நம்பப்பட்டது.

ஆனால் இரண்டு படங்களுமே நல்ல வசூலோடு ஓடிக் கொண்டிருக்கின்றன. பெரிய குடும்பம் 50 நாட்களை தாண்டியும் வசூல் கலகலப்பாக இருக்கிறது. நவம்பரில் 'சீதனம்' வெளியாகிறது. பிரபுவின் காட்டில் மழை.



கஜோல்

## குளியல் போட்டி

'புதுநிலவு' படத்தில் வினிதாவுக்கு ஒரு குளியல் காட்சி. அதற்குப் போட்டியாக அதே படத்தில் சங்கவியையும் குளிக்கவைத்திருக்கிறார்கள். அதாவது கவர்ச்சியில் குளிப்பு. போட்டி காரணமாக இருவரும் சென்சாருக்கு வேலை வைத்திருக்கிறார்களாம்.



சரத்குமார் — நக்மா
படம் — ரகசிய பொலிஸ்

## இறக்குமதிப் புயல்

இந்தி நடிகை கஜோல் தமிழுக்கு வரப் போகும் செய்தியை பல மாதங்களுக்கு முன்னரே 'சினி விசிட்' வாசகர்கள் அறிந்தீர்கள். இப்போது சென்னையில் இருக்கிறார் கஜோல். கவர்ச்சி விசயத்தில் சற்றும் வஞ்சகம் செய்யாத கஜோலின் வருகையால் நக்மாவின் மார்க்கெட் ஆட்டம் காணும் அபாயம் இருக்கிறது. நக்மா சலித்துப் போகும் நிலையில்,கஜோலை கொண்டு வந்திருக்கிறார்கள்.

## ...க்லெட்'

... பிடிக்கும். 'சாக்லெட்' ...ில் அசத்தலான பமிற்சி ... குதிரைகளில் உள்ள ... அமர்ந்துவிட்டால் தன் ...தை அடக்கி விருப்பம் ... என்கிறார் விசித்ரா.

## எட்டு இலட்சம்

அருண்பாண்டியன் நடித்த படங்கள் எதுவும் சமீபகாலமாக ஹிட்டாக வில்லை. அசுரனும் படுதோல்வி. 'துறைமுகம்' படம் தாமதமாகி வெளியாகியுள்ளது. ஆனாலும் தனது சம்பளத்தை எட்டு இலட்சமாக உயர்த்தி விட்டார் அருண்பாண்டியன்.

## தொட்டாச் சிணுங்கி

கார்த்திக் ஒரு பாடகர். ரேவதியோடு நட்பாகப் பழகுகிறார். ரகுவரனைப் பிடித்து ரேவதிக்கு திருமணம் செய்து வைக்கிறார். ரேவதி கார்த்திக் நட்பு தொடர்கிறது. ரகுவரன் சந்தேகப்படுகிறார். அது புரிந்து கார்த்திக் ரேவதியோடு நட்பை முறித்துக்கொள்கிறார். தொட்டாச்சிணுங்கியில் பாதிக்கதை இதுதான். ஜெரால்ட், பிலிம் என்னும் இரண்டு அவுஸ்திரேலியா இசைக்கலைஞர்கள் தான் படத்திற்கு இசையமைக்கிறார்கள்.

## பிரசாந்த் பயிற்சி

கல்லூரி வாசல் படத்திற்காக டிரம்ஸ் இசைக்கருவியை அடிக்க கற்றுக் கொள்கிறார் பிரசாந்த். கல்லூரி வாசலில் டிரம்ஸ் இசைக் கலைஞர் வேசம்.


படிப்பகம்

www.padippakam.com

# காதல் விசயத்தில் நீங்கள் எப்படி?

காதல் அனுபவம் இல்லாத இளமைப் பருவம் பெரும்பாலும் கிடையாது.

அப்படி இல்லாதவர்களுக்கு வாழ்க்கை சுவையாக இருக்காது. உங்கள் வாழ்க்கை எப்படிப்பட்டது? நீங்கள் காதலுக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறீர்களா?

எளிய சுய சோதனை மூலம் உங்களை நீங்களே தெரிந்து கொள்ளலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள 12 கேள்விகளுக்கு 'ஆம்' 'இல்லை' என பதில் அளியுங்கள்.



1. மெலிதான துணியிலான ஆடைகளை அணியும் பெண்கள் மிகவும் கவரக்கூடிய வகையில் இருப்பார்கள் என நான் நினைக்கிறேன்.

2. சரியான வாழ்த்து அட்டையை பொறுக்கி எடுக்க எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செலவிடுவேன். காரணம் அதை பெறுபவர்கள் என்னைப் போலவே ஒவ்வொரு வார்த்தையையும் படிப்பார்கள்.

3. நான் எந்த அளவு நேசிக்கப் படுகிறேன் என எனக்கு பிடித்தமானவரிடம் அடிக்கடி கேட்பேன்.

## சுய பரிசோதனை

4. என்னிடம் ஏராளமான கவிதைப் புத்தகங்கள் உள்ளன.

5. உண்மையிலேயே மிகவும் ஆர்வத்தைத் தூண்டக் கூடிய காதல் கடிதங்களை நான் எழுதி உள்ளேன்.

6. தினமும் நடக்கும் சம்பவங்களை நான் மிகவும் மிகைப்படுத்தி சொல்வதாக என் நண்பர்கள் கூறுகின்றனர்.

7. எனக்கு பிடித்த பாடல்கள் என்று நான் கருதுபவைகளில், ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு விசேஷ பொருள் இருக்கும்.

8. முதல் பார்வையிலேயே காதல், திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றன என்பதை எல்லாம் நம்புகிறேன்.

9. ஒரு சினிமா படத்தின் முடிவுப் மகிழ்ச்சியாக இல்லை என்பது முன்னதாக தெரிந்தால், அந்தப் படத்தை நான் பார்க்க மாட்டேன்.

10. வீரம் போய் விட்டது என்பதை நான் நம்பமாட்டேன். அது எந்த நேரத்திலும் மீண்டும் வரும்.

11. டிஸ்கோ, பிரேக் டான்ஸ் வகுப்புகளில் ஆண்களும், பெண்களும் கலந்து கொள்ள வேண்டும்.

12. பூக்கள் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்.

## மதிப்பெண்

9-12 'ஆம்'-நீங்கள் உண்மையில் மன்மதன்தான் (பெண்ணாக இருந்தால் ரதி) மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் மென்மையான இசை, பூக்கள் ஆகியவற்றை நீங்கள் விரும்புவீர்கள். யாரையும் வசீகரிக்கும் சக்தி உங்களுக்கு உண்டு. உங்கள் காதலரும் அதே குணத்தைப் பெற்றிருப்பார்.

5-8'ஆம்'-காதலருடன் இருக்கும் நாள்தான் உங்களுக்கு பிடித்தமான விடுமுறை நாள். உங்கள் வாழக்கையில் காதல் எப்போதும் இருக்கும்.

0-4'ஆம்'-உங்களுக்கு விருப்பமானவரை இரகசியமாக சந்திக்க கூட உங்களால் முடியாது. ஒரு பூவைக்கூட உங்கள் காதலியிடம் கொடுக்க உங்களுக்கு துணிச்சல் கிடையாது. நீங்கள், உங்களை கொஞ்சம் மாற்றிக் கொண்டால் போதும். எப்போதும் மகிழ்ச்சிதான்.

# குழந்தையின் தலை சுடுகிறதா?

குழந்தைகளுக்கு தலை எப்பொழுதும் சூடாக இருப்பதற்குக் காரணம், தலையில் இரத்த ஓட்டம் அதிகமாக இருப்பதுதான். இது தவிர காய்ச்சல் அதிகமாக இருக்கும் போது கூட தலையும் உடம்பும் சூடாக இருக்கும். இது மாதிரியான நிலையுள்ள குழந்தைகளுக்கு உடலில் வெப்ப நிலை ஏறுவதே தெரியாது. தேர்மோமீற்றர் (வெப்பமானி) வைத்துப் பார்க்க வேண்டும். சட்டை போடுவதாலும், தோல் பகுதியில் இரத்த ஓட்டம் குறைவாக இருப்பதாலும் உடல் கொதிக்கும்.

இதைக் கட்டுப்படுத்த ஈரத்துணி ஒத்தடம் கொடுக்க வேண்டும். ஒத்தடத்திற்குப் பயன்படுத்தும் தண்ணீர் சூடாகவோ அல்லது அதிக குளிர்ச்சியாகவோ இல்லாமல் இருக்க வேண்டும்.

ஒத்தடம் 5 முதல் 10 நிமிடம் வரை தான் கொடுக்க வேண்டும். அதற்கு அதிகமாக கொடுத்தால் வேறு ஏதாவது விளைவுகள் ஏற்படும். குறைவாகக் கொடுத்தால் எந்தப் பயனும் இருக்காது. குழந்தையின் கழுத்து, நெற்றி, அக்குள், தொடையிடுக்கு ஆகிய இடங்களில் மட்டும் ஈரத்துணியை ஒற்றி எடுக்க வேண்டும். வேறு இடத்தில் ஈரம் படக் கூடாது. இப்படிச் செய்தால் இரத்த ஓட்டம் சீராக நடைபெறும்.

இந்தப் பகுதிகளில் தான் இரத்தத்தை எடுத்துச் செல்லும் தமனிகள் வெளிப் பக்கமாக இருக்கும். இந்தத் தமனிகள் கொண்டு செல்லும் இரத்தத்தை குளிரச் செய்தாலே குழந்தைகளுக்கு ஏற்படும் அதிக தலைச்சூடு தணிந்து விடும். இதை மருந்து மாத்திரையால் சரிப் படுத்தி விடலாம் என்று நினைப்பார்கள். ஒத்தடமும் கொடுக்க வேண்டும். சில குழந்தைகளுக்கு உடல் உஷ்ணத்தைக் கட்டுப் படுத்த முடியாத போது திணறல் ஏற்படும். வலிப்பு வரவும் வாய்ப்புண்டு. இது மருந்து. மாத்திரையுடன் ஈரத்துணி ஒத்தடம் கொடுத்தால் சரியாகிவிடும்.



# சின்ன சின்ன அழகுக் குறிப்புக்கள்.

முகத்தை மென்மையாகவும், கவர்ச்சியாகவும் வைத்துக்கொள்ள பெண்கள் பெருமுயற்சி செய்கிறார்கள். இவர்களுக்கு இதோ ஒரு சுலபமான வழி.

முட்டையின் மஞ்சட்கருவை தனியே எடுத்து அத்துடன் ஒரு தேக்கரண்டி அளவுக்கு தேன் அல்லது ஒலிவ் எண்ணெய், கொஞ்சம் கோதுமை மாவு எடுத்து, இவற்றை எல்லாம் ஒன்றாக கலந்து முகத்தில் தடவ வேண்டும்.

நன்கு உலரும் வரை அப்படியே விட்டு வைத்து, பிறகு இளஞ்சூட்டுடன் கூடிய நீரில் முகத்தை கழுவி விட வேண்டும். மாநிறமான பெண்கள் மேற்கண்ட கலவையோடு கஸ்தூரி மஞ்சளையும் அரைத்துச் சேர்த்துக் கொள்ளலாம்.



***

முகத்தில் உள்ள கரும்புள்ளிகளுக்கு 15 நாளைக்கு ஒரு முறை தொடர்ந்து ஃபேசியல் செய்ய வேண்டும். எத்தனை முறை செய்ய வேண்டும் என்பதை அழகு நிலையங்களில் போய்த் தெரிந்து கொள்ள வேண்டும்.

வீட்டில் ப்ளீச்செய்வது அவ்வளவு நல்லதல்ல. கலவையின் விகிதாசாரம் மாறு பட்டால் பக்க விளைவுகள் ஏற்படும். இல்லாவிடில் வேண்டிய அளவு கடலை மாவு, பால் ஏடு கலந்து முகத்தில் தேய்த்துக்கொண்டு சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரில் முகம் கழுவினால் பலன் கிடைக்கும்.

தலையில் உள்ள பொடுகுகளை நீக்க வெந்தயத்தைப் பொடி செய்தோ, முதல் நாள் இரவு ஊற வைத்த வெந்தயத்தை மோரில் கலந்தோ வெறும் வயிற்றில் சாப்பிட்டால் நல்லது.

முகத்தில் பருக்கள் நிறைய இருந்தால் தோல் நிபுணரைச் சந்தித்து ஆலோசனை பெற்றுத்தான் நீக்க வேண்டும். தவிர கண்ட கண்ட கிறீம்களை முகத்தில் தடவக்கூடாது.

## வீட்டுக் குறிப்புகள்

★ தோசைக்கல்லில் வெடிப்புக்கள், ஓட்டைகள் ஏற்படுவதைத் தவிர்க்க, தோசை வார்த்து முடிந்ததும், கல்லை நன்றாக எண்ணெய்த் துணியால் துடைத்து விடுங்கள்.

★ ஷூ பொலிஷ் கெட்டியாகி விட்டால், ஒரு கத்தியினால் முடிந்தவரை பொடி செய்து விட்டுச் சிறிதளவு ரேப்பன்டைன் விட்டுக் குழையுங்கள். இப்போது சரியாகி விடும்.

★சுடுநீர்ப் போத்தல்களில் (ஃபிளாஸ்குகள்) வரும் துர்நாற்றத்தைப் போக்க சிறிது அசெற்றிக் அமிலத்தை நீரில் கலந்து அந்த நீரால் சுடுநீர்ப் போத்தலைக் கழுவினால் துர்நாற்றம் போய்விடும்.

★ எலுமிச்சம் பழத்தை வெட்டிச் சாறு பிழிந்த பிறகு அந்த மூடிகளைக் குளிர்சாதனப் பெட்டியில் போட்டு வையுங்கள். உணவுப் பண்டங்கள் மீது இதமான வாசனை படியும்.

♥ ♥ ♥

## சாய முடி



அமெரிக்கப் பெண்கள் தங்களின் தலைமுடி கறுப்பாக இருப்பதை விட, பழுப்பாகவோ சிவப்பாகவோ, வெளுப்பாகவோ இருப்பதைத்தான் விரும்புகின்றனர். இறக்குமதி செய்யப்படும் கறுப்பு முடியை விஷேச சாயக் கலவைகளைப் பயன்படுத்தி, மேற்சொன்ன நிறங்களில் மாற்றித் தயாரிக்கின்றனர். தூய வெண்மையான, விக்குகளுக்கு கிராக்கி அதிகம். விலையும் கூடுதல். இதைத் தயாரிக்க மூன்று முதல் நான்கு மாதங்கள் அதிகமாம்.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்

பரிசுக் கூப்பன்

இல 10

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்

இணைந்து வழங்கும்

தங்கமாலை

பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.

* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.

* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.


# லேடீஸ் ஸ்பெஷல்

## பரிமாறுவதில் இதம்!

உணவு என்பது வயிற்றை நிரப்புவதற்காக மட்டுமல்ல. ஊட்டத்தை உடலுக்குத் தருவதோடு அது நின்று விடுவதில்லை. மனதையும் அது தொடுகிறது.

மனது என்பது குதிரை மாதிரி, லகானை பிடித்திருந்தால் திமிறாது. இறுக்கினால் அசைவின்றி இருக்கும். பழக்கமில்லாத போது தான் இவையெல்லாம். மனத்தோடு பழகிவிட்டால்.....! அருகிலிருந்தபடி லேசாய் வருடிக் கொடுத்தாலே போதும். பரமசுகம்.

மனது எனும் குதிரை ஆணுக்கும், பெண்ணுக்கும் உண்டு.

உணவுக்காக அமரும் வேளை இருக்கிறதே! இந்தச் சமயத்தில் தான் புஸ்வாணமாய் போக வேண்டிய விஷயங்கள் பூதாகாரமாய்க் கிளம்பி சண்டையில் கொண்டு வந்து விடும்.

குடும்பத்தலைவன் என்று ஆணை முன்னிலைப் படுத்தியிருந்தாலும், குடும்பத்தில் உள்ள எல்லாக் காரியங்களிலும் பெண்ணாகிய நாம் தான் யோசிக்கிறோம். அதை நாம் தான் வெளிக்காட்டுகிறோம். நாம் சொல்வதை செயற்படுத்துபவர்களாக ஆண்கள் இருக்கிறார்கள்.

உணவு வேளையை, சாதித்துக் கொள்ளக் கூடிய களமாக, போருக்குரிய இடமாக ஆக்கிக் கொண்டுள்ளோம். இது தவறு.

உணவு உண்ணும் அந்த இனிய வேளையில், நாம் அவருக்கு மனைவி என்றோ, அவர் நமக்கு கணவர் என்றோ நினைக்காமல், எதிரில் அமர்ந்து சாப்பிடுபவர் நம் கணவரல்ல, குழந்தை (நம் குழந்தை, பிறர்குழந்தை என்ற பாகுபாடு பார்க்க முடியாதே) என்று உணருங்கள்.



குழந்தை சாப்பிடுவதை எவ்வளவு அழகாய் இரசிப்போம்? அது மாதிரி இரசியுங்கள். முகத்தில் இயல்பான இனிமையைக் கூட்டி, இன்முகத்தோடு பரிமாறுங்கள். அது வெறும் உணவுப் பரிமாற்றமாய் இருக்காது. மனப்பரிமாற்றமும் அங்கு மறைமுகமாய் நடந்தேறும்.

இனிமைக்கு இணை எதுவுமில்லை. கூடி வாழும் இயல்பு கொண்ட நாம், இனிமை சேர்த்துச் சிரித்து வாழ, மகிழ்ச்சி நிச்சயம்.

சமைப்பது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் பரிமாறுவதில்தான் சுவையே இருக்கிறது.

## சமைப்போம் சுவைப்போம் (தொகுத்து தருவது சுகந்தினி)



### தேங்காய் அல்வா

**தேவையான பொருட்கள்;**

- கோதுமை மா - 100 கிராம்
- சிறிய ரவை - 100 கிராம்
- பொட்டுக்கடலை மாவு- 100 கிராம்
- தேங்காய்த் துருவல் - ஒரு மூடி
- சீனி - 200 கிராம்
- நெய் - 2 மேசைக்கரண்டி
- முந்திரிகை வற்றல் - 10 கிராம்
- உப்புத்தூள் - 2 சிட்டிகை

**செய்முறை.**

சிறிது நெய் விட்டு ரவை, கோதுமை மாவு ஆகியவற்றை உப்புத்தூளுடன் தனித்தனியாகப் பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். தேங்காய், முந்திரிகை வற்றல் இரண்டையும் நன்றாக வெண்ணெய்போல் அரைக்கவும். சீனி, வறுத்த கோதுமை மாவு, ரவை, அரைத்த தேங்காய், முந்திரிகை வற்றல், பொட்டுக்கடலை மாவு எல்லாவற்றையும் வாயகன்ற பாத்திர மொன்றில் போட்டு, ஒரு கப் தண்ணீர் விட்டு அடுப்பில் பத்து நிமிடங்கள் வைக்கவும். பின்னர் அடுப்பிலிருந்து இறக்கி, சூடு ஆறியதும் துண்டுகள் செய்யவும்.

# ரன் குவிக்கும் மெஷின்

ஸ்போட்ஸ்

## பிரட்மனும்-பிரையன் லாராவும்

கிரிக்கெட் உலகில் இன்றைய தேதியில் ரன் குவிக்கும் இயந்திரம் பிரைன் லாராதான்.

மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் அணி பல சரிவுகளை சந்தித்துக் கொண்டிருந்தாலும் லாரா பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

சார்ஜாவில் இலங்கைக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவு பெற்ற ஒரே ஒரு வெற்றிக்கு லாராதான் சொந்தக்காரர்.

லாரா ஆட்டமிழந்துவிட்டால் மேற்கிந்தியத் தீவு அணியே ஆட்டம் கண்டது போலாகிவிடுகிறது.

சார்ஜாவில் இதுவரைகாலமும் நடைபெற்ற ஒரு நாள் போட்டிகளில் அதிகபட்ச ரன் குவித்தவர் லாராதான். பாகிஸ்தானுக்கு எதிராக 153 ரன்களை முன்னர் சார்ஜாவில் குவித்து சாதனை படைத்தவர் லாரா.

உடைக்கப்படாமல் இருந்த அந்தச் சாதனையை இம்முறை லாராவே உடைத்தார். இலங்கைக்கு எதிராக ஆடி 169 ரன்களை குவித்துவிட்டார் லாரா.

1985 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவு வீரர் விவியன் ரிச்சட்ஸ் 189 ரன்கள் குவித்திருந்தார். இன்றுவரை ஒருநாள் போட்டியில் அதுதான் சாதனை. அதனை எட்டும் வாய்ப்பு லாராவுக்கே இருக்கிறது. சமீபத்தில் சார்ஜாவில் 169 ரன்களை லாரா குவித்தபோது விவியன் ரிச்சட்ஸ் படைத்த சாதனை உடையப் போவதாக நம்பப்பட்டது. சாதனையை உடைக்க 20 ரன்களே பாக்கியா யிருந்தபோது அவுட் ஆனார் லாரா.

டெஸ்ட் போட்டிகளில் லாராதான் 375 ரன்களை குவித்து ஆட்டமிளக்காத சாதனை மன்னன்.

டெஸ்ட் தொடர்களில் இரண்டுமுறை 700 ரன்களை கடந்தும் லாரா சாதனை படைத்துள்ளார். அதன் மூலம் டெஸ்ட் தொடர்களில் 700 ரன்களை கடந்த துடுப்பாட்ட வீரர்களில் லாரா இரண்டாவது இடம் பெறுகிறார்.

அவுஸ்திரேலிய வீரர் டோனால்ட் பிராட்மன் 1930–32ம் ஆண்டுகளில் 4 முறை 700 ரன்களை கடந்து சாதனை படைத்திருந்தார்.

1930ம் ஆண்டு பிராட்மன் முதல் முறையாக இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்தபோது முதல் தொடரிலேயே 5 டெஸ்ட் போட்டிகளில் 7 இன்னிங்ஸ் விளையாடி 974 ரன்களை குவித்து சாதனை படைத்தார். அதில் ஒரு இன்னிங்ஸ் அதிக பட்சமாக 334 ரன்களை குவித்தார். அதில் ஒரே நாளில் 304 ரன்களை குவித்து முடித்திருந்தார். அந்த டெஸ்ட் தொடரில் பிராட்மனின் சராசரி 139.14 ஆகும். இந்தச் சாதனையையும் இதுவரை யாரும் நெருங்கவில்லை.

இங்கிலாந்து வீரர் டபிள்யூ. ஆர்.ஹாமண்ட் 905 ரன்களை ஒரு டெஸ்ட் தொடரில் குவித்து இரண்டாவது இடம் பெறுகிறார். அவரது



சராசரி 113.12.

அவுஸ்திரேலிய வீரர் மார்க்டெய்லர் டெஸ்ட் தொடரில் 839 ரன்களை குவித்து மூன்றாவது இடம் பெறுகிறார். மற்றொரு அவுஸ்திரேலிய வீரரான ஹார்வி 834 ரன்களை குவித்து 4வது இடம் பெறுகிறார்.

விவியன் ரிச்சட்ஸ் 829 ரன்களைக் குவித்து 5வது இடம்பெறுகிறார்.

எனினும் 700 ரன்களை டெஸ்ட் தொடரில் இருதடவை கடந்தவர்களில் லாராவுக்குத்தான் இரண்டாவது இடம். இன்னும் மூன்று டெஸ்ட் தொடர்களில் 700 ஐத் தாண்டினால் பிராட்மனின் சாதனையை லாரா உடைத்துவிடுவார்.



படிப்பகம்

www.padippakam.com

## உபதேசம் உனக்கல்லடி....

ஒரு
வேட்டுச் சத்தத்தின்
வைகறை விடியலில்
ஒரு
பூமித்தாயின்
புலம்பல்.
இன்னும் இன்னும்- என்
இதயத்தை
இரத்தத்தால்
சாயப்படுத்தாதீர்கள்
**
இளம்
தென்றலை வேகப்படுத்தும்
சாச் செயல் எதற்கு
பூமியின் குரூரம்
புரியவில்லையா?
**
வதைப்படும்
புதைப்படுதல்தான்-இன்றின்
தேசிய விளையாட்டோ?
**
இன்னும் இன்னும்
ஆயுதங்களையே
அமோகப்படுத்தும்
அக்கிரமம் வேண்டாம்
சிநேகங்களைச்
சேகரிக்கும்
சிந்தனையைச்
செப்பனிடுங்கள்

**
நீதி நித்திரையாகி
சட்டம் சட்டைப் பையைப்
போஷித்துக் கொள்ளும்
சரித்திரம் வேண்டாம்
சற்றுவட்டம், சற்றுவட்டம்-என்று
சமாதானத்தையே சுற்றி
வட்டமிடும்
மந்திரங்களை மரணியுங்கள்.
**
ஓ..
காரணமே-என்
கவலைகள் உன்னில்
கருத்தரித்துக் கொள்ளட்டும்
நாளைய நற்தேச
மகவின் பேற்றுக்காக
**
இல்லையெனில்
மறுபடியும், மறுபடியும்
துப்பாக்கிக் கோழிகள்
கூவும்
**
செங்குருதிச்
சாக்காட்டில்
மனிதம் மரித்துப் போகும்
தேசம்!

திவேப்பிரியன்-பொத்துவில்-05

## கவிஞனின் நாட்குறிப்பு

ஒருவேளை,
ஆதவனுக்கு முன்னமே
நீ எழுந்திருக்கலாம்...

கடிகாரமும் கையுமாக,
காலைக் கடன்களை
முடித்திருக்கலாம்...



உனக்கு
பிடித்தமான- அந்த
பச்சைக்கலர் தாவணிக்குள்,
உன்னை மறைத்திருக்கலாம்...

ஆடம்பரமில்லாத
இந்தத் தேர் அசைந்து,
கோவிலுக்குப் போயிருக்கலாம்...

பள்ளிக்கூடத்தில்-
பட்டாம் பூச்சியாக
சிறகடித்திருக்கலாம்...

உள்ளத்தில்-
எத்தனையோ உவகைகள்
எழுந்து மறைந்திருக்கலாம்...

இன்னுமின்னும்
எத்தனையோ நடந்திருக்கலாம்...
ஆனால்...
ஒன்றுமட்டும் நிச்சயம்;

கண்மணியே-
உன்னை மட்டுமே
என் மனது நினைத்திருக்க,

நீ அடியோடு
மறந்துவிட்டவற்றுள்
என் உருவம் ஒன்றாயிருக்கும்!!

அட்டாளை ஜெயசேகரன்-வவுனியா



# தேன் கிண்ணம்



## ஒரு கோலம் உருமாறுகின்றது

இமைகள்
திறந்திருந்தும்
விழிகளில் ஏனோ
வெளிச்சம் இல்லை
**
நினைக்க நினைக்க
இனித்தவைகள்
நிஜவாழ்க்கையில்
நெருப்பாய்
தகிக்கின்றன!
**
குருடனுக்கு
எதற்கு
கூலிங்கிளாஸ்!
முடவனுக்கு
ஏன்
பாத யாத்திரை!!

இருட்டிய பின்னர்
வீட்டினுள்ளே
சூரியனைத் தேடும்
மனிதர்களில்
நானும் ஒருவன்!
**
எங்கே போய்
எதைத் தேடுவது...
யாரிடம் போய்
யாரைக் கேட்பது
**
விதி மாற்றிய
என் பாதையை
எந்த விழி கொண்டு
பார்ப்பது!
**

உன்
ஈரப் பார்வைக்காக்
ஒரு ஈரமாய்
இன்னும் நான்
உபவாசம் இருக்கிறேன்
விழிகளில் நீர் நிறைந்து
உறைந்து போகும் வரை
உன் உருவமே
நிறைந்திருக்கும்...

எஸ்.கோதரன்-மொதரை



## தாமதமாக வந்த விண்ணப்பத்திற்கு.....



கருங்குயிலின்
குரலையும்
கான மயிலின்
நடனத்தையும் பறித்து
உனக்குத் தருகிறேன்!
--oo--
வெண் புறாவின்
சாந்தத்தையும்
வெண்ணிலாவின் ஒளியையும்
உன்னில் நனைக்கிறேன்!
--oo--
சூரியனைப் பறித்து
அதன் சூட்டைத் தணித்து
உன் கூந்தலுக்கு
பூவாய் சூட்டுவேன்!
--oo--
மோனலிசா புன்னகையை
உன் முகத்தில்
தீட்டுவேன்!
--oo--
நட்சத்திரங்களை
கோர்த்து
பிறையை பிடித்து
'பென்டனா'க சேர்த்து
உனக்கு
மாலையாக சூட்டுவேன்!

--oo--
வானவில்லையும்
அந்திச் சிவப்பையும்
உரித்து
உனக்கு சேலையாக்குவேன்!
--oo--
மேகத்தில்
மெத்தை தைத்து
உன் படுக்கைக்கு
பஞ்சணையாக்குவேன்!
--oo--
வானிலும்
கடலிலும்
நீலம் எடுத்து
உன் கண்ணுக்கு
மையாக பூசுவேன்!
--oo--
எல்லாம் செய்கிறேன்!
தயவு செய்து
நீ என்னை
காதலிக்கவில்லை
என்று மட்டும் சொல்...!

மீராவோடை எஸ்.நஸீம்



## கனவைச் சுட்டு.....

வஞ்சகியே!
ஓர் இதயம் மரணிக்க
தயாராயிருக்கிறது.
வந்து அஞ்சலி செலுத்தி விட்டுப்போ!
காதலில்
நீ எனக்கு
வெகுமானமாய் தந்தது
கவலைகளைத்தவிர வெறொன்றுமில்லை.
அதனால்...,
அன்றாடம் என் நெஞ்சில்
ஆயிரம் சர்ச்சைகள்...,
எந்தன் வாழ்வில்
நீ அறிமுகப்படுத்தியது
காதலையா அல்லது
கண்ணீரையா என்று!!
கால காலமாய்



காத்திருக்கும் எனக்கு
கிடைக்கப்போவது
காயங்கள் மட்டும்தான் காதலி!
எனவே...,
ஒரே ஒருமுறை இங்கு வா!
வந்து என் உறக்கத்தை
திருப்பி தந்து விட்டுப்போ!
நான் உறங்கப் போகிறேன்.
உன் கனவைச் சுட்டு...,
என் கவலையை விட்டு,
நிம்மதியாக.
இந்த மண்ணைத்துறந்து...,
அந்த காற்றை மறந்து...,
நிரந்தரமாக.

திட்டம்புவ-கலாயுவன்.

## பயணம்.......



யாதும் ஊரே
யாவரும் கேளீர்
ம்...
என் வீடு
என் தாய்நாடு
என் சகோதரம்

இலங்கை முழுவதும்
ஒன்றாம்
அப்போது ஏன்
என் 'அடையாளம்'
ஏன் 'பதிய'
வேண்டும்.

நீதியில் அனைவரும்
சமம்
ஓர்நாட்டு மக்கள்
சமாதானக் கனவு.
நாட்கள் நகர்ந்தது.
சண்டைகள் வந்தன.
வழியெங்கும்
சோதனை

சந்தேகம்

அடுத்த மாதம்
பரீட்சை.
ரியூசன் முடிந்து
வீடு வருகையில்
சந்தேகக் கைது
ஒருமாதக் காவல்
சிறப்புக் கவனிப்பு.

சந்தேகம் வலுத்தது

எம் நாடு இதுவா?
தெளிவு வந்தது.

அம்மா ஊருக்கு
போவோம்.
வெளிக்கிடுங்கள்

சுபாவரன்-கண்டி



## ஒரு வசந்தகாலம் காண

வீதியில் வீசப்பட்ட
நேச இதயங்கள்
மனிதர்களைத்
தேடியது.
மனித நேயங்கள்
பிச்சைப்
பாத்திரத்தில்
போடப்பட்டன.

**
தர்ம தேவதைகள்
அடைக்கலம் கேட்டு
அதர்மர்களின்
வீட்டுக் கதவை
தட்டுகின்றன.
எங்கும் சத்தம்
எதிலும் ரத்தம்

**
மௌனத்தின்
சத்தத்தில்
காதுகள் கேட்கும்
சக்தியை
இழக்கின்றன.
கர்ப்பப்பைகளில்
குழந்தைகள்
காது பொத்திக்
கலங்குகின்றன.

**
வீட்டு மரங்கள்
சன்னத்தின் முத்தத்தில்
மயங்கிச் சிரிக்கின்றன.
**
உணவுத் தட்டுக்கள்
பசியில் வீட்டுக் காரரை
வதைக்கின்றன.
**

பாவம் இவள்...
நாட்டிலும் வீட்டிலும்
வசந்த காலத்தைக் காண
ஏங்கி
தனக்குள்ளேயே உதிர்ந்து
போகின்றாள்...

ஜெயந்தி ஜெய்சங்கர்-
கொழும்பு-13

## இது ஒரு பெண்ணின் குமுறல்!

சாராயக் கண்களால்
என் தேகம் சீண்டுவதை
நிறுத்து!
--!!--
முறுக்கேறிய
உன் வெப்பப் பார்வைகளால்,
கொதிக்கிற தென் மனம்
அடுப்படிக் கல்லாய்!
--!!--
இறுக்கிய பிடிக்குள்
அகப்பையின் திணறல்;
என் மூச்சினை திரும்பி
வெடித்துப் போகும்

--!!--
ஆணினமே!
சாம்பல் மேட்டிலா
என் சுயத்தினை
தொலைத்தாய்?
--!!--
அடுக்களை புகையினூடே
என் கண்ணீரின் வெப்பம்
உலர்ந்து போயிற்று
--!!--
உன் விலாவில் ஒழுகிய
ஜீவிதத்துளிதான் நானும்!

--!!--
ஏன் என் சமத்துவக்
கழுத்தில்,
நீ விலங்கிடல் வேண்டும்?
--!!--
பெட்டைக் கோழி நான்
கூவக் கூவப் பொழுதென்ன
கடலுக்குள்ளா கரைந்திடும்,
--!!--
கூவுவேன்-
என் குரலின்
இனிமையிலோர்
விடியல் எழும்பு மட்டும்!

சிட்டாவை, அறபாத்.



## வயசாகி போச்சு



சேவல்களும்...
காகங்களும்..
விடியலுக்கு...
வக்காலத்து..
oo
தொடரும்..
விடியல்கள்..
நாளைகளை..
தமதாக்க..
oo
எங்கோ..
ஒரு மூலையில்..
பரிதவிக்கும்...
எதிர்பார்புகள்...
oo
கழிந்து சென்ற..
காலைகளை..
கணக்கிட்டிருந்தால்..
காலையும் நரைத்திடும்..
oo
எதிர்காலத்தை..
நினைத்து..நினைத்து...
மனதிற்கும்..
வயசாகிப்போச்சு.

என்.சஹாப்தீன்-ஒட்டமாவடி






### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி | காலை 6 மணி |
| திங்கள்-புதிய முயற்சி, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| புதன்- பயனுள்ள செயல், உறவினர் உதவி. | பகல் 2 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, கௌரவம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி - பெரியோர் உதவி, பொருள்வரவு. | பகல் 12 மணி |
| சனி- மனமகிழச்சி, காரியானுகூலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், காரியத்தடை. | காலை 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்-உயர்ந்த நிலை, பணவரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை. | காலை 6 மணி |
| வியாழன்- பயனற்ற செய்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- துயர்நீங்கும், இனசனநன்மை. | மு.ப. 9 மணி |
| சனி- உறவினர் பகை, மனக் கவலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனப்பயம். | பகல் 12 மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் உதவி, வீண் சந்தேகம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் பகை, மனக் கிலேசம். | காலை 7 மணி |
| வெள்ளி- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| சனி- உயாந்த நிலை, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணவிரயம். | பகல் 12 மணி |
| திங்கள்- இனசன நன்மை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்-துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| புதன்- பயனுள்ள செயல், மனக் கிலேசம். | காலை 7 மணி |
| வியாழன்-தூரஇடப் பயணம், பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| சனி- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

## இந்த வாரம் உங்கள் பலன்

(29.10.95 முதல் 04.11.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| துலாம் | - | சூரியன், வெள்ளி, இராகு |
| விருட்சிகம் | - | வியாழன், செவ்வாய் |
| கும்பம் | - | சனி |
| மேடம் | - | கேது |
| கன்னி | - | புதன் |

★ சந்திரன்-தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், பொருள் விரயம். | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, காரியசித்தி. | காலை 6 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- இனசன நன்மை, பண வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| புதன் - தொழில் விருத்தி, வீண் மனஸ்தாபம். | காலை 8 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, காரியசித்தி. | மு.ப. 9 மணி |
| சனி- பயனுள்ள செயல், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 2 மணி |
| புதன்- பெரியோர் பகை, மனக் கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், மனக்கிலேசம். | காலை 7 மணி |
| சனி- வீண் சந்தேகம், உயர்ந்த எண்ணம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை 6 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| வியாழன்-வீண் மனஸ்தாபம், தொழில்நிலை மந்தம். | காலை 6 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| சனி- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்- புதிய நட்பு, கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, பொருள் சேதம். | பி.ப. 1 மணி |
| சனி- புதிய முயற்சி , செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை. | காலை 8 மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 1 மணி |
| வியாழன்- பண வரவு, காரியசித்தி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மனப் பயம். | பகல் 12 மணி |
| சனி- இனசன நன்மை, மனக்கிலேசம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவிரயம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் பகை, மனப்பயம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் உதவி, பயனற்ற செயல். | காலை 7 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக்கிலேசம். | காலை 7 மணி |
| சனி- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8


படிப்பகம்





## காற்றுக் காலம்

சூறாவளிக் காற்றுதான்
சுழன்று சுழன்று அடிக்குது
நூறாயிரம் தூசியை
நுழைத்துக் கண்ணைக் கெடுக்குது

காலை அணிந்த சட்டையும்
காற்றில் கசங்கிப் போனது
காலைத்தடுத்து தள்ளுது
காதைக் காற்று கிள்ளுது

வெளியிலெங்கும் உறுமுது
வீட்டுக்குள்ளும் அதிருது
ஒளிமறைந்த இரவிலும்
ஊரைப் புரட்டிக் கவிழ்க்குது!

தலையைக் கவிழ்த்துச் சிரிக்குது
தண்ணீர் குடத்தை உருட்டுது
குலையை நடுக்கும் காற்றினை
கொண்டு எங்கே தொலைப்பது!

-பாண்டி மைந்தன்-

விரியும் அறிவுநிலை காட்டுவீர்-அங்கு
விழும் சிறுமைகளை ஒட்டுவீர்
தெரியும் ஒளி விழியை நாட்டுவீர்-நல்ல
தீரப் பெருந்தொழிலில் பூட்டுவீர்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# சேவல் போட்ட திட்டம்



பெரிய காடொன்றில் ஒரு நரி பசியுடன் இரை தேடி அலைந்து கொண்டிருந்தது. திடீரென்று அது வரும் வழியில், "கொக்கரக்கோ" என்ற சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் ஒரு மரத்தின் மீதிருந்து வந்தது. நரி அண்ணார்ந்து மரத்தைப் பார்த்தது. அந்த மரத்தின் கிளை ஒன்றில் ஒரு கொழுத்த சேவல் நின்றுகொண்டிருந்தது. அவ்வளவுதான். நரியின் வாயில் நீர் ஊறிவிட்டது.

'ஆகா! அருமையான சேவல். இதன் இறைச்சி மிகவும் சுவையாக இருக்கும். என் பசி அறிந்து கடவுளாகப் பார்த்து இங்கே அனுப்பி வைத்திருக்கிறார். இன்று இந்தச் சேவலை ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான்' என்று எண்ணியது.

உடனே அது சேவலிடம்,

"நண்பா! நீ மரத்தின் மீது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டது.

"இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டிருக்கிறேன்", என்றது சேவல்.

"நண்பா! ரசிப்பதற்குச் சிறந்த இயற்கைக் காட்சிகள் இங்கே இல்லை. என்னுடன் நீ வந்தால் இதுவரை பார்த்திராத அருமையான இயற்கைக் காட்சிகளை உனக்கு நான் காட்டுகிறேன்", என்று தந்திரமாகப் பேசியது நரி.

நரியின் தந்திரம் சேவலுக்குப் புரியாமல் இல்லை.

"இதோ பார் நரியே! எனக்கு வேறு வேலை இருக்கிறது. நீ இங்கிருந்து போய்விடு" என்றது சேவல்.

"நண்பா! நீ சொல்வதைப் பார்த்தால் மாநாட்டிற்கு வரவில்லை போல் தெரிகிறது" என்று மீண்டும் ஒரு வஞ்சக வலையை விரித்தது நரி.

"மாநாடா? என்ன மாநாடு?" என்று கேட்டது சேவல்.

"காட்டில் நேற்று ஒரு மாநாடு நடந்தது. இன்றும் மாநாடு நடக்கவுள்ளது. இதில் எல்லா உயிரினங்களும் கலந்துகொள்ள வேண்டும். நேற்றைய மாநாட்டில் உன்னைத் தவிர எல்லா உயிரினங்களும் கலந்து கொண்டன. நீ ஏன் நேற்று வரவில்லை?" என்று கேட்டது நரி.

"எனக்குத் தெரியாது. அதனால் வரவில்லை. நேற்று மாநாட்டில் என்ன நடந்தது? என்று கேட்டது சேவல்."

"பறவைகளாகிய உங்கள் இனத்திற்கும், மிருகங்களாகிய எங்கள் இனத்திற்கும் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது" என்றது நரி.

"சமாதான உடன்படிக்கை என்றால் என்ன?" என்று கேட்டது சேவல்.

"விலங்குகளாகிய நாம், பறவைகளாகிய உங்களை கொன்று தின்னக்கூடாது. ஒரு உயிருக்கு இன்னொரு உயிர் தீங்கு செய்யக்கூடாது" என்று புளுகியது நரி.

"அப்படியா?" என்று கேட்டது சேவல்.

"ஆமாம். இன்று முதல் நாம் நண்பர்களாக இருப்போம். இனி நீ என்னைக்கண்டு பயப்படத் தேவையில்லை. கீழே இறங்கி வா இருவரும் கைகுலுக்கிக் கொள்வோம்" என்றது நரி.

நரியின் வஞ்சகம் சேவலுக்கு நன்றாகப் புரிந்தது. ஆகவே அது நரியை அங்கிருந்து விரட்ட ஒரு திட்டம் போட்டது. அது கழுத்தைத் திருப்பி வேறு ஒரு திசையில் பார்த்தது'.

"நண்பா! நேற்று தீர்மானம் நிறைவேறியதும் ஒவ்வொரு உயிரினமும், பகையை விட்டொழித்து கைகுலுக்கி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டன. அந்தக் காட்சியைப் பார்க்கத்தான் உனக்குக் கொடுத்து வைக்கவில்லை. நான் பேசிக் கொண்டிருக்கிறேன். நீ எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறாயே?" என்றது நரி.

"கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். மாநாட்டில் நேற்று வேட்டை நாய்கள் கலந்து கொண்டனவா?" என்று கேட்டது சேவல்.

வேட்டை நாய்கள் என்றதும் நரியின் நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. இருப்பினும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு,

"அ... ஆமாம்! கலந்து கொண்டன. நானும் அவைகளுடன் கைகுலுக்கிக் கொண்டேன். ஏன் நீ திடீரென்று வேட்டை நாய்களைப் பற்றிக் கேட்கிறாய்?" என்று பயத்துடன் கேட்டது நரி.

"இல்லை... அந்தத் திசையில் சில வேட்டை நாய்கள் வருகின்றன. நீ சென்று அவைகளுடன் கைகுலுக்கிக் கொள். நான் பார்த்து ரசிக்கிறேன்" என்றது சேவல்.

நரிக்குப் பயம் பிடித்தது.

"அ... அப்படியா! இதோ நான் போய் கைகுலுக்கி விட்டு வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு ஓடத்தொடங்கியது.

'ச்சே பாழாய்ப் போன சேவல் எதற்குமே மசியவில்லையே. இந்த நேரத்தில் வேட்டை நாய்களிடம் சிக்கினால் கடித்தே குதறிவிடும்' என்று மனதிற்குள் திட்டிக்கொண்டு ஓடியது.

தான்போட்ட திட்டம் பலித்ததை எண்ணிச் சிரித்துக் கொண்டது சேவல்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.11.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 114
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 111

பரிசுக்குரியவர்:
றயீஸ் றாஜி,
மருதமுனை, ஸம்ஸ் மத்திய கல்லூரி, கல்முனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ந. காண்டீபன், மட்/கலைவாணி ம.வி. குருக்கள்மடம் (கி.மா). | எம்.ஐ. சித்தி ஸபானா, அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அக்கரைப்பற்று-06. |
| மெய்யப்பன். சுரேஸ்குமார், இராகலை, த.ம.வி., இராகலை. | செல்வன். த. சுதாகர் கலாபத்வெல த.வி. பலாபத்வெல. |
| எஸ்.எல். நுஸ்ரா மொஹிதீன், கல்/திகழி அரசினர் மு.ம.வி., ஏத்தாலை. | செல்வி. போதினி கலா சிவஞானம் ப/கோட்டகொடை த.வி. ஸ்பிரிங்வெளி, பதுளை. |
| நஸ்ரின் மஹ்ரூப், சென்மேரிஸ் கொலேஜ், நாவலப்பிட்டி | பீ. மொஹமட் பர்ஸான், சிலா/நஸ்ரியா ம.வி., சிலாபம். |
| ரகுராஜா பவானந், 25, 6வது ஒழுங்கை, கொழும்பு-13. | மு. மெர்சின் சுகுணா, நல்லிலைப் பாற்றிய கன்னியர் பாடசாலை, நுவரெலியா. |

## 13 முதல் 20 வரை

*தமிழ் நாட்டைச் சேர்ந்த குற்றாலீஸ்வரன் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த போது அவரது வயது 13.

*வில்லியம் பிட் உலகம் பாராட்டும் சோக நாடகங்களை எழுதிப் பிரபலமான போது அவரின் வயது 14.

*மாவீரன் அலெக்சாண்டர், தன் தந்தையின் போர்ப் படைக்கு தலைமை தாங்கி பல வெற்றிகளைப் பெற்றபோது, அவரது வயது 16,

*விஞ்ஞானி கலிலியோ, பைசா நகரக் கோபுர விளக்கு ஊசலாடுவதை கண்டு ஆராய்ச்சியில் இறங்கி புதுமை காணப் புறப்பட்டது 17 வயதில்.

*ஜோன் ஆம் ஆர்க், பிரான்ஸ் நாட்டு மக்களிடம் நாட்டுப் பற்றை வளர்த்தபோது அவரது வயது 18.

*ஸ்டீபன்சன் ரயிலைக் கண்டுபிடித்தபோது அவரது வயது 19.

## தட்டச்சு (ரைப்ரைட்டர்)



★ தட்டச்சு முதன் முதலில் யாருக்காக உருவாக்கப்பட்டது?
பார்வையற்றோரின் வசதிக்காக உருவாக்கப்பட்டது.

★ தட்டச்சு இயந்திரத்தை முதன் முதலில் கண்டு பிடித்தவர் யார்?
ஹென்றிமில் என்ற ஆங்கிலேயர் 1714ல் முதன் முதலாக வடிவமைத்தார். அதன் பிறகு, நிறைய கண்டுபிடிப்பாளர்கள் அவ்வப்போது தோன்றிய புதுப்புது முறைகளைச் சேர்த்து நவீன அமைப்புக்களில் வடிவமைத்தனர்.

★ சாதாரண மனிதனும் தட்டச்சு செய்யக்கூடிய அளவிலான தட்டச்சு இயந்திரம் எப்போது அறிமுகப் படுத்தப்பட்டது?
1873ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ இந்த தட்டச்சு இயந்திரத்தை உருவாக்கியவர்கள் யார்?
அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்டோபர் லெதம் ஹூல்ஸ், சாமுவேல் யே.ஸோல் மற்றும் கார்ல்ஸ் க்ளைடன் என்பவர்கள்.

★ எந்த மொழி தட்டச்சில் அதிக எழுத்துக்கள் உள்ளன?
சீன மொழி தட்டச்சில்தான் அதிக எழுத்துக்கள் உள்ளன. 3000 எழுத்துக்கள் உள்ள இந்த தட்டச்சில் ஒரு நிமிடத்திற்கு எட்டு வார்த்தைகள் தான் ஆகக்கூடுதலாக அடிக்க முடியும்.

## வாரம் ஒரு நாடு

### இந்தோனேசியா




**தலைநகர்**–ஜகார்த்தா
**பரப்பளவு**–19,04,569 சதுர கிலோமீற்றர்.
**மக்கள் தொகை**–18 கோடி.
**மொழி**–பஹாசா இந்தோனேசியன், டச்சு, ஆங்கிலம், ஜாவனிஸ்.
**எழுத்தறிவு**–85%
**சமயம்**–இஸ்லாம், கிறிஸ்தவம், இந்து, புத்தம்.
**நாணயம்**–ருபியா
**தனிநபர் வருமானம்**– 645 டொலர்.

**வரலாறு:**
இந்தோனேசியா 13,000 தீவுக்கூட்டங்கள் அடங்கிய நாடு. இதில் ஆறாயிரத்தில் மட்டுமே மக்கள் வாழ்கிறார்கள். துவக்க காலத்தில் நெதர்லாந்து ஈஸ்ட் இன்டீஸ் எனப் பெயர் பெற்றிருந்தது. 1942இல் ஜப்பான் இதைப் பிரித்தெடுத்தது. 1945இல் தன்னைத்தானே சுதந்திரப்பிரகடனம் செய்து கொண்டது. 1949இல் நெதர்லாந்து தனி ஆட்சியுரிமை நல்கியது. 1966இல் ஜெனரல் சுகார்த்தோ தலைமையில் இராணுவம் ஆட்சியைப் பிடித்தெடுத்தது. 1967-1993இல் தொடர்ந்து அதிபராகப் பதவியேற்றார். 920 உறுப்பினர்கள் கொண்ட சபை ஆட்சி செய்து வருகிறது.

**பொருளாதாரம்:**
உலகிலேயே இயற்கைவளம் மிகுந்த நாடுகளுள் இந்தோனேசியாவும் ஒன்று. தகரம், எண்ணெய், பொக்சைட், செம்பு, நிக்கல், தங்கம், வெள்ளி ஆகியன கிடைக்கின்றன. விவசாயம் முக்கிய தொழில். அரிசி, புகையிலை, கோப்பி, ரப்பர், மிளகு, இலவம்பஞ்சு, தேங்காய், பனை எண்ணெய், தேயிலை, கரும்பு ஆகியவை முக்கிய விளைபொருள்கள். அந்நியச் செலாவணி ஈட்டுவதில் வனப்பொருட்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## செய்து பாருங்கள்



இந்த வாரம் படம் ஒன்று வரையப் பழகிக் கொள்வோமா?

கோமாளி (ஜோக்கர்) படம் வரைந்து பார்ப்போமா?

முதலாவது படத்தில் இருப்பது போன்ற F எழுத்தை பெரிதாக எழுதிக்கொள்ளுங்கள். இப்போது இரண்டாம், மூன்றாம் படத்தில் உள்ளது போல் F க்கு ஒரு சின்ன தொப்பி, வாய், மீசை, உருண்டைக்கண், கழுத்து, ரிபன் போன்றவற்றை வரைந்து கொள்ளுங்கள். பின்னர் நான்காவது படத்தில் உள்ளது போல் மீசை, முடி, தொப்பிக்கு கலர் அடித்து, கழுத்து ரிபனுக்கு புள்ளி போட்டுவிடுங்கள்.


இப்போது உங்கள் கையில் அழகான ஜோக்கர் படம்.

## உமர் காயம்

பிரபல கவிஞர் உமர் காயமின் முழுப் பெயர் என்ன தெரியுமா, கியாஸ் உத்தின் அபுபத் உமர் இபின் இப்ராகிம் அலிகாம் மாயி.

www.padippakam.com

# விலை உயர்ந்த குற்றம்



## பட்டுக்கோட்டை பிரபாகர்

7

கொஞ்ச நேரத்தில் வந்த ராஜேந்திரன் கைத்தடியோடு வந்தார். கூனலுடன் நடந்தார். புருவங்களிலும் நரை. தூய வெண்மையில் வேட்டியும், ஜிப்பாவும் அணிந்திருந்தான்.

"வாங்க வெல்கம். ஒன் மினிட் பிளீஸ்" என்று மேஜை திறந்து ஊதுபத்தி எடுத்துக் கொளுத்தி, மயில் மேல் உட்கார்ந்திருந்த கடவுளுக்கு வாசனை காட்டிவிட்டு ஜன்னலில் ஊதுபத்திக் காகவே ஒதுக்கப்படடிருந்த பொந்தில் செருகி விட்டு உட்கார்ந்தார். "என்ன, சொல்லுங்க? யுஆர் ஃப்ரம்....?"

"அமெரிக்கா, நான் பார்க்கர் ஸ்மித். நியுயார்க்கில் வசிக்கிறேன். இவள் ஆனி. என் உதவியாளர். உங்கள் இல்லத்திற்கு வருவதற்காவே நாங்கள் அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறோம்." "அப்படியா? மிக்க சந்தோஷம். என்ன விஷயம்?."

"எனக்கு திருமணமாகி இருபத்தினான்கு வருடங்களாகின்றன. குழந்தைச் செல்வம் இல்லை. எனக்கு இந்தியாவை மிகவும் பிடிக்கும். நாங்கள் ஒரு பையனை தத்து எடுத்துக் கொள்வது என்று தீர்மானித்த தும்.... அவன் இந்தியச் சிறுவனாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்தோம். உங்கள் இல்லத்தை எங்கள் இந்திய நண்பர் சிபாரிசு செய்தார்.

"அப்படியா மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த இல்லத்தைச் சேர்ந்த ஒரு பையன் அமெரிக்காவில் நல்லதொரு வாழ்க்கை அமைத்து போகப் போகிறான் என்பதில் எனக்குப் பெருமைதான். எந்த வயதில் உங்களுக்குப் பையன் தேவை?"

"பனிரெண்டு வயதில் தேவை."

"வேறு எதாவது விசேசமாக எதிர்பார்க்கிறீர்களா பையனிடம்?"

"இல்லை. எதுவும் இல்லை. நீங்கள் காட்டினால் நாங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம்."

"ஒரு நிமிடம்"

அவர் ஒரு பழுப்பு லெட்ஜரை எடுத்துப் புரட்டி, எண்ணிப் பார்த்து,

"சரியாய் பதினேழு பேர்கள் நீங்கள் குறிப்பிட்ட வயதில் இருக்கிறார்கள். குறிப்பாக பனிரெண்டு வயதில் தான் தேவையா?"

"ஆமாம். ஒரு பையன் அல்லது பெண்ணின் திருப்புமுனை வயது அது. டீன் ஏஜிற்குள் அடியெடுத்து வைக்கும் ஆரம்ப வயது. இந்த வயதில் சிந்தனைகளை வடிவமைப்பதற்க்கு அதிகமான வாய்ப்பு உண்டு. அதனால் தான் குறிப்பாக அந்த வயதில் எதிர்பார்க்கிறோம்."

"நல்லது . பதினேலு பையன்களையும் வரவழைக்கிறேன். நீங்கள் பார்த்து, பேசி தேர்ந்தெடுக்கலாம். அனைவரும் இதே இல்லம் நடத்தும் பள்ளியில் ஆறாவது, ஏழாவது படித்துக் கொண்டிருக்கிறார்கள். பாக்கியம்! பாக்கியம்!"

"மூக்குப் பொடி போட்டுக் கொண்டிருந்த பாக்கியம் வர.... விபரம் சொல்லி அனுப்பிய பதினைந்து நிமிடங்களில் பதினேலு பையன்கள் வந்து கைகட்டி நின்று குறுகுறுப்பாகப் பார்த்தார்கள்.

பார்க்கர் ஸ்மித் தேர்ந்தெடுத்த சிறுவன் பெயர் கணேசன்.

கணேசன் கோரை முடியாய், துறு துறுப்பான கண்களுடன், முகத்தில் தவிப்பான ஏக்கத்துடன் இருந்தான்.

"இவனைப் பற்றிச் சொல்லுங்கள் சார்."

"ஒன்றும் விசேஷ வரலாறில்லை. வழக்கம்போல கைக்குழந்தையாய் இருந்த போதே தொட்டிலில் ஏதோ ஒரு முகமறியா தாய் இரக்கத்தையும், பாசத்தையும் விழுங்கிவிட்டுக் கிடத்திவிட்டுப் போனதில் கிடைத்தவன். மருத்துவர் பார்த்து தொப்புள் கொடி ரணம்கூட ஆறவில்லை. பிறந்து ஒரு வாரம்கூட ஆகியிருக்க முடியாது என்றார். அதை வைத்துப் பிறந்த தேதியையும் நாங்களே நிர்ணயித்தோம். பெயரிட்டோம். வளர்த்து வருகிறோம்."

"மகிழ்ச்சி. கணேசனை நாங்கள் தத்து எடுத்துக் கொள்கிறோம். அவனை அழைத்துச் செல்ல பாஸ்போட், விசா எல்லாம் ஏற்பாடு செய்தாக வேண்டும்,தொடர்பான சான்றிதழ்கள் வேண்டும். பிறப்புச் சான்றிதழ், படிப்புச் சான்றிதழ், அடையாளச் சான்றிதழ், தத்து கொடுத்து விட்டமைக்கான சான்றிதல் எல்லாம் வேண்டும். கொடுத்தால் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டதும் வந்து அழைத்துப் போகிறோம்."

ஒரு மணி நேரத்தில் அவர்கள் கேட்ட சான்றிதழ்கள் அனைத்தும் வழங்கப்பட, இல்லத்திற்கு பத்தாயிரம் ரூபாய் அன்பளிப்பாக வழங்குவதாகக் கூறி பார்க்கர் புறப்பட்டார்.

"கணேஷ், அமெரிக்கா வருகிறாயா?"

ஆர்வமாய் தலையாட்டினான் கணேசன்.

காரில் சொன்னார் பார்க்கர் ஸ்மித்;

"எல்லாம் சரி. இந்த அடையாளச் சான்றிதழில் மட்டும் ஒரு கோல்மால் செய்தாக வேண்டும் மார்ட்டின்."

"என்ன செய்ய வேண்டும்?"

"பிறப்பு அடையாளங்களாகக் குறிப்பிட்டிருக்கும் இரண்டு மச்சங்களின் இடங்களில் மாற்றம். நம் சரவணகுமாரின் பிறப்பு அடையாளங்களை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்."

"அப்படியென்றால்... இதே போல் ஒரு சான்றிதழ் அச்சடித்து, எழுதி, கையெழுத்துக்களை இதேபோல போட்டு..."

"ஆமாம் இன்றைக்குள் செய்தாக வேண்டும்."

"அதாவது சரவணகுமார் கணேஷன் என்கிற பேயரில் நியூயார்க் பறக்கப் போகிறானா?"

ஆமாம் அசைக்க முடியாத ஆதார பூர்வமாக."

"அப்படியென்றால் கணேஷனை என்ன செய்வது?"

"வைத்திருக்கிறேன் தனித்திட்டம்." என்ற பார்க்கர் ஸ்மித் ஆனியிடம் திரும்பி, "கணேஷ் அநியாயத்திற்க்கு அழகாய் இருக்கிறான் இல்லை? பாவம்!" என்றார்.

மாலை மணி 6. அண்ணா மேம்பாலம் ராணி சீதை ஹால். வாசலில் கார்களின் மாநாடு. ஏழு மணி நிகழ்ச்சிக்கு இன்னும் ஹால் திறக்கப்படாததால் முன் வராந்தாவின் நாற்காலிகளில்,

கார்களில் சாய்ந்து கொண்டு, மரத் தடிகளில் என்று மக்கள் கூடி நின்று தமிழ் நாட்டின் தலைவிதி எப்படி அமையும் என்று கவலைப்பட்டுக் கொண்டு, தன் அபிமான நட்சத்திரம் திருமணம் செய்து கொள்ளப் போவதாகக் கவலைப்பட்டுக் கொண்டு, வருமானவரி புதிய கொள்கைகளால் வரப்போகிற சிக்கல்களுக்குக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க.....

அந்த அம்பாஸிடர் சல் என்று வந்தது. பின் கண்ணாடியில் இது டாக்டரின் வண்டி என்று அடையாளம் காட்ட கூட்டல் குறி ஸ்டிக்கர் ஒட்டியிருந்தது. ஹாலின் சைடு பகுதியை அணைத்தவாறு ஊர்ந்து சென்று நின்றது. கையில் ஒரு சின்ன சூட்கேசுடன், நரைத்த தலை, கண்ணாடி, டாக்டர் இறங்கினார்.

ஹாலின் அனைத்துக் கதவுகளும் இப்போது திறக்கப்பட்டு நிகழ்ச்சி அமைப்பாளர்கள் நெஞ்சில் பேட்ச் குத்திக் கொண்டு டிக்கெட் கிழித்து, கல்கண்டு கொடுத்து, சரவணகுமாரின் விசேஷ நிகழச்சி பற்றிய விபரங்கள் கொண்ட ஒரு துண்டுப் பிரசுரம் கொடுத்து உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தனர்.

டாக்டர் உள்ளே போய் டிக்கெட்டில் இருந்த எண்ணில் அமர்ந்தார். உச்சந் தலையைச் சொறிந்துக் கொண்டார்.

வாட்ச்சைப் பார்த்துக் கொண்டார். வலது கட்டை விரலின் நகத்தைக் கடித்துத் துப்பினார்.

ஆறரை மணிக்கு மார்ட்டின் ஃபியட் ஓட்டி வர...... பார்க்கர் ஸ்மித்தும், ஆனியும் வந்து இறங்கினார்கள்.

"மார்ட்டின், உனக்கும் ஒரு டிக்கெட் எடுத்து விடலாம்."

"இல்லை எனக்கு இதில் ஈடுபாடு இல்லை. நான் காரருகிலேயே நிற்பேன். நீங்கள் போய் வாருங்கள்."

பார்க்கரும், ஆனியும் உள்ளே முதல் வரிசையில் பதினேலு, பதினெட்டு இருக்கைகளில் அமர்ந்தார்கள். பார்க்கர் தலையைத் திருப்பி நிறைந்து கொண்டிருக்கும் அரங்கத்தைப் பார்த்தார்.

வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் சரவணகுமாரைப் பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியிருக்க..... படித்துப் பார்த்தார்.

"ஐநூறு பக்கப் புத்தகத்தில் இன்றைக்கு பேஜ் ரீடிங் செய்துகாட்ட இருக்கிறான் ஆனி. பார்க்கலாம்" என்றார்.

பத்து நிமிடம் கழித்து ஆட்டோவிலிருந்து ஒரு கிட் பேகும், தோளில் மாட்டின காமிராவுமாய் இறங்கினான் சுபா.

டிக்கெட்டைக் காட்டி விட்டு உள்ளே வந்து அமர்ந்தான்.

அரங்கத்தைப் பார்த்தான். கேமிராவில் இதை நோண்டி, அதை நோண்டி ஒரு தயார் நிலைக்கு வந்தான். கிட் பாகில் தோசை மாதிரி மடக்கி வைத்திருந்த ஆங்கிலச் செய்தித்தாள் எடுத்துப் பிடித்து முகத்துக்கு முன்னால் பிடித்துக் கொண்டான். அரங்கத்தின் விளக்குகள் அனைத்தும் அணைக்கப் பட்டதும் மடக்கி உள்ளே வைத்துக் கொண்டான். ஏதற்கோ காத்திருந்தான்.

மேலும் ஐந்து நிமிடம் கழித்து அமைப்பாளர் அனுப்பிய காரில் வந்து இறங்கின சரவணகுமார் மேடையின் பின் வழியாக உள்ளே போய் மேடையோரத்தில் இருந்த அறையில் அமர்ந்துக் கொண்டான்.

ஏழு மணிக்கு திரை உயர்ந்தது.

டை கட்டின, ஷாம்பு போட்ட தலையை சிலும்பலாகச் சீவியிருந்த, லேசாக லிப்ஸ்டிக் தடவியிருந்த ஒரு பேட்ச் அணிந்த ஆசாமி மேடையின் மையத்தில் இருந்த ஒற்றை மைக்கின் முன்னால் வந்து நின்று, நக முனையால் அதனை அதன் உயிரைச் சோதித்துவிட்டு, "லேடீஸ் அண்ட் ஜெண்டில் மென் " என்றான்.

அப்புறம் தங்கள் சமூக சேவை அமைப்பின் நோக்கங்கள், செயல்பாடுகள் என்று பத்து நிமிடம் பேசி " எங்கள் மாநில மாநாட்டின் கடைசி தினமான இன்று நடைபெறும் கலை நிகழ்சிகளில் முக்கியமான நிகழ்ச்சியாக சரவணகுமார் வழங்க இருக்கும் புதுமையான நிகழ்ச்சியை இறுதியானதாக அமைத்துள்ளோம். எங்கள் அமைப்பின் நிதி வளர்ச்சிக்கு டிக்கெட் வாங்கியதன் மூலம் உதவி புரிந்த உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி. இனி வரிசையாக கலை நிகழ்ச்சிகள்."

முதலில் உறுப்பினர்கள் பங்கு பெற்ற நாடகம், பிறகு கால் மணி நேரத்திற்கு பலகுரல் மன்னனின் நிகழ்ச்சி, பிறகு ஒரு திரைப்பட நடிகையை ஆன் த ஸ்பாட் பேட்டி கண்ட பிறகு...

சரவணகுமார் மேடைக்கு வந்தான். சபையை வணங்கினான்.

" முதலில் தசாவதானம் என்கிற நிகழ்ச்சியை நடத்திக் காட்ட இருக்கிறேன். சின்ன வயதிலிருந்தே எனக்கு மற்றவர்களைவிட சற்று அதிகமான நினைவாற்றலும், அறிவாற்றலும் இருப்பதை உணர்ந்தேன். அவற்றை முறையாக வளர்த்துக் கொண்டேன். நான் செய்து காட் இருப்பவை மாயமோ, மந்திரமோ இல்லை. கடுமையான பயிற்சி காரணமாகவே இதை என்னால் செய்ய முடிகிறது. சிவகாசியில் சிறுவர்கள் தீக்குச்சி அடுக்குவதைப் பாத்திருக்கலாம். சோப்புக் கம்பெனிகளில் சோப்பு மடிப்பதைப் பார்த்திருக்கலாம். அச்சகங்களில் காகிதம் மடக்குவதைப் பார்த்திருக்கலாம். அங்கே எல்லாம் அந்த விரல்களின் வேகம் நம்மை ஆச்சரியப்படுத்தும். நாம் செய்து பார்க்க முயன்றால் வேகம் வராது. காரணம்-பயிற்சி. ஒரே செயலைத் திரும்பத் திரும்ப செய்வதனால் ஏற்பட்ட தேர்ச்சி. அதே போல விரல்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி போல நான் மூளைக்குப் பயிற்சி கொடுத்துப் பழகினேன். அதனாலேயே என்னால் இந்த நிகழச்சியை செய்ய முடிகிறது. பார்வையாளர்களில் ஒரு பத்துப் பேரை மேடைக்கு அழைக்கிறேன். யார் வேண்டுமானாலும் வாருங்கள்."

அங்கங்கேயிருந்து பத்து பேர் எழுந்து மேடைக்கு சென்றார்கள்.

சரவணகுமார் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை கொடுத்தான். ஒருவரை புத்தகம் கொடுத்து வாய்விட்டு ஏதாவது ஒரு பகுதியை நிதானமாக படிக்க வேண்டும் என்றான். ஒருவரை மனதில் தோன்றும் எந்த விதமான கேள்விகளை வேண்டுமானாலும் கேட்க வேண்டும் என்றான். இன்னொருவரை ஒரு கடினமான கணக்கு சொல்லவும், ஒருவரை இடை வெளி விட்டு மணியடிக்கச் சொல்லி, ஒருவரை அவன் கண்ணுக்கு முன்னால் பலவகையான ஓவியங்களை ஒன்று மாற்றி ஒன்றாக காட்டச்சொல்ல..... இப்படி பத்து பேருக்கும் பத்து விதமான காரியங்கள் கொடுத்து.....

நிகழ்ச்சியை ஆரம்பித்தான். அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காரியங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். பதினைந்து நிமிடங்கள் கழித்து நிறுத்தினான். ஒவ்வொருவராக அழைத்தான்.

"நீங்கள் படித்தது ராஜாஜி எழுதின சக்கரவர்த்தி திருமகன் புத்தகத்திலிருந்து" என்று அவர் படித்த பகுதிகளைக் கொஞ்சம் அப்படியே சொல்லி, "ஜானகி என்பதை சானகி என்று உச்சரித்தீர்கள்." என்றான்.

அரங்கம் முழுக்க கை தட்டியது.

"நீங்கள் மொத்தம் இருபத்தி இரண்டு கேள்விகள் கேட்டீர்கள். வரிசையாக பதில் சொல்கிறேன். முதல் கேள்வி!

ஆஸ்திரேலியாவின் தலைநகர் என்ன? பதில்: கான்பெர்ரா. இரண்டாம் கேள்வி: பம்பாயில் எத்தனை விமான நிலையங்கள் உள்ளன? பதில்: உள்நாட்டு போக்குவரத்திற்கு சாந்தாக்ருஸ், வெளிநாட்டுக்கு சாகர். இதைத்தவிர இராணுவத்திற்குத் தனியாய் உள்ளது."

இந்த ரீதியில் பட்பட்டென்று இருபத்தி இரண்டு கேள்விகளும் பளிச் பளிச் என்று வரிசையாக சொல்ல...

பார்க்கர் ஸ்மித் அசந்துபோய் அமர்ந்திருந்தார்.

"நீங்கள் கேட்ட கணக்கிற்கு விடை 1337."

"நீங்கள் பதினாறு ஓவியங்களைக் காட்டினீர்கள்.

முதல் ஓவியம் மீன் மங்கை, இரண்டாவது விவேகானந்தர், மூன்றாவது திருச்சி மலைக்கோட்டை...."

"நீங்கள் முப்பத்தி ஒரு முறை மணியடித்தீர்கள்."

அரங்கம் முழுவதும் எழுந்து நின்று கை தட்டி விட்டு அமர்ந்தது. நம் சுபா காமிராவுடன் எழுந்து மேடைக்கருகில் நின்ற வீடியோக்காரர்கள், காமிராக்காரர்கள் அருகில் சென்று சரவணகுமாரை ஒரு கிளிக் அடித்துவிட்டு வந்து அமர்ந்து கொண்டான்.

பத்துப் பேரையும் அனுப்பிவிட்டு மைக் முன்னால் வந்த சரவணகுமார், அடுத்ததாக பேஜ் ரீடிங் என்னும் நிகழ்ச்சி. சென்ற முறை ஐம்பது பக்கங்கள் கொண்ட புத்தகத்தில் செய்து காட்டினேன். இந்த முறை ஐநூறு பக்கங்களில் செய்து காட்ட இருக்கிறேன். உங்களில் ஐநூறு பக்கங்கள் கொண்ட புத்தகத்தை யார் வேண்டுமானாலும் கொண்டு வரலாம் என்று அறிவித்திருந்தேன். யாராவது ஒருவர் கொடுங்கள்."

நிறைய பேர் புத்தகங்கள் எடுத்து வர...... அதில் ஒருவர் மேடையில் மைக் பிடித்து , " நான் கொன்டு வந்திருக்கும் இந்த புத்தகம் ஒரு நாவல்.நேராய் ஒரு பதிப்பகத்திற்குச் சென்று கேட்டு வாங்கினேன். நேற்றுத்தான் அச்சும், பேண்டிங்கும் முடிந்த புத்தகம் இது. இன்னும் விற்பனைக்கு வராத நாவல் இது. 520 பக்கங்கள் கொண்டது. இதில் சரவணகுமார் தன் திறமையைக் காட்டட்டும்."

சரவணகுமார் புத்தகத்தை வாங்கிக் கொண்டு, "இந்த நாவலை இப்போது நான் படிக்கப்போகிறேன். ஒரு நிமிடத்தில் நான் படிக்கும் வேகம் முப்பத்தைந்து பக்கங்கள். ஆகவே இந்த புத்தகத்தை நான் படிக்க பதினைந்து நிமிடங்கள் அவகாசம் கேட்கிறேன். மேடையிலேயே படிக்கிறேன். இந்த பதினைந்து நிமிடங்களில் அமைப் பாளர்கள் தங்கள் பரிசளிப்பு நிகழ்ச்சியை வைத்துக் கொள்கிறார்கள்" என்றவன் நாற்காலியில் அமர்ந்து 'பிருட் விருட் என்று பக்கங்களைப் புரட்டிப் படிக்க ஆரம்பித்தான். ஒவ்வொரு பக்கத்திலும் அவன் கண்கள் சில வினாடிகளே தங்கின.

பரிசளிப்பு நிகழ்ச்சி ஒருபுறம் நடந்து கொண்டிருக்க.... சீரியஸாக சரவணகுமார் பக்கம் புரட்டிக் கொண்டிருந்தான்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எம்.சிறிராஜ்
வயது: 17
முகவரி: 6ஏ, அதிகார் வீதி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, நாவல்.

பெயர்: எம். நழீம்
வயது: 17
முகவரி: விக்டர் தோட்டம், பாக்கியவத்தை, பொத்துவில்.
பொழுது போக்கு: புத்தகம், பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். ஹபீல்
வயது: 27
முகவரி: 199, சென்ரல் வீதி, கொழும்பு-12.
பொழுது போக்கு: சினிமா, வானொலி, கதைப்புத்தகம்.

பெயர்: செல்வி.ஏ.நளினி
வயது: 23
முகவரி: P.O.BOX-28103, SAFAT-13142, KUWAIT.
பொழுது போக்கு: புத்தகம், பத்திரிகை.

பெயர்: சி.ராஜசிங்கம்
வயது: 23
முகவரி: P.O.BOX-59, CODE-132, OMAN.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: எஸ்.சலீம
வயது: 22
முகவரி: P.O.BOX-6984, DOHA, QATAR. A.G.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம்.தௌபீக்
வயது: 22
முகவரி: ஓடாவியார் வீதி, டீன் றோட், புதிய காத்தான்குடி-6.
பொழுது போக்கு: பேனாநட்பு, வானொலி.

பெயர்: ஆர்.ராஜவேந்திரன்
வயது: 14
முகவரி: 113/2, அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பு-5.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: எம். இப்திகார்
வயது: 24
முகவரி: 91, சென்மேரீஸ் வீதி, மட்டக்குளி, கொழும்பு 15.
பொழுது போக்கு: பத்திரிகை, பாடல்கள் .

பெயர்: ஏ.நேசன்
வயது: 27
முகவரி: OST.STR-1, 56472 DREISBACH, GERMANY.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: எஸ்.ஜெயக்குமார்
வயது: 23
முகவரி: கோவில் புதுக்குளம், வவுனியா.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: எம். இம்ரான்
வயது: 15
முகவரி: கோப்பியாவத்தை, பேருவளை.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, உதைபந்து.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## மக்சீம் கார்க்கி

48

அன்று மாலை பொலீஸ்காரர்கள் வந்தார்கள். அவள் அவர்களை வியப்பின்றிப் பயமின்றிச் சந்தித்தாள். அவர்கள் ஆரவாரமாக உள்ளே நுளைந்தார்கள்; ஆத்ம திருப்தியும் ஆனந்தமும் கொண்டவர்களாக அவர்கள் தோன்றினார்கள். அந்த மஞ்சள் முக அதிகாரி தனது பல்லை இளித்துச் சிரித்துக் கொண்டே பேசினான்;

"சௌக்கியமா? நாம் இப்போது சந்திப்பது மூன்றாவது முறை. இல்லையா?"

அவள் பேசவில்லை. வெறுமனே தனது வறண்ட நாக்கை உதடுகளின் மீது ஒட்டினாள். அந்த அதிகாரி அவளுக்கு ஏதேதோ உபேதச வார்த்தைகளைச் சொன்னான். பேசுவதில் அவன் ஆனந்தம் காண்பதாக அவள் உணர்ந்தாள். ஆனால் அவனது பேச்சு அவளைப் பீதியுறச் செய்யவில்லை. அந்த வார்த்தைகள் அவளைப் பாதிக்கவே இல்லை. ஆனால் அவன்: "கடவுளுக்கும் ஜாருக்கும் உன் மகன் சரியான மரியாதை காட்டாது போனதற்கு, அதை நீ அவனுக்குக் கற்றுக் கொடுக்காமல் போனதற்கு, உன்னைத்தான் குற்றம் சொல்ல வேண்டும், அம்மா," என்று சொன்ன பிறகு மட்டும் அவள் கதவருகே தான் இருந்த இடத்தில் நின்றவாறே கம்மிய குரலில் பதில் சொன்னாள்;

எங்கள் குழந்தைகள்தான் எங்களுக்கு நீதிபதிகள். அவர்கள் அந்தக் கரடு முரடான மார்க்கத்தில் செல்லும் போது நாங்கள் அவர்களைப் புறக்கணித்ததற்காக, எங்களைச் சரியானபடி அவர்கள் தண்டிப்பார்கள்."

"என்ன?" என்று கத்தினான் அதிகாரி: "உரக்கப் பேசு." நான் எங்கள் குழந்தைகள்தான் எங்களுக்கு நீதிபதிகள் என்று சொன்னேன்" என்று பெரு மூச் சோடு சொன்னாள் தாய்.

அவன் ஏதேதோ கோபத்தோடும் விறுவிறுப்போடும் முணுமுணுத்துக் கொண்டான்; ஆனால் அவனது வார்த்தைகள் அவளுக்குக் கேட்கவில்லை.

மரியா கோர்சுவானா அன்று நடந்த சோதனைக்கு ஒரு சாட்சியாக அழைத்து வரப்பட்டாள். அவள் தாய்க்கு அடுத்தாற் போல் நின்றாள்; எனினும் அவள் தாயைப் பார்க்கவில்லை. எப்போதாவது அந்த அதிகாரி அவளிடம் ஒரு கேள்வியைக் கேட்டால், உடனே அவள் தலையைத் தாழ்த்திக் கொண்டு அந்த ஒரே பதிலைத் திரும்பத்திரும்பச் சொன்னாள்:

"எனக்குத் தெரியாது, எசமான்! நான் ஒன்றுமே தெரியாதவள். ஏதோ வியாபாரம் செய்து பிழைக்கிறேன். எதைப் பற்றியும் தெரியாத முட்டாள் ஜென்மம் நான்!"

"நாவை அடக்கு!" என்று மீசையைத் திருகிக் கொண்டே உத்தரவிட்டான் அந்த அதிகாரி. மீண்டும் அவள் தலை வணங்கினாள். ஆனால் குனிந்து வணங்கும் போது அவள் தன் மூக்கை மட்டும் அவனுக்கு நேராக நிமிர்த்திக் காட்டி, "இவனுக்கு வேணும்!" என்று அவள் தாயிடம் மெதுவாகச் சொன்னாள்.

பிறகு பெலகேயாவை சோதனை போடும்படி அவன் அவளுக்கு உத்தரவிட்டான். அந்த உத்தரவைக் கேட்டு அவள் விழித்தாள்; அதிகாரியை வெறித்துப் பார்த்தாள். பிறகு பயந்து போன குரலில் சொன்னாள்:

"ஐயோ! எனக்கு இந்த விவகார மெல்லாம் எப்படியென்று தெரியாதே, எசமான்!"

அவன் தரையை ஓங்கி மிதித்துக் கொண்டு அவளை நோக்கிச் சத்தமிட்டான். மரியா தன் கண்களைத் தாழ்த்தினாள்; தாயிடம் மெதுவாகக் கூறினாள்:

"சரி அம்மா, நீ உன் பொத்தான்களைக் கழற்று, பெலகேயா நீலவ்னா!"

தாயின் ஆடையணிகளைத் தடவிச் சோதனை போட்ட போது, குருதியேறிச் சிவந்த அவளது முகத்தில் அவமான உணர்ச்சி பிரதிபலித்தது.

"பூ! நாய்ப்பிறவிகள்!" என்று அவள் முணுமுணுத்துக் கொண்டாள்.

"நீ என்ன சொல்லுகிறாய்?" என்று அந்த அதிகாரி சோதனை நடந்த இடத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கேட்டான்.

"இது பெண் பிள்ளைகள் விஷயம், எசமான்!" என்று பயந்த குரலில் முனகினாள் மரியா.

கடைசியாக அந்த அதிகாரி தான் காட்டிய தஸ்தாவேஜுகளில் தாயைக் கையெழுத்திடச் சொன்னான். அவளது



அனுபவமற்ற கை பெரிய பெரிய மொத்தை எழுத்துக்களில் கையெழுத் திட்டது:

"பெலகேயா விலாசவா, ஒரு தொழி லாளியின் விதவை மனைவி. "நீ என்ன எழுதித் தொலைத்திருக்கிறாய்? இதை ஏன் எழுதினாய்?" என்று அந்த அத்காரி பல்லை இளித்துக் கொண்டுக் கத்தினான். பிறகு சிறு சிரிப்புடன் சொன்னான்;

காட்டுமிராண்டி ஜனங்கள்."

அவர்கள் போய் விட்டார்கள். தாய் ஜன்னலருகேயே நின்றாள்; அவளது கைகள் மார்பின் மீது குறுக்காகப் படிந்து பற்றியிருந்தன. அவள் தன் கண்களை இமை தட்டாமல், எதையுமே காணாமல், வெறுமனே விழித்துக் கொண்டு நின்றாள்.

அவளது புருவங்கள் உயர்ந்திருந்தன. உதடுகள் இறுகியிருந்தன. கடைவாய்த் தாடைகள் இறுகி ஒன்றோடொன்று அழுத்திக் கடித்துக்கொண்டிருந்தன. அந்தக் கடியின் வேதனையும் அவள் உணர்ந்தாள். மண்ணெண்ணெய் விளக்கில் எண்ணெய் வற்றி வறண்டது; திரி படபடத்துப் பொரிந்தது; சுடர் துடிதுடித்தது. அவள் அதை ஊதியணைத்துவிட்டு, இருளிலேயே இருந்தாள். அவளது இதயத்தில் நிரம்பி யிருந்த சூன்யமயமான ஏக்க உணர்ச்சியால்,

அவளது இருதயத் துடிப்புக் கூடத் தடைபட்டது. அப்படியே அவள் வெகுநேரம் நின்றுகொண்டிருந்தாள். கண்களும் கால்களும் வலியெடுக்கும் வரை நின்றாள். மரியா ஜன்னலருகே வந்து போதை மிகுந்த குரலில் கூப்பிடுவதை அவள் கேட்டாள்.

"பெலகேயா, தூங்கி விட்டாயா? பாவம், உனக்கு இப்படித் துன்பம் வரக் கூடாது. சரி , தூங்கு!"

தாய் உடைகளை மாற்றாமலேயே போய்ப் படுத்துக்கொண்டாள். படுத்த மாத்திரத்திலேயே ஆழமான குளத்துக்குள் அமிழ்ந்து போவது போன்ற தூக்கத்துக்கு ஆளானாள்.

அவள் கனவு கண்டாள்; நகருக்குச் செல்லும் ரஸ்தாக் கரையில், சேற்றுப் பிரதேசத்துக்கு அப்பால் தெரியும் ஒரு மஞ்சள் நிறமான மணற் குன்றிற்கருகே அவள் நடந்து சென்று கொண்டிருந்தாள். தொழிலாளர்கள் மண்வெட்டி எடுக்கும் ஒரு செங்குத்தான குன்றின் ஓரத்தில் பாவெல் நின்று கொண்டிருந்தான். அவன் அந்திரேயின் அமைதியும் இனிமையும் நிறைந்த குரலில், பாடிக்கொண்டிருந்தான்;

**துயில்**
**கலைந்து அணியில் சேர**
**விரைந்து வாரும் தோழர்காள்!**

அவள் தன் நெற்றியை அழுத்திப் பிடித்தவாறு, தன் மகனைப் பார்த்துக் கொண்டே அந்தக் குன்றைக் கடந்து சென்றாள். நீல வானில் பகைப்புலத்தில் அவனது உருவம் மிகவும் தெளிவாகவும் துல்லியமாகவும் தோன்றியது. அவள் அவனருகே செல்ல நாணிக் கூசினாள். ஏனெனில் அவள் கர்ப்பமுற்றிருந்தாள்;

அவளது கைகளில் இன்னொரு குழந்தை இருந்தது. அவள் மேலும் நடந்தாள்; நடந்து கொண்டே வந்து, கடைசியில் குழந்தைகள் பந்து விளையாடிக் கொண்டிருக்கும் மைதானத்துக்கு வந்து சேர்ந்தாள். அங்கு எத்தனையோ குழந்தைகள் இருந்தார்கள். அவர்கள் வைத்து விளையாடிய பந்து சிவப்பு நிறமாயிருந்தது. அவளது கையிலிருந்த சிசு அவள் கையை விட்டு தாவிக் குதித்து அந்தப் பந்தைப் பிடிக்க எண்ணியது. அழத்தொடங்கியது. அவள் அதற்குப் பால் கொடுத்தாள். திரும்பிப் பார்த்தாள். இப்போதோ அந்தக் குன்றின் மீது துப்பாக்கிச் சனியன்களை அவளது மார்ப்புக்கு நேராக நீட்டியவாறு சிப்பாய்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவள் உடனே விடுவிடென்று அந்த மைதானத்தின் மத்தியிலிருந்த தேவாலயத்துக்கு ஓடி வந்தாள். அந்தத் தேவாலயம் வெண்மை நிறமாகவும், மேகங்களால் செய்யப்பட்டது போல் அளவிறந்த உயரத்துக்கு மேல் நிமிர்ந்து நிற்பதாகவும் இருந்தது; அங்கு யாரையோ சவ அடக்கம் செய்து கொண்டிருந்தார்கள். அந்தச் சவப்பெட்டி நீளமாகவும் கறுப்பாகவும் இறுக மூடிய தாகவும் இருந்தது. மதகுருவும் பாதிரியாரும் வெள்ளைநிற அங்கிகளைத் தரித்தவாறு அங்குமிங்கும் உலவினார்கள். பாடினார்கள்;

**உயிர்த்தெழுந்தார்! உயிர்த்தெழுந்தார்!**
**உயிரிழந்த கிறிஸ்து நாதர்......**

பாதிரியார் பரிமள களபங்களைத் தூவியபோது, அவளைப் பார்த்து தலை வணங்கிப் புன்னகை செய்தார். அவரது தலைமயிர் செக்கச் சிவந்து பிரகாசித்தது; அவரது உற்சாகங்களை பொருத்திய முகம் சமோய்லவின் முகம் போலிருந்தது. அந்தத் தேவாலயத்தின் கோபுரக் கலசங் களிலிருந்து சூரிய கிரணங்கள் விழுந்தன; அந்தக் கிரணங்கள் வெள்ளை வெளெரனெக் கீழ்நோக்கி கம்பளம் போல விழுந்தன.

தேவாலயத்தின் இருபுறத்துப் பீடங்களிலிருந்தும் பையன்கள் பாடிக் கொண்டிருந்தார்கள்.

**உயிர்த்தெழுந்தார்! உயிர்த்தெழுந்தார்!**
**உயிரிழந்த கிறிஸ்து நாதர்......**

தேவாலயத்தின் மத்தியில் வந்து சட்டென்று நின்றவாறு அந்த மதகுரு திடீரெனக் கத்தினார்;

"அவர்களைக் கைது செய்!" மதகுருவின் வெள்ளை நிற அங்கிகள் மறைந்து விட்டன; அவரது மேலுதட்டில் வெள்ளி நிற மீசை தோன்றியது. எல்லோரும் ஓடத்தொடங்கினார்கள்; பாதிரியாரும்கூட பரிமளப் பொடியை ஒரு மூலையிலே எறிந்துவிட்டு, தன் தலையை ஹஹோல் பற்றிப்பிடித்துக் கொள்வது மாதிரி தமது தலையைப் பிடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தார். ஓடிச் செல்லும் ஜனங்களின் காலடியில் தன் கையிலிருந்த குழந்தையை நழுவ விட்டுவிட்டாள் தாய்; அவர்களோ அதை மிதித்து நசுக்காது விலகிவிலகி ஓடினார்கள். அந்தக் குழந்தையின் திகம்பரக் கோலத்தையே பயபீதி நிறைந்த கண்களோடு அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு முழங் காளிட்டு, அவர்களை நோக்கிக் கத்தினாள்;

குழந்தையை உதறிச் செல்லாதீர்கள்! இவனையும் உங்களோடு எடுத்துச் செல்லுங்கள்.!

**உயிர்த்தெழுந்தார்! உயிர்த்தெழுந்தார்!**
**உயிரிழந்த கிறிஸ்து நாதர்...**

என்று சிரித்துக் கொண்டும், கைகளைப் பின்புறமாகக் கோத்தவாறும் பாடத் தொடங்கினான் ஹஹோல்.

அவள் குனிந்து குழந்தையை எடுத்தாள். மரக்கட்டைகளைப் பாரம் ஏற்றிய ஒரு வண்டியில் அந்தக் குழந்தையை வைத்தாள். அந்த வண்டிக்கு அருகே சிரித்துக்கொண்டே மெதுவாக நடந்து வந்தான் நிகலாய்.

"அப்படியானால் அவர்கள் எனக்குக் கொஞ்சம் கடினமான வேலையைத்தான் கொடுத்து விட்டார்கள்" என்றான் அவன்.

தெருக்கள் எல்லாம் அசுத்தமாயிருந்தன. வீட்டு ஜன்னல் களிலிருந்து ஜனங்கள் எட்டிப் பார்த்தார்கள்; கூச்சலிட்டார்கள், சீட்டி யடித்தார்கள், கைகளை வீசினார்கள். வானம் நிர்மலமாயிருந்தது; சூரியன் பிரகாசமாகக் காய்ந்தது; எங்குமே நிழலைக்காணோம்.

(தொடர்ந்துவரும்)

# எதிர்பாராதது

**பாலா. சங்குபிள்ளை**

**பா**லசங்கர் கீழே பார்த்தான். கிடு கிடு பள்ளமாக இருந்தது.


விழுந்தால் எலும்புகள்கூட மிஞ்சாது. அவன் மனம் முற்றாக மரத்துப் போயிருந்தது. அவன் நேற்றே இறந்துவிட்டான். இப்போது இருப்பது வெறும் உயிரற்ற உடல்தான்.

உயிருக்குயிராக அவனை நேசித்தவள் நேற்றோடு அவனிடம் விடைபெற்றுச் சென்று விட்டாள். காபியும், காதலும் சூடாக இருந்தால்தான் ருசியாக இருக்கும் என்று யாரோ சொன்னார்கள். ஆனால் இவன் காதலோ அதிக சூடாகி மனதையே சுட்டெரித்து விட்டுச் சென்று விட்டது.

ஒரு நாளா இரண்டு நாளா; மூன்று வருடங்களாக - அவன் இந்துமதியைக் காதலித்தான். அவளும் அவனை மனமார காதலிப்பதாகச் சொன்னாள். ஆனால் - சொன்னவளை இன்று காணவில்லை. காலம் மாறினாலும் நம் காதல் மறாது என்றவள் காற்றாகிப் பறந்து போய் விட்டாள்.

அவன் மனம் அழுதது. அழுதழுது கண்கள் கலங்கி கண்ணீரெல்லாம் ஆவியாகப் போய்விட்டது. அவள் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் இன்னமும் அவன் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருந்தன.

"பாலன்! எல்லாமே எல்லை மீறி போயிடுச்சி. முதல்ல சம்மதம் சொன்ன அப்பா இப்ப யாரோ வசதியுள்ளவங்க என்னைக் கேட்டு வரவும் சரின்னுட்டாரு. சாதாரண குமாஸ்தாவை கட்டிக்கிட்டு காலமெல்லாம் கஷ்டப்படுறதை விட வசதியோட வார அந்த இடத்தை முடிக்கிறதுதான் நல்லதுன்னு பிடிவாதம் பிடிக்கிறாரு. நானும் யோசிச்சுப் பார்த்தேன். உங்க குடும்பமோ ரொம்பப் பெரிசு. உங்க ஒருத்தரை நம்பித்தான் உங்க தங்கச்சிமாருங்க இருக்காங்க. இந்த நிலையில நானும்



வந்துட்டா அந்தச் சுமையை உங்களால தாங்க முடியாது. அதனால நாம சந்தோஷமான முறையில பிரிஞ்சிடுவோம். நடந்ததை ஒரு கெட்ட கனவா நினைச்சி மறந்துடுங்க. எனக்கும் கஷ்டமாத்தான் இருக்கு. ஆனாலும் என்ன செய்யுறது? என்னை மறந்துடுங்க. நான் வாறேன்...."

ஓ! எவ்வளவு இலகுவாக கூறிவிட்டாள். மறக்கக்கூடிய அளவுக்கா அவர்கள் பழகினார்கள்? அவன் அவளை தன் மனதில் வடித்திருந்தான். அவளோ அவனை கண்ணீர் வடிக்கச் செய்து ஓடி விட்டாள்.

அவன் மனதிலிருந்த ஒளி மறைந்து இருள் சூழ்ந்து கொண்டது.

இனி இந்த உலகத்தில் வாழ்ந்துதான் பயன் என்ன?

காயம் பட்ட மனதுடன் நாள் முழுவதும் வேதனைப்பட்டு வெந்துபோவதைவிட ஒரேயடியாக போய்ச் சேருவதே நல்லது.

அவன் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

கீழே குதிக்க தயாரானான். அப்போது-

யாரோ தோளைத் தொட்டார்கள். அவன் சட்டென திரும்பியவன் அதிர்ச்சியைடந்தான். எதிரே-

முகம் சிவக்க-கண்கள் கலங்கியிருக்க இந்துமதி நின்றிருந்தாள்.

"இந்து நீயா?"

"ஆமா, ஏன் ஆச்சரியமா இருக்கா? நீங்க இவ்வளவு பெரிய கோழையா இருப்பீங்கன்னு நான் சத்தியமா நினைக்கல்ல...."

"இந்து உன்னை பிரிஞ்சி என்னால வாழ முடியாது. சகலமும் நீயேன்னு இருந்தேன். ஆனா சட்டுன்னு மறந்துட சொல்லிட்டே. எனக்கு வேற வழி தெரியலை..."

"போதும்! அதுக்கு இதுவா முடிவு? நீங்க துணிவான எதையும் எதிர் கொள்ளும் தைரியம் உள்ளவரா இருப்பீங்கன்னு நினைச்சேன். ஆனா.... இப்படி செய்வீங்கன்னு நான் நினைக்கவே இல்ல. கடைசி நேரத்துல உங்கள மறக்க முடியாததால உங்களத்தான் கல்யாணம் செய்வேன்னு வீட்ல சண்டைபோட்டுக்கிட்டு உங்கள பார்க்க ஓடோடி வந்தேன். நேற்று முழுவதும் நீங்க சோகமாக இருந்ததாகவும் காலையிலேயே எங்கேயோ போயிட்டதாகவும் உங்க வீட்ல சொன்னாங்க. உங்களை எல்லா இடத்திலையும் தேடினேன். தற்செயலாக இங்கே வந்தேன். இன்றைக்கு காதல் தோல்வியில தற்கொலை செய்ய துணிஞ்ச நீங்க நாளைக்கு நம்ம கல்யாணத்துக்கப்புறம் வேற ஏதாவது பிரச்சனையில இப்படி ஒரு முடிவுக்கு வந்துட்டா அதுனால பாதிக்கப்போறது நான் மட்டுமில்ல. உங்களை நம்பியிருக்கிற தங்கச்சிமாருங்களும்தான். ஆனால் அதுக்கப்புறம் எல்லாரும் என்னைத்தான் தூற்றுவாங்க. என்னாலதான் நீங்க இந்த முடிவை எடுத்திருப்பீங்கன்னு ஏசுவாங்க. உங்களைப்பற்றி இப்ப நான் நல்லா தெரிஞ்சிக்கிட்டேன். பிரச்சினைகளை எதிர் கொள்ள பயந்து விபரீதமான முடிவுகளை எடுக்க நினைக்கும் உங்களை நம்பி நான் என் வாழ்க்கையை ஒப்படைக்க தயாரில்லை. நீங்க உங்க இஷ்டப்படி எது வேணும்னாலும் செஞ்சிக்கங்க. நான் வாறேன்...."

அவள் விடு விடு வென அந்த இடத்தை விட்டு நடக்க பாலசங்கர் - எதுவும் சொல்ல முடியாமல் விக்கித்து நின்றான். அவனுடைய மனதில் இருந்த தற்கொலை எண்ணம் சிறிது சிறிதாக கரையத் தொடங்கியது.



படிப்பகம்

www.padippakam.com

# தகுதி

அந்த ஆலமர நிழலையும் தாண்டி 'கியூ' நீண்டிருந்தது. மல்லிகைத்தீவு கிராமத்தின் சக்தி மிகு சிவன் ஆலயம் தற்போது பாதுகாப்புப் படையினரின் பாசறை! அதற்கு முன்னால் தான் அந்த சடைத்த ஆலமரம் உண்டு. அக்கிராமத்தார்கள், கிராமத்தை விட்டு வெளியில் செல்வதாயின் பாதுகாப்பு படையினரின் 'பாஸ்' பெற வேண்டும். அதற்காக நின்ற அந்த 'கியூ'வில் இணைகிறேன் நான், கையில் 'பைல்' லுடன்!

என் முன்னால் கந்தசாமி அத்தானும் பின்னால் மணி அக்காச்சியும் நிற்கிறார்கள். நேரமும் போய்க்கொண்டிருக்கிறது. 'கியூ'வும் வேகமாக நகர்ந்தபாடில்லை. மெதுவாக எனது முறை வரும்வரை என் கையில் இருந்த 'பைலை' தட்டிப்பார்க்கிறேன். 'நேற்று வரை இந்த ஆவணங்களை திரட்ட என்ன பாடு பட்டேன். நல்லவேளை தலைமை ஆசிரியர் நிக்கொலாஸ் ஐயா பரீட்சை பெறுபேறுகளை பத்திரப்படுத்தா விடின் அதுவும் அந்த வன்செயலில் எரிந்திருக்கும். பெரியஐயாவுக்கு நன்றி!' என்று மனதில் எண்ணிக் கொண்ட வேளை எனது பெயரும் இலக்கமும் அழைக்கப்படுகிறது. இதயத்தில் மகிழ்ச்சி பொங்க துள்ளி ஓடுகிறேன்.

எனது 'பைலை' நேர்முகப் பரீட்சை நடத்தும் அதிகாரியிடம் கையளிக்கிறேன்.

"உமது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் எங்கே" என்றார் அதிகாரி!

"எரிந்து விட்டது" என்றேன்.

"உம்மட அம்மா அப்பாட சேட்டிபிக்கேற்றும் இல்லை என்ன?" என்று தொடர்ந்தார் அதிகாரி. எனக்கு பொத்துக் கொண்டு வருகிறது கோபம். அடக்கிக்

## கனகசபைதேவகடாட்சம்



கந்தசாமி அத்தானிடம் கதை கொடுக்கிறேன்.

"அத்தான்! இண்டைக்கு இரண்டு மணிக்கு திருக்கோணமலையில வாத்தி வேலைக்கு இன்ரவியூ. அதுதான் கொஞ்சம் அவசரமாக ப்போகவேணும். கொஞ்சம் முன்னுக்கு விடுவீரோ?" என்று கூறி பதிலுக்கு காத்திருந்தேன்.

"அட! இன்ரவியூக்கா போறாய்! நேரத்தோட சொல்லலாமே! இஞ்சபாருங்க! முன்னுக்கு நிக்கிறவங்க! கொஞ்சம் இடம் கொடுங்க! நம்மட பயல் வாத்தி இன்ரவியூக்கு போய்போறான். நாளைக்கு வாத்தியாரானால் நம்ம பள்ளிலதானே படிப்பிப்பான். இறக்கு மதி வாத்தி எத்தின பேர் வந்து தங்கட விசயம் முடிஞ்சயுடன் மாறித்தானுகள்! இது நம்மடபுள்ள! ஆ..... விடுங்க! விடுங்க!" என்று புரட்சிகர சொற்பொழிவுடன் 'கியூ' வை உடைத்து முன்னுக்கு போகவிட்டார் கந்தசாமி அத்தான்! கல்விக் கந்தோர் முன்னால் இருந்த வாங்கில் இன்ரவியூக்கு வந்தவர்களுடன் அமர்கிறேன். இலக்கமும் பெயரும் கூறி அழைக்கப்படுகிறார்கள்.

கொண்டு, பவ்வியமாக "ஐயா! என்ர அடையாள அட்டையை தவிர சகலதும் வன்செயலில் எரிந்து போச்சு! ஆனா, இந்தாங்க அடையாள அட்டை! நீங்க கேட்ட அத்தாட்சிப் பத்திரங்கள் எல்லாம் கொடுத்துதான் இது எடுத்தது! இந்தாங்க! மற்றது என்ர பரீட்சைப் பெறுபேறுகள்! அது நான் குதிரை ஓடாம சொந்தமாய் எழுதி 'பாஸ்' பண்ணியது. மழ, மழ வென பொழிந்து விட்டேன். அதிகாரி என்னை முறைத்துப் பார்த்துவிட்டு 'பைலை' என்னிடம் நீட்டுகிறார். நிச்சயமாய் இந்த வேலை எனக்கு கிடைக்காது என்ற நம்பிக்கையுடன் எனது பைலை வாங்குகிறேன்.'

ஒன்று மட்டும் யதார்த்தமாக புரிந்தது எனக்கு!

'தகுதியானவர்களிடம் தேவையற்றவற்றை கேட்டுத் தகுதியற்ற 'தேவையானவர்களுக்கு' பதவி வழங்க நடாத்தும் நாடகம் இது!' மெதுவாக அகல்கிறேன். வாசலில் இருந்த காந்திஜியின் படம் 'சத்தியம் வெல்லாது' என்றுகூறிச் சிரிப்பது போல் இருந்தது எனக்கு!

# அக்கா!

"அக்காவ பற்றி தகவல் கிடைச்சிச்சாடா?"

வீட்டுக்குள் காலடிவைத்ததுமே அம்மா கேட்டாள்.

இந்தக் கேள்வி எனக்குப் புதிதல்ல. நான் வேலைக்குப் போய் வந்தாலோ வேறெங்காவது போய் வந்தாலோ தினம் அம்மா கேட்கும் கேள்விதான் இது.

அக்காவின் வேதனைதான் அம்மாவுக்கு. அப்பா மட்டும் கொஞ்சம் பொறுத்துப் போயிருந்தால் இன்று அம்மாவுக்கும் எனக்கும் இந்த நிலமை வந்திருக்காது.

அக்காவின் பக்கத்திலும் ஞாயமில்லாமலில்லை. அவளுக்கென்றொரு நல்ல தொழில் இருந்தது. காதலித்து தனக்கென ஒரு பொருத்தமான கணவனை தேர்ந்தெடுக்கும் உரிமையும், வயதுமிருந்தது. ஆனால் அக்காவின் காதலுக்கு பச்சைக்கொடி காட்டும் மனப்பக்குவம் தான் அப்பாவுக்கு இருக்கவில்லை.

அக்கா தன்னோடு ஒன்றாய் வேலை செய்யும் நரேசை காதலித்தாள். நரேசின் வீட்டிலிருந்த எதிர்ப்பைவிட எங்கள் வீட்டில்தான் அவளுக்கு எதிர்ப்பு அதிகம். அதுவும் அப்பாவிடம் மட்டும்தான். என்னயிருந்தாலும் அம்மா அக்கா பக்கம் தான்.

எனக்கு கிட்டத்தட்ட 18 வயதிருக்கும். அன்றொரு நாள் அக்கா நரேசோடு மாலையும் கழுத்துமாக வந்து நிற்க அப்பா கொதித்தெழுந்தார்.

"இனிமே உனக்கும், எங்களுக்கும் உறவு இல்ல. நான் உன் அப்பாவுமில்ல. நீ என் பிள்ளையுமில்ல." என்று அப்பா ஒரே மூச்சில் சொன்னார்.

பாவம் அம்மா அன்றிலிருந்து தான் படுத்த படுக்கையாகிப் போனார். அப்பாவுக்கு எதைப்பற்றியும் கவலையில்லை. எல்லாவற்றையும் விட அவருக்கு கௌரவமும், அந்தஸ்தும் பெரிது.

அக்கா இருக்கும் ஊரில்கூட குடியிருக்க கூடாது என என்னையும் அம்மாவையும் அழைத்துக்கொண்டு கண்டிக்கு குடியிருக்க வந்தவர், ஒரு நாள் நெஞ்சடைப்பு வந்து எல்லாவற்றையும் விட்டு விட்டு மரணமாகிப் போனார்.

ஆனாலும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் எமக்கு எந்தப் பிரச்சனையும் இருந்ததில்லை. நான் பட்டப்படிப்பை முடித்து வைத்திய தொழிலில் சேர்ந்திருந்தேன்.

அந்த மகிழ்ச்சியைவிட அம்மாவுக்கு அக்காவைப்பற்றித்தான் நினைப்பு. நானாவது அக்காவைப் போய் பார்த்துவிட்டு வரலாம் என்று நினைத்தாலும் உள்நாட்டு யுத்தத்தால் அங்கு போகவே முடியாத நிலை.

என்னை வடபகுதிக்கு உடனடியாக போகும்படி நியமித்திருந்தார்கள். யுத்தம் உக்கிரமாக நடைபெறும் பிரதேசம் என்பதால் அங்கு ஏற்படும் மனித இழப்புக்களை



## ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்

கட்டுப்படுத்தி காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்னுடையது.

அப்படியானதோர் பொறுப்பு கிடைத்தது மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் அம்மாவை தனியாக விட்டு விட்டு எப்படி போவது என்பதில் தான் கவலையாயிருந்தது.

அம்மாவிடம் இதைப்பற்றி சொன்னதும் மனப்பூர்வமாக சம்மதித்தாள்.

"தயங்காம போடா.....! அங்க போயி சரி அக்காவ தேடிப் பாரு. எப்படி சரி அவளையும் குடும்பத்தோட இங்க வரச் சொல்லு!"

அம்மாவின் தைரியத்தால் மகிழ்ச்சியோடு வடக்கிற்கு பயணமானேன்.

யுத்தத்தால் பாரிய இழப்புக்கள் நிகழ்ந்து கொண்டிருந்த வேளை. வடக்கு பகுதிகளில் சில இடங்களில் மனித குருதியாறு ஓடிக்கொண்டிருந்தது.

இரவுகளிலெல்லாம் நோயாளிகளையும், காயப்பட்டவர்களையும் கண்காணிக்க வேண்டிய கட்டாய கடமை.

அன்றிரவு பல இடங்களில் இடம்பெற்ற 'ஷெல்' வீச்சுக்களால் ஆயிரக்கணக்கான உயிரிழப்புக்கள். இறந்தவர்கள் அனேகமானவர்களை பார்வையிட்டுக்கொண்டு வந்த எனக்கு பகீரென்றது.

நிச்சயமாய் அது..... அக்காவின் உடல்.... தான்.... அருகில் நரேசின் உடல். ஓ.... தெய்வமே உயிரற்ற உடல்களாய் அவர்கள்.

நெஞ்சை ஏதோ அடைக்கின்ற மாதிரி.... கண்கள் குளமாகிற மாதிரி.... கதறி அழ நினைத்தேன். வாய் வரவில்லை.

ஒருவேளை அவர்களின் குழந்தைகளின் உடல்களும் இதில் இருக்கலாம். அம்மாவை நினைத்துப்பார்த்தேன். மனம் வலித்தது.

அடுத்த நாள் அவசரமாக லீவுபோட்டு கண்டிக்கு பயணமானேன். அம்மாவைப் பற்றிய நினைவே சுற்றிச் சுற்றி வந்தது.

இதைப்பற்றி எப்படி அம்மாவிடம் சொல்வது.....! அவள் அதைத் தாங்கிக் கொள்வாளா? நினைத்துப் பார்க்கவே உடல் நடுங்கியது.

வீட்டுக்கு அருகில் வரும்போதே மனம் துடித்தது. வீட்டை நோட்டமிட்டேன். வாசலில் சனம் நிரம்பியிருந்தது. நொடியில் மனம் குழம்பிப்போனேன்.

அம்மாவுக்கு ஏதும்...! அப்படியிருக்கக்கூடாது. வாசலிலிருந்தவர்களின் அனுதாபப் பார்வை என் மேல் விழ குழம்பிப் போனவனாய் உள்ளே போனேன்.

அங்கே அம்மா பிரேதமாகக் கிடத்தப் பட்டிருந்தாள்.

# அரும்புகளும் ஆசைகளும்

ஐந்துநிமிட தாமதம்: பிடிக்க வேண்டிய பஸ்ஸைக் கோட்டை விட்டுவிட்டு நின்றிருந்தான். இனி அரைமணி அல்லது ஒரு மணி நேர காத்திருப்பின் பின் அடுத்த பஸ்வரும். "பஸ்ஸை எதிர்பார்த்து பாதிவயசாச்சு..." பாடல் வரிகள் ஞாபகம் வர சிரிப்பு வந்தது. பொன்னான நேரம் இந்த அரை மணிக்குள்ளாக ஆயிரம் காரியங்கள் முடித்திருக்கலாம். நினைத்தவனாய் பார்வையை ஓடவிட்டான். நின்று நின்று பார்த்தான். கால் வலித்தது.

கும்பல் கும்பலாய் மனிதர்கள். இரண்டிரண்டு பேராய் மனிதர்கள். பஸ்தரிப்பில்



கொஞ்சம் பேர். வீதியோரத்தில் கொஞ்சம் பேர். கையைக் கையை ஆட்டி சிலபேர் பேசினர். சிலர் வாயைப் பிளந்து கேட்டனர். குந்தியிருந்து கதைத்தவர்கள்; சாய்ந்திருந்து அளவளாவியவர்கள் இப்படித்தான். இப்படியே தான் வம்பளந்து வாய் பேசிப் பேசியே நேரத்தை வீணாக்கும் மனிதர்கள் நம்மவர்கள். அதுதான் நாடு முன்னேறுவதில்லை. வெளிநாட்டவரைப் பாருங்கள். யாராவது நின்று யாருடனாவது பேசி, அரட்டையடிக்கிறார்களா? அவர்களுக்கேது நேரம்-முன்னேறுகிறார்கள். நாடும் முன்னேறுகிறது...' கையிலிருந்த புத்தகத்தை விரித்தவன் வரிகளை வாசித்து யோசித்தான்.

"ஐயா...ஐயா பிச்சை போடுங்க..." குருட்டு வயோதிபனும், அவன் கையுதவியாய் ஒரு சிறுவனும். களையான முகமும் குறுகுறு கண்களுமாய் சிறுவன். கிழிந்த சட்டையும், சாயம் போன அரைக்காற்சட்டையும் ஏழ்மைக்கு கட்டியம் கூறின. பாவப்பட்ட ரகு இரண்டு ஒரு ரூபா நாணயங்களை நீட்டினான். சிரிப்பு கொப்பளிக்க "தேங்க்யூ சேர்" சொல்லி வாங்கியவனைப் பார்த்து புன்னகைத்தான். ஒரு ரூபாயை தன் பையில் போட்டவன் மீதி நாணயத்தை கிழவனிடம் கொடுத்தான். கிழவன் ஆவலுடன் தடவிப்பார்த்து தன் பைக்குள் போட்டுக் கொண்டான் அதை. ரகுவுக்குள் வியப்பு. சம்பாதிப்பதில் 50க்கு 50 பொலிசியோ? இல்லை திருட்டுத்தனமாகக் குருட்டுக் கிழவனிடம் கையாடுகிறானா பையன்? புரியவில்லை.

நாலைந்து பேர் நாணயங்களை நீட்ட சிறுவனும் கிழவனும் நன்றாக "கலெக்சனை" முடித்துக்கொண்டனர். கிழவன் களைத்துப் போய் மரநிழலில் அமர, சிறுவன் தன்கையிருப்பை கணக்கெடுத்தான். முகத்தில் ஏராள பிரகாசம்.

சிட்டென கடைவீதிப் பக்கம் பறந்தான் சிறுவன். ரகு பார்த்துக் கொண்டேயிருந்தான். சாப்பிட ஏதும் வாங்குவான்போல நினைத்த ரகுவுக்கு அதிர்ச்சி. சிறுவன் "ஸ்டிக்கர்" விற்பவனிடம் பேரம் பேசிக் கொண்டிருந்தான். ஐந்து நிமிட தேர்வு. கையில் நிறைத்தவனாக திரும்பி வந்தவன் கிழவன் பக்கதிலமர்ந்து ஒவ்வொரு படமாய் பார்த்து ரசித்தான். பேணுதலாக சட்டென நிமிர்ந்தவன் ரகு தன்னையே பார்ப்பதைக் கண்டதும் லேசான வெட்கம், தயக்கம் மேலிட தலையைக் குனிந்தான்.

ரகு அவன் பக்கத்தில் போய் நின்றான். "இதெல்லாம் யாரு? படங்களைச் சுட்டிக் காட்டினான்." "வ... வந்து படங்கள்ல நடிப்பாங்களே அவங்க... இ...இது சல்மான் கான், இது அமீர்கான், இது..." ரகு இடைமறித்தான். "காசு அநியாயமில்லை?" சிறுவன் ஒரு கணம் தயங்கினான். "ரொம்ப ஆசையாயிருந்திச்சு ஸார். ஒங்களுக்கு ஒரு குட்டித் தம்பியிருந்தா இதெல்லாம் வாங்கிக் குடுப்பீங்கள்ல. எனக்கு யாருமில்ல. நானே வாங்கிக்கிறேன் ஸார்." கணீரென்ற குரல் ஆரம்பத்தில் தயக்கமாய் ஒலித்தாலும் இப்போது தடங்கலின்றி வெளிவந்தது.

"படமெல்லாம் எங்க பார்ப்ப? வீட்லயா?" டி.வி. இருக்காதென்று தெரிந்தும் ரகு கேட்டான். "சேரில எல்லா வீட்லயும் டி.வி இருக்கு ஸார். நம்ப வீட்ல இல்ல. ஆனா விடுவேனா? பக்கத்து வீட்ல போய் பார்த்துடுவேன்."

"ஸ்கூல் போக மாட்டியா?" ரகு. "என்ன ஸார் கேட்கறீங்க? எனக்கெல்லாம் ஒரு ஸ்கூலு. படிப்பு. சரிவருமா? ஆசையிருக்கு. ஆனா வசதிதான் இல்ல. நான் ஸ்கூலு போய்ட்டா கெழவன கூட்டிட்டு போறது யாரு?"

ரகு பரிதாபப்பட்டான். என்ன செய்ய முடியும்? வசதியும் வாய்ப்பும் பறிக்கப்பட்ட ஆயிரமாயிரம் வறிய பிஞ்சுகளில் இதுவுமொன்று. ஆனாலும் வயதுக்குரிய ஆசைகள், குறும்புகள் அப்படியே இருக்கின்றன. பாவம்.

அரைமணிநேரம் போனதே தெரியவில்லை. பஸ்ஸைக் கண்டதும் ஓடிப்போய் தொற்றிக் கொண்டான் ரகு. வீட்டில் அக்காவும் மச்சானும் நீண்ட நாட்களின் பின் வந்திருக்க சந்தோசம் அப்பிக் கொண்டது. அக்காவின் கடைக்குட்டிப் பயலும் வந்திருந்தான்.

"ரகு அங்கிள். இந்தா இதப் பாருங்க. எல்லாமே நான் சேர்த்தது. நல்லாயிருக்கா?" கைக்குள் ஒரு புத்தகத்தை திணித்த கடைக்குட்டிப் பயலை அணைத்துக் கொண்டான். "என்னடா இதெல்லாம்" புத்தகத்தை விரித்தான்.

நிறைய ஸ்டிக்கர்கள். வர்ண வர்ணமாய்... விதவிதமாய். "இது யார் தெரியுமா? சல்மான் கான்... இது அமீர் கான்... அழகாயிருக்கில்ல. நாளைக்கு நீங்கே வேலக்கிப் போய் வர்றப்போ இன்னும் 'ஸ்டிக்கர்' நிறைய வாங்கிக் கொண்டாருவீங்கல்ல...." தொடர்ந்து பேசியவனையே பார்த்துக் கொண்டிருந்தான் ரகு. பிச்சைக்காரப் பையனின் வார்த்தைகள் மனதுக்குள் எதிரொலித்தன. மீண்டும் பரிதாபப்படுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை அவனால். அரும்புகள் எங்கேயிருந்தாலும் ஆசைகள் ஒன்றுதான் எனப் புரிந்த கணங்களில் மனம் பாரமான உணர்வு பிறந்தது.

## ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி

# அவளுக்கு ஒரு கடிதம்

அன்று புது உற்சாகத்தோடு நான் வீட்டிலிருந்து வெளியேறினேன். என் கையில் ஒரு கடிதம் இரண்டாக மடிக்கப் பட்டிருந்தது. அதை ஒரு முறை நன்கு பார்த்துவிட்டு சற்று நேரம் சிந்தித்தேன். இரண்டு நாட்களாக அந்தக் கடிதத்தை நான் ரிசானாவிடம் கொடுக்க நினைத்தும் முடியவில்லை. இன்று எப்படியாவது கொடுத்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக்



## நிந்தவூர் எம். ஹிதாயத்

கொண்டேன். இதை அவளிடம் எப்படிக் கொடுப்பது. நண்பர்களிடம் கொடுத்தனுப்பலாமா? வேண்டாம். அவர்களிடம் கொடுத்தனுப்புவது முறையல்ல. நான்தான் கொடுக்க வேண்டும். எங்கே வைத்துக் கொடுக்கலாம்? அவள் வீட்டில் இருப்பாளோ என்னமோ... எனக்கு அவள் வீடும் சரியாகத் தெரியவில்லை. முகவரிதான் இருக்கிறதே... கவலைப்படத் தேவையில்லை.

நினைத்துக்கொண்டே சைக்கிளின் மேல் தாவி ஏறி வேகமாய் ஓட்டினேன்.

ஒரு மாதிரிக் கஷ்டப்பட்டு ரிசானாவின் வீட்டைக் கண்டுபிடித்தேன். வீட்டு முற்றத்தைக் கடந்து வாசல் படிக்கு வந்தேன். வீட்டுக் கதவு பூட்டப்பட்டிருந்தது. அழைப்பு மணியை அழுத்தினேன். சற்று நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. ஒரு கிழவி வெளியே எட்டிப் பார்த்தாள். ஒரு புதியவனைப் பார்ப்பது போல் என்னை ஏற இறங்கப் பார்த்தாள். அவள் ரிசானாவின் பாட்டியாகத் தான் இருக்க வேண்டும் என்பதை அவள் தோற்றத்தில் இருந்து ஊகித்துக் கொண்டேன்.

"இங்கே... ரிசானா என்கிறது...?" நான் வார்த்தைகளால் தடுமாறினேன்.

"என் பேத்திதான்; என்ன வேண்டும் உங்களுக்கு?"

"அவங்களைக் கொஞ்...சம் சந்திக்க வேண்டும்." எச்சிலைத் தொண்டைக்குள் தள்ளிக் கொண்டே கேட்டேன்.

"உள்ளே இருக்கிறா... ஒரு நிமிஷம்"

என்ற கிழவி உள்ளே போனாள். நான் வெளியே அவளுக்காகக் காத்து நின்றேன். சற்று நேரத்தின் பின் ஒரு பெண் எட்டிப்பார்த்தாள். என்னைக் கண்டதும் அவள் முகம் நிலவைக் கண்ட இரவுபோல் மெல்லப் பளிச்சிட்டது. புன்னகைத்தாள்.

"நீங்களா...! உள்ளே வாங்க...! எப்போ ஊருக்கு வந்தீங்க..?" என்று கனிவோடு வரவேற்றாள். உள்ளே நுழைந்த நான் வெளிநாட்டில் என்னோடு ஒன்றாய் வேலை பார்த்த அவள் கணவன் என்னிடம் கொடுத்திருந்த மடலை அவளிடம் நீட்டினேன்.

## வாசகர் கவனிக்க

முரசுடன் உங்கள் சகல கடிதத் தொடர்புகளுக்கும், ஆக்கங்கள் அனுப்பிவைக்கவும் பின்வரும் முகவரியை மட்டுமே குறிப்பிடுங்கள்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

**வா**னத்தில் நிலவு களவு போயிருந்தது. முல்லை மரத்தடியில் காத்திருந்த வில்லவனுக்கு மட்டும் நிலவு நேரில் வந்து நின்றது.

நிலவு வீசிய புன்னகை வெளிச்சம் இருளைத் தின்றது. வில்லவன் இதயத்தையும் வென்றது.

நிலவின் பெயர் நந்தினிதேவி. சுருக்கமாக நந்தினி.

தென்றலுக்கும் அவள் அங்க எழில் காண ஆசை. நெஞ்ச எழில்களை மூடியிருந்த துகிலை தென்றல் தொட்டிழுத்துக் கொண்டிருந்தது. முயற்சியில் பாதிதான் வெற்றி.

தென்றலுக்கு நன்றி செல்வதா, கண்டனக்கணை விடுவதா என்று வில்லவன் யோசித்தான்.

"பார்த்தது போதும்!" என்றாள் பலாச்சுளை திறந்து.

"இன்னமும் பார்க்கவே ஆரம்பிக்கவில்லையே." என்றான் வில்லவனும் விட்டுக் கொடுக்காமல்.

"கண்கள் பொய் சொல்லுகின்றன." அது நந்தினி.

"இல்லை மெய் சொல்லுகின்றன. ஆனாலும் கண்களுக்கும் உண்ணக் கிடைக்காத காட்சிகளும் இருக்கின்றனவே!" இது வில்லவன்.

நந்தினி நாணப்பட்டாள். நாணமும் ஒரு சுகம் என்று தன் மனம் எண்ணக் கண்டாள்.

நாணம் ஒரு சுகம்தான். பொய்யில்லை. அதுவே ஒரு சுமையாக மாறி தலையைக் குனியவைத்து தரை நோக்கவும் வைத்துவிடுகிறது.

நாணச் சுகத்தில் மனம் லயித்து, நாணச் சுமையில் தலை கவிழ்ந்தவள், வில்லவன் கரம் தொட்டபோது, சூரியக் கதிர் தாமரையில் பட்டதுபோல் மலர்ந்து போனாள். மனம் மகிழ்ந்து போனாள்.

அவன் மூச்சுக்காற்று கன்னத்தில் பட்டு, கழுத்தில் பரவி, அவள் இரத்தத்தில் கலந்தது.

மூச்சு மட்டும் வருகிறதே என்ன செய்கிறார்? நிமிர்ந்து பார்க்காமல் வெட்கம் கழுத்தைப் பிடித்தது.

வெப்பம் தொட்ட இடத்தில் குளிர் விட்டுப் போனதால், குளிர் வேண்டும், குளிர்விக்க வேண்டும் என்று மனதுக்குள் விண்ணப்பம் விரிந்தது.

அவனோ மாம்பழக் கன்னங்களில் மனதைக் கொடுத்துவிட்டு, கனியிருப்பது எதற்கென்பதை சற்று நேரம் மறந்து போயிருந்தான்.

அவளுக்கோ பொறுமை மனதுக்குள் அடித்த புயலில் தூக்கிவீசப்பட்டு கொண்டிருந்தது.

மேலே மரத்தில் இருந்து முல்லைப் பூ ஒன்று பிரியாவிடை பெற்று அவள் மேலாடையில் விழுந்தது.

தொட ஒரு சந்தர்ப்பம் வேண்டாமா?



# பொறுக்கலாம் பொறு!

"நந்தினி!" பதிலுக்கு "ம்" என்ற ஒரு சொல்லே உதட்டிலிருந்து அத்திப்பூவாய் உதிர்ந்தது.

"பூ மரத்தில் இருக்கும். கொடியில் இருக்கும். கனியிலும் இருக்குமோ? முல்லைப் பூவுக்கு வந்த ஆசையைப் பார்த்தாயா?!

நந்தினி அவன் சொன்னதை ரசித்தாள். வெளிக்கு மட்டும் ஒரு நடிப்பிற்காக சினந்தாள்.

"தேடப்போகிறார்கள் என்னை!"

"ஓடப்போகிறாயா என்னை விட்டு? அதுதான் நடக்காது இன்று"

"இன்று வந்ததே பெரிய காரியம்."

"என்றும் சந்திப்பதுதானே காதலில் முக்கிய காரியம்."

"ஆசைதான்!"

"ஆமாம் வானமளவுக்கு!"

"எட்டத்தான் முடியாது!"

"ஏன் முடியாது, எட்டும் தூரத்தில்தானே இருக்கிறாய்!"

"திரு.... திரும்புவது?"

"ஐந்தாறு மாதங்கள் ஆகுமாம், அப்பா சொன்னார்!"

வில்லவன் முகம் நிலவு களவுபோன வானத்தை வெல்லும் இருளானது.

இடையிலே மௌனம்–

சுவர் எழுப்பிக் கொண்டிருந்தது.

நந்தினிதான் சுவரைத் தாண்டினாள்.

"தாங்கத்தான் வேண்டும். தங்கிவிடவா போகிறோம்?" என்றாள். ஆறுதல் சொன்னாள்,

உள்ளே மனம் அழுது கொண்டிருந்தது.

அவன் கரம் தொட்டு எடுத்து தன்மார்பில் வைத்துக் கொண்டாள்.

துயரம் வரும் போது பெண் கொடுக்கும் வரம் அது.

# இலக்கிய நயம்

வில்லவன் அந்தப் பூவை விரலால் எடுத்தான். ஆனால் விஷமத்தோடு எடுத்தான்.

அவள் மனதுக்குள் நினைத்தாள்; ஆசை வெட்கமறியாது என்பது சரிதான். இல்லாவிட்டால் என்கரம் ஏன் தடுக்காமல் இருக்கிறது?!

வில்லவன் மனதிலும் ஒரு எண்ணம் ஓடியது. நான் ஒரு மடையன், நாடிவந்த நதியில் நனையாமல் தாமதித்துக் கொண்டிருக்கிறேனே!

"இன்று மட்டும் தானே!"

நந்தினி சொன்னது விளையாட்டாய் அல்ல என்று, அவள் குரலில் இருந்த சோகம் சொல்லியது. என்றாலும் கேட்டான்:

"விளையாடுகிறாயா?"

"விளையாடுவது விதிதான்!"

"என்ன சொல்கிறாய் நந்தினி?"

"நாளை காலையில் புறப்படுகிறோம் யவன நாட்டுக்கு!"

வில்லவன் உடைந்த அம்பாய் நொருங்கிப் போனான்.

"மரணத்தைக் கண்டு கூட சிரிக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள். மனமொன்றாய் போனபின்னர் வரும் பிரிவைக் கண்டு கலங்காதோர் யாருண்டு சொல்!" என்றான்.

"ஏன் இல்லை, பலருண்டு. இப்போது அவர்களிலே நாமும் உண்டு"

"தேறுதலுக்காகச் சொல்லும் பொய்தானே!"

"நான் சொன்னால் பொய் என்பீர்கள். திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார்!"

## தருவது ரசிகன்

சோகம் சுமந்த புன்னகையோடு வில்லவன் கேட்டான்.

"அவரும் பிரிவுக்கு பின் பாட்டோ பாடியிருக்கிறார்?"

பின்பாட்டல்ல, பிரிவிலும் பேருறுதி காட்டிய காதலர்களை கண்முன்னால் காட்டியிருக்கிறார்".

"ஓ ஹோ....!"

**"பிரியமுடியாத பிரிவென்றாலும், வாராது வந்துவிட்டால், துன்ப நோயில் துவளாமல், பிரிந்தபின் பொறுத்திருந்து வாழ்வோர் பலர் பாரில் உண்டாம்."**

"அந்தப் பட்டியலில் நம்மையும் இடம் பிடிக்க வைத்துவிட்டதே இக்கொடிய பிரிவு!"

"துன்பத்தை வெல்லும் வாள் நம்பிக்கைதானே. மீண்டும் இணைவோம் என்ற தன்னம்பிக்கை நம் காதலுக்கு இல்லையோ சொல்லுங்கள்."

"ஏன் இல்லை?"

"அது போதும். கவலையை விடுங்கள்!"

"விட்டு விட்டு?"

"நான் எதற்கு இருக்கிறேன்?" என்றாள்.



அவனில் சாய்ந்தாள்.

பிரியப்போகும் வேளையில் காதலர்கள் தழுவிக் கொண்டால் உயிர் மூச்சுத் தடுமாறும். உடல் இரண்டும் ஒன்றாக உருமாறும்.

இடையிலே நீண்ட பிரிவு என்பதால் இப்போது குறுக்கிட காற்றுக்கும் வலிமையில்லை.

"நந்தினி!"

இருளை உடைத்துக் கொண்டு குரல் வந்தது. அப்பாவின் குரல்.

நந்தினி புள்ளிமானாய் துள்ளியெழுந்து ஓடினாள்.

இனி எப்போது மான் திரும்பிவரும்?

வில்லவன் விழிகளில் பெருகிய அருவியை தடுத்து அரணாய் நின்றது நந்தினி சொன்ன குறள்.

**"அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்**
**பின் இருந்து வாழ்வார் பலர்"**

குறள்–1160. அதிகாரம்–116.

# சிந்தியா பதில்கள்

**டியர் சிந்தியா! மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் சந்தர்போல் ஒரு இந்தியரா?**

வே. தினகரன், கெலிவத்த.

உறுதியாக ஆம். அப்பா பெயர் நாராயணன்.

□□

**மலையக மக்களின் தற்போதைய நிலைமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

எஸ். ஆர். என். நல்லுசாமி, அக்கரபத்தனை.

தேர்தல் திருவிழாக் காலங்களில் மட்டுமே கௌரவப் பிரஜைகளாக கவனிக்கப் படுகிறார்கள்.

□□

**கண்ணதாசனின் மகள் விசாலி தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?**

ஏ. இராஜகுமாரன், ஹெகித்த, வத்தளை.

வாய் இருப்பதால் பிழைத்துக் கொள்கிறார். நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி பிரபலமாகிக்கொண்டிருக்கிறார்.

□□

**டியர் சிந்தியா! பொறாமை எதில் இருக்க வேண்டும்? பொறுமை எதில் இருக்க வேண்டும்?**

எச். எம். றிஸ்வி, அஸ்ஹர் நகர், மன்னார்.

மோசக்காரர்களோடு வரும் பிரச்சனைகளில் பொறாமை வேண்டும். நேசமுள்ள இடத்தில் வரும் பிரச்சனைகளில் பொறுமை வேண்டும்.

□□

**சிந்தியா! எழுத்தாளராக வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்?**

மங்களபிரியா, மாத்தளை

எதை எழுத வேண்டும்; எப்படி எழுத வேண்டும் என்று தெரிய வேண்டும். தனக்கென்று ஒரு தனிப்பாணி வேண்டும். எழுதுவதெல்லாம் பிரசுரமாக வேண்டும் என்று நினைக்கக்கூடாது. ஏன் பிரசுரமாகவில்லை என்று தெளிந்து திருத்திக்கொள்ள வேண்டும். முக்கியமாகத் தேவை முயற்சி– விடாமுயற்சி.

□□

**தவறு செய்யாமல் பலரின் முன் குற்றவாளியாகப் பழி சுமத்தப்பட்டு நிற்பவருக்கு உங்கள் ஆறுதல்?**

எனிட்டா குறூஸ், நாவல, ராஜகிரிய.

தர்மம் சூரியனைப் போன்றதாயினும் அதனையும் கிரகணம் போல் சூது கவ்வும். கிரகணத்தால் சூரியன் சோர்ந்தா போய்விட்டது? கிரகணம் தற்காலிகம் மட்டும் தான்.

□□

**சர்ஜாவில் இலங்கை அணிக்கு கிடைத்த வெற்றி குறித்து?**

எம். மைதிலி, கொழும்பு–06.

விடாமுயற்சி.

□□

**மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா மீண்டும் உயிருடன் வந்தால் என்ன நடக்கும்?**

ந. முருகையா, நிவித்திகலை

விசாரணைக்கமிஷன்தான் முதலில் நடக்கும்.

□□

**நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். என்ன பரிசு கொடுக்கலாம்?**

வெ. மோகனகுமார், செங்குவாரி.

நாய்க்குட்டி! (யோசனை உபயம்–'ஆசை' திரைப்படம்)

□□

**தரமான இயக்குநர்கள் கூட இன்று வீழ்ச்சியடைந்து விட்டனரே. காரணம் என்ன?**

ஜெ. யூட். ஹிலேரியன், மட்டக்களப்பு.

ஒரு படம் ஹிட்டாகிவிட்டால் ஒன்பது படங்கள் செய்ய உடனே ஒப்புக் கொள்கிறார்கள். மூளையில் உள்ள சரக்கு தீர்ந்து போகும். உற்பத்தி செய்ய நேரமிருக்காது.

□□

**கண்ணனும்–கீதையும் அடிக்கடி என் கனவில் வந்து போகிறார்களே. காரணம் என்ன?**

வி. சுரேஸ்கண்ணா, இருதய புரம், மட்டக்களப்பு

எதற்கோ குறிவைத்தீர். இடையிலே மனம் தளர்ந்தீர் என்று நினைக்கிறேன். வில்லால்தான் குறிவைக்க வேண்டும் என்றில்லை, சொல்லால், மனதால், கண்களால் என்று எத்தனையோ வழிகள் உண்டல்லவா, இதில் நீர்.....?

□□

**பிரபுதேவாவின் நடனம் இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும்?**

எம். எஸ். அலிராஜா, அக்கரைப்பற்று–06.

இரசிகர்களுக்கு சலிக்கும்வரை.

□□

**இளைஞன் என்பதை இளைஞி என்று கூறலாம் என்றால் கவிஞன் என்பதை கவிஞை என்று கூறலாமோ?**

எஸ். இன்ஷாப் அக்பர், கடுகண்ணாவ.

கவிஞன் என்பதின் 'ன்' என்பதை மரியாதைக்காக தூக்கிவிட்டு 'ர்' போட்டு விட்டால் பொதுப்பால் ஆகிவிடும். பிறகெதற்கு 'ஞை'....?

□□

**அன்பின் சிந்தியா! சிறந்த ஆசிரியர்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?**

என். சிறிக்குமார். களுவாஞ்சிக்குடி

தம்மிடம் பாடசாலையில் கற்கும் மாணவர்களை மாலை நேர ரியூசன் வகுப்புக்கு அழைக்க விரும்பாதவர்கள்.

□□

**தற்போது நடந்து கொண்டிருக்கும் போர் குறித்து உங்கள் கருத்தென்ன சிந்தியா?**

எஸ். ஏ. சி. உம்முஸஹீமா, ஹொறொவ்பொத்தானை.

தீராத நோய் என்று வைத்தியர்களே நினைத்துவிட்டதால், தீராமல் வதைக்கும் நோய்.

□□

## குறுக்கெழுத்துப் போட்டி இல–124

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | ■ |
| | ■ | | ■ | 4 | | |
| 5 | | | 6 | | | ■ |
| | ■ | 7 | | | | |
| ■ | 8 | ■ | | ■ | | ■ |
| ■ | 9 | | | | ■ | 10 |
| 11 | | | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

01. தேவேந்திரன் சபையை அலங்கரிப்பவள்.
04. ஒருவனுடைய தாய்க்கு அடுத்தநிலையில் அமைபவள்.
05. பண்டைய தமிழ் இலக்கியங்களில் சிறப்புற்று விளங்குவது.
07 தோல்வியில் முடிந்த காரியத்துக்காக சிலர் இவ்வாறு துன்பப்படுவார்கள்.
09. நால்வர் பாடிய தேவாரங்களுக்கு சுவையூட்டும்.
11. எந்த உயிரினமும் இவ்வாறு இருக்க விரும்புவதில்லை.
12. சத்திர சிகிச்சைக்குத் தயாராகும் மருத்துவருக்கு முக்கியமானது.

### மேலிருந்து கீழ்

01. சிலருக்கு போதை நிறைந்தால்தான் இது பிறக்குமாம்.
02. வயலுக்கு அவசியமானது- மனிதனுடைய நடவடிக்கைகளுக்கும் தேவைப்படும்.
03. முடிவுக்கு ஒரு துவக்கம் அவசியம்.
06. இல்லங்களுக்கு காற்றோட்டம் ஏற்படுத்தவும் இது உதவும்.
08. பண்டைக்கால விளையாட்டு மீண்டும் புது மெருகுடன் புகுந்துள்ளது.
10. உதார புருடனாகத் திகழும் ஒருவனின் வாழ்வில் இது படியலாகாது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 04.11.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-124
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-122ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பு | ■ | 2 பு | த் | தி | 3 சா | லி |
| 4 தை | ரி | ய | ம் | ■ | வி | ■ |
| ய | 5 ச | ல் | ல | டை | ■ | 6 ம |
| ல் | ந் | ■ | ■ | 7 மு | த் | து |
| ■ | த | 8 வி | ■ | ட் | ■ | பா |
| 9 அ | ன | ல் | ■ | டா | ■ | ன |
| ■ | ம் | ■ | 10 வெ | ள் | ள | ம் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 122இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. கே. அருள் செல்வன். வெள்ளவத்தை.
2. செல்வி. எஸ். சாந்தினி, வத்தளை.
3. செல்வி. ஏ. சித்தி, ஸரீனா, ஹந்தஸ்ஸ..
4. என். ஜனகன், பதுளை.
5. அப்துல் ராஸிக், கந்தளாய்.
6. ஐ. றோசலின் சோபனா, திருமலை.
7. செல்வி. நஸீஹா சலாம், தர்காநகர்.
8. திருமதி. சி. ஜெயச்சந்திரன், பாண்டிருப்பு.
9. எஸ். ஜவ்பர், கெக்குணா கொல்ல.
10. ஆர். சிறீதரன், அப்புத்தளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 4

## குருகுலத்தில் பெற்ற குறைவற்ற கல்வி

இராஜகுமாரன்

உருவிய வாளுடன் உபேந்திரன் நின்றிருந்தான். அவன் எதிரே அமைச்சர் சித்தார்த்தன் இரு கைகளையும் கூப்பிய வண்ணம் வாயில் ஏதோ முணுமுணுத்தபடி நின்றிருந்தார். வேறுபல வீரர்களும் அங்கு நின்றிருந்தனர். அயலிலுள்ள பலர் அங்கு குழுமியிருந்தனர்.

இளவேனிற்காலம். இளஞ்சூரியன் பவனி வரத் தொடங்கி மூன்று நாழிகைகள் கழிந்து விட்டன. இருப்பினும் மென்மையான குளிர் காற்று வீசியதால் அங்கு நின்ற அனைவருள்ளமும் இன்பமா துன்பமா என்று இனந்தெரியாத உணர்வுடன் காணப்பட்டது.



அந்த இல்லத்தின் உள்ளேயிருந்து ஓடோடி வந்தாள் நடுவயதுடைய ஓர் அம்மையார். நேராக அமைச்சர் சித்தார்த்தனின் முன் நின்று மரியாதைக்குரிய வணக்கம் செலுத்திவிட்டு, "ஐயா....! பேரன் பிறந்து விட்டான். தங்க விக்கிரகம் போன்ற அழகான சுட்டிப்பயல்...." இவ்வாறு கூறியதும் அமைச்சர் முகத்தில் இதுவரைநிறைந்திருந்த ஏக்கம் எப்பக்கம் ஓடிஒழிந்ததோ தெரிய வில்லை. முத்து நகைகாட்டி முறுவலித்த அவர் தன் கழுத்தை அணி செய்த முத்து நகையை எடுத்து அம்முத்தான சேதி சொன்ன பெண்ணுக்கு சொத்தாக அளித்தார். அத்துடன் உருவிய வாளுடன் நின்றிருந்த தன் மருமகனான உபேந்திரனை உற்றுப் பார்த்து "மாப்பிள்ளை உங்களுக்கு மகன் பிறந்துவிட்டான்," என்றார் உபேந்திரன். இல்லத்தின் முன் வாயிலில் நின்றவாறே தன் வாளை உயர்த்தி இல்லத்தின் கூரையின் மேலாக வீசி எறிந்தான். தனக்குப் பிறந்தவன் தன்னைப்போல் வீரனாகவே வளர்ந்து வரவேண்டும் என்ற வேணவா பொங்கவே வாளை வீட்டின் கூரைக்கு மேலால் வீசி எறிந்தான்.

அமைச்சர் சித்தார்த்தனின் ஒரே மகளான சித்திராவைத்தான் உபேந்திரன் கைப்பிடித்திருந்தான். தசரத சக்கரவர்த்திக்கு குழந்தைகள் பிறந்து 12 நாட்கள் கடந்த அன்றுதான் உபேந்திரனும் ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையானான். அமைச்சரும் உபேந்திரனும் உள்ளே சென்று குழந்தையைப் பார்த்துவிட்டு வெளியே வந்து இருவரும் அரண்மனையை நோக்கி தத்தமது குதிரைகளில் புறப்பட்டனர்.

### பெயர் சூட்டு விழா

குழந்தைகள் நால்வருக்கும் பெயர் சூட்டுவதற்காக அமைக்கப்பட்டிருந்த மண்டபம் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. உரிய நேரத்தில் வேதியர்களும் அந்தணர்களும் வந்திருந்து வேதங்களை ஓதிக்கொண்டிருந்தனர். சக்கரவர்த்தி தசரதர் முன்வர மூன்று அரசிகளும் அவரைப் பின்தொடர்ந்து வந்தனர். அவரவரருகே சேடிப் பெண்கள் குழந்தைகளை ஏந்திக் கொண்டு வந்தனர். நடு நாயகமாக அமர்ந்திருந்த குலகுரு வசிட்ட மாமுனிவரின் வலது புறமாக அரசர் அமர்ந்தார்.

அரசிகளில் மூத்தவளான கோசலையின் மடியில் கிடந்த உதய சூரியனைப் போல் பிரகாசித்த மூத்த மகனை சக்கரவர்த்தி தன் கரங்களால் ஏந்தி எடுத்து முனிவரின் மடியில் கிடத்தினார். சற்று நேரம் கண்களை மூடியபடி தியானத்தில் அமர்ந்த முனிவர் அகமும் முகமும் மலர குழந்தையை வாரி எடுத்து அதன் வலது காதில் 'இராமன்' என்று மும்முறை கூறினார். பின்னர் அனைவருக்கும் கேட்கும்பொருட்டு "அயோத்தி மாநகரை தனது தலைநகராகக் கொண்டு அரசோச்சும் அரசர்க்கரசரான தசரதனின் மூத்த புதல்வனுக்கு இராமன் என்ற நாமத்தைச் சூட்டுகிறேன்." என்று கூறினார்.

கூடியிருந்த அத்தனை பேருடைய வாய்களிலும் 'இராமன்...... இராமன்' என்ற ஒலி எழுந்தது. இந்த ஒலி விண்ணவர்களையும் சென்றடைந்தது போலும். தேவர்கள் வானில் தோன்றி பூமாரி பெய்து வாழ்த்தி, திருமாலின் திரு அவதாரமான இராமபிரானுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அடுத்து கைகேயியின் குழந்தையை வசிட்ட மாமுனிவரின் மடியில் மன்னவர் கிடத்தினார். அக்குழந்தைக்கு பரதன் என்று பெயரிட்டார். மகாராணிகளில் இளையவளாகிய சுமித்திரையின் குழந்தையை மன்னவர் முனிவரிடம் கொடுத்ததும் சில விநாடிகள் அக்குழந்தையை உற்றுப்பார்த்த வண்ணம இருந்தார். 'இராமனை நிழல்போல் தொடர்ந்து, இம்சை கொடுக்கும் அரக்கர் கூட்டத்தினை அழிக்கப்போகும் வீரன் இவன் தான்' என்பதனை தமது வலிமையினால் உணர்ந்து கொண்டார். இலக்குவன் என்று பெயரிட்டார். சுமித்திரையின் இளைய குழந்தைக்கு- எத்தீமையையும் அகற்ற வல்லவனாக வருவான் என்று கருதி சத்துருக்கன் என்று பெயரிட்டார்.

அரசகுமாரர்களுக்குப் பெயர் சூட்டப் பட்ட தகவல் நாலா திக்குகளுக்கும் அறிவிக்கப் பட்டது. குறைவேதுமற்ற கோசல நாட்டில் இருந்துவந்த ஒரேயொரு குறை- மன்னர் மன்னன் தசரதருக்குப் பின்னர் நாட்டைப் பரிபாலனம் செய்ய வாரிசு இல்லையே என்ற ஏக்கம் -தீர்ந்தது. ஆகவே குடிமக்களின் குதூகலத்துக்குக் குறைவேதுமுண்டோ?

ஏற்கனவே விண்ணுலகில் தீர்மானித்த திருமாலின் அவதாரத்துக்கான காரணம் சிறப்புற ஈடேறுவதற்கு உதவியாக தேவர்களும்- மாநிடராகவும் வானரங்களாகவும் வேறுபல பிராணிகளாகவும் பூமியில் அவதரித்தனர்.

இராமனுடைய அழகு இளஞ்சூரியனை ஒத்திருந்தது. இதுகாலவரை மழலைச் சொற்கள் கேட்க முடியாதிருந்த அரண்மனையில் நான்கு குழந்தைகளும் மழலை மொழி பொழிந்தமையினால் மகிழ்ச்சிக்கடலாகப் பெருகியது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த அரச குமாரர்களை நாட்டு மக்கள் அனைவரும் வந்து பார்த்து மகிழ ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன.

தசரத மாமன்னன் இராமன்பால் அதிகமாக ஈர்க்கப்பட்டிருந்தார். இராமனை விட்டு எங்கும் பிரியமுடியாத நிலையிலிருந்தார். குழந்தைகள் வளர வளர அவர்களின் குறும்புகளும் வளரலாயின. கூடவே அரண்மனையில் குதூகலமும் கொலுவீற்றியிருந்தது.

### குருகுல வாழ்க்கை

தவழ்ந்து, தடம்பதித்து, எழுந்து நின்று, பின்னர் தத்தித்தத்தி நடைபயின்று உரிய பருவம் வந்ததும், கலைகளைக் கற்கத் தொடங்கும் காலம் கனவேகமாக வந்தது.

வசிட்ட மாமுனிவரின் ஆசிரமத்துடன் இணைந்த குருகுலம் சென்று அம்மகானின் சீடர்களாக இருந்து, ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் பயிலச் செல்வதற்குரிய நாள் குறிக்கப்பட்டது.

அன்றுவரை பட்டுப் பீதாம்பரங்களையும் நவரத்தின நன்மணிகள் பதித்த தங்க நகைகளையும் பூண்டு காணப்பட்ட தசரத குமாரர்கள் சகலவற்றையும் துறந்த, இளந்துறவிகள் போல் காணப்பட்டனர். மரவுரிகளைத் தரித்தனர். தலையில் முன்புறம் முடிகளையப்பட்டது. பின்புறம் சிறு குடுமிகள் மட்டும் காணப்பட்டன. நால்வரும் வரிசையாகத் தங்கள் தாய்மார் முன்–தவக்கோலம் பூண்டு காணப்பட்டனர். இக் காட்சியைப் பார்த்த அரசிகள் மட்டுமல்லாமல் மன்னவனும் மன வேதனை அடைந்தார். மந்திரிகளும் பிரதானிகளும், அரண்மனையிலுள்ள அத்தனைபேரும் கண் கலங்கினர். இருப்பினும் குமாரர்கள் நால்வரும் குதூகலமாகத்தான் காணப்பட்டனர்.

உபநயனம் சடங்கும் முறையாக நடைபெற்றது. ஞானக் கண் பெறுவதாகக் கருதப் படும் பூனூல் தரித்தல் இச்சடங்கின் பிரதான அம்சமாகும். இச்சடங்குகள் முறையாக முடிவடைந்ததும் வசிட்ட மாமுனிவரின் ஆசிரமத்தை நோக்கி நான்கு குமாரர்களும் புறப்பட்டனர். இராமனின் பிரிவு தசரத மன்னரைப் பொறுத்தவரை, அவருடைய உயிரே உடலை விட்டு நீங்குவது போலிருந்தது. அவர்கள் நால்வரும் புறப்பட்டதும் அரண்மனை ஒளிகுன்றி சோபை இழந்தது.

அரச போகத்தில் வளர்ந்த சிறுவர்கள், அத்தனை வசதிகளையும் துறந்து தவக் கோலம் பூணுவதென்பது மிகக்கடினமான தொன்று. இருப்பினும் இராமனும் தம்பிமாரும் மிக்க மகிழ்ச்சியுடனேயே இக்கோலத்தைத் தழுவினர்.

குருகுலத்தில் இவர்களுக்குரிய முதலாவது கடமை பிட்சா பாத்திரமேந்தி தத்தமக்குரிய உணவினை யாசித்துப்பெற்று ஆசிரம வாசிகளுடன் பகிர்ந்து உண்ண வேண்டும். இதே காலகட்டத்தில் வேத மந்திரங்களை மனனம் செய்ய வேண்டும். இத்தகைய கடமைகளை நால்வரும் மிகச்சிறப்பாகச் செய்து முடித்தனர். இதனைத் தொடர்ந்து யானை ஏற்றம், குதிரை ஏற்றம், வாள் வீச்சு, வில்வித்தை போன்ற வீரசாகசங்களையும் கற்க ஆரம்பித்தனர். போர்க் கலைகள் அரச குமாரர்களுக்கு இன்றியமையாததுபோலவே ஏனைய நற்கலைகளான இயல், இசை, ஓவியம், நாட்டியம் ஆகியவற்றிலும் தேர்ச்சி பெறுவதும் பிரதானமானது.

வசிட்ட மாமுனிவரினாலும் அவருடைய தேர்ச்சி பெற்ற அனுபவமுள்ள சீடர்களினாலும் அரசகுமாரர்கள் கல்வி, கேள்வி ஞானங்களில் மிக வேகமாக முன்னேற்றம் கண்டனர்.

வேத போதனைகளை நால்வருக்கும் ஏனைய மாணவர்களுக்கும் வசிட்ட மாமுனிவரே நேரடியாகப் போதிக்கலானார். மும்மூர்த்திகளின் செயல்களையிட்டு மாமுனிவர் கூறுமிடத்து "இந்த உலகின் கண் மும்மூர்த்திகளின் செயல்கள் பரிணமிக்கின்றன; பிரம்மதேவன் படைத்தல் தொழில் புரிகின்றார். மகாவிஷ்ணு காத்தல் தொழிலை நடாத்துகிறார். அழித்தல் தொழிலை உருத்திரனாகிய சிவபெருமானே ஏற்றுள்ளார். இம் மூன்று தொழில்களும் வெவ்வேறாகத் தோன்றினாலும் இவை ஒன்றுடனொன்று நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன" என்றார்.

"மனிதனுடைய வாழ்க்கை நான்கு கூறுகளைக் கொண்டதாகும். முதல் இருபத்தைந்து ஆண்டுகள் பிரமச்சரியம். இக்காலகட்டத்தில் கற்க வேண்டியவற்றையெல்லாம் கற்று முடித்து அடுத்துவரும் கிரகஸ்தம் எனப்படும் குடும்ப வாழ்க்கையை ஏற்க ஆயத்தமாக வேண்டும். இதற்கும் இருபத்தைந்து ஆண்டுகள் தரப்பட்டுள்ளன. மனைவி, பிள்ளைகள் என்று இல்லறம் ஏற்கும் காலம் இது. இதனைத் தொடர்ந்து வரும் இருபத்தைந்து வருடங்கள் வானப்பிரஸ்தம் எனப்படும். ஆண்டு அனுபவித்தவை போதும் என்று, போகங்களைத் துறக்க வேண்டிய பருவம் இது. அடுத்து வரும் காலம் சந்நியாசம்–துறவியாகிவிட வேண்டிய பருவகாலமாகும்.


"உலகில் வாழும் ஜீவராசிகள் அனைத்தும் மூன்று குணங்களுக்குள் ஏதாவது ஒரு குணத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இறை பக்தியில் ஒருவனை இட்டுச் செல்லும் சத்குணம்: உலோகாயத நலன்களில் இச்சை கொள்ளவைக்கும் தாமசகுணம்; அரசருக்கு ஏற்ற ரஜ குணம் ஆகிய மூன்று குணங்களும் அவையாகும். ஆட்சிபுரியும் நிலையினை எய்தும் ஒருவன் சாம, பேத, தான, தண்டம் ஆகிய நான்கு தந்திர முறைகளையும் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும்."

இவ்வாறு விளக்கமளித்த வசிட்ட மாமுனிவர், பஞ்ச பூதங்களாகிய பிருதுவி (நிலம்), அப்பு (நீர்), தேயு (தீ), வாயு (காற்று), மற்றும் ஆகாயம் (வான்) ஆகியவற்றின் செயற்பாடுகளையும் விளக்கினார். ஒரு மனித தேகத்தில் இந்த ஐந்து பூதங்களும் எவ்வாறு வியாபித்துள்ளன என்பதனையும் தெளிவுபடுத்தினார். வேதங்களைக் கூறி அவற்றின் உட்பொருளை விளக்கினார். மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோருக்கு ஒரு மனிதன் தரும் முக்கியத்துவத்தை தெரிவித்ததுடன் இவர்களை வணங்குவதாலும் அவர்கள் சொற் கேட்டு நடப்பதனாலும் ஏற்படும் நன்மைகளையும் எடுத்து விளக்கினார்.

உண்மையின் உயர்நிலை, பக்தியின் மேன்மை, நேர்மையின் சீர்மை ஆகியவற்றை விளக்கி பொய்யாலும், பேராசையாலும் அநீதிகளாலும் ஏற்படும் தீமைகளை எடுத்துரைத்தார்.

### அரண்மனை திரும்பிய அரச குமாரர்கள்

முனிபுங்கவரின் ஆசிரமத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்து அவருடைய மேற்பார்வையிலேயே சகலவற்றையும் கற்றுத் தேர்ந்தனர். அரச குமாரர்கள் என்பதனால் நால்வருக்கும் போர்க்கலைகள் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டன.



பயிற்சிகள் முடிவடைந்ததும் "எங்கள் குருவே, தாங்கள் கற்றுக் கொடுத்த கல்வியின் பயனாகப் பேரறிவு பெற்றோம். தங்கள் போதனைகளை என்றும் மறவோம். தங்கள் கட்டளைகளை எங்கள் வாழ்நாளில் என்றும் கடைப்பிடிக்கத் தயங்கமாட்டோம்" என்று கூறி முனி சிரேட்டரின் தாழ் பணிந்து, அரச குமாரர்கள் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டனர்.

அயோத்தியின் அரியணையில் ஏறும் அருகதையுடைய இராமனையும் தம்பிமாரையும் அழைத்த முனிவர் அரசனுக்குரிய பல கடமைகளையும் எடுத்துரைத்தார். "அரசகுமாரர்கள் தங்கள் கல்வி-கலைகளைக் கற்று அரண்மனை வர ஆயத்தமாகி விட்டார்கள்" என்று முனிவர் அரண்மனைக்குத் தகவல் அனுப்பி வைத்தார். இத்தகவலை அறிந்த தசரத மாமன்னர் பெருமகிழ்ச்சியடைந்தார். அரசியரும் தங்கள் புத்திரர்களைக் காணப்போகிறோம் என்று பூரித்தனர். அமைச்சர் சுமந்திரனை அழைத்த மன்னவர், அரசகுமாரர்களை அழைத்துவரும்படி கூறினார். அவரும் புறப்பட்டார்.

ஆரண்யத்திலுள்ள தபோவனத்தில் தவசிகளைப் போன்று வாழ்க்கை நடத்திய அரசிளங்குமரர்கள் அயோத்தி மாநகரின் பிரதான வாயிலை வந்தடைந்ததும், தாம் தரித்திருந்த மரவுரிகளைக் களைந்து, இளவரசர்களுக்குரிய ஆடைகளை அணிந்து நகருள் பிரவேசித்தனர். சிறுவர்களாக அரண்மனையை விட்டு வெளியேறிய அரசகுமாரர்கள் அழகொழுகும் இளவல்களாக வந்து சேர்வதைக் கண்ட அயோத்தி நகர மக்கள் ஆனந்தக் கூத்தாடினர்.

### இராமரும் இலக்குவனும்

சத்துருக்கனும் இலக்குவனும் ஒரே வயிற்றில் பிறந்தவர்கள். இருப்பினும் இலக்குவன் எப்போதும் இராமனை இணை பிரியாமல் தொடர்வது வழக்கமாகிவிட்டது. அதேபோல் பரதனும் சத்துருக்கனும் என்றும் இணைபிரியாமல் இணைந்து காணப் பட்டனர்.

நால்வரும் தேவாம்சம் பொருந்தியவர்கள்- எனினும் இராமனுடைய அழகே ஈடு இணையற்றிருந்தது. இளங்குமரனாக இப்பொழுது இராமனைக் கண்ட அனைவரும் மதி மயங்கி நின்றனர்.

அரண்மனை வாயிலில் அரசர் தசரதரே வந்து நின்று குமாரர்களை வரவேற்றார். இராமன் தந்தையின் தாழ் பணிந்தான். தம்பிமாரும் அண்ணனைப் பின்பற்றி அரசரின் அடிதொழுது ஆசி பெற்றனர். உடனடியாக அந்தப்புரம் சென்ற அரச குமாரர்கள் தங்கள் தாய்மாரின் ஆசிகளைப் பெற்றனர். மூன்று அரசிகளும் இராமனைத் தங்கள் மகனாகவே கருதினர். இராமன் குழந்தையாக இருக்கும்போது எவ்வாறு வாரி எடுத்து வாஞ்சையுடன் முத்தமாரி சொரிந்தனரோ, அதே போன்று அன்னையர் மூவரும் இராமனை அணைத்தெடுத்து உச்சி மோந்தனர்.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக' என்ற பொய்யாமொழிக்கு ஒப்ப, பயிற்சி முடிந்து திரும்பிய இளவல்கள் நால்வரும் அரச கடமைகளில் தங்களை ஈடுபடுத்த ஆரம்பித்தனர். இராமன் தந்தையின் பணியில் பெரும்பாகத்தை பொறுப்புணர்ச்சியுடன் கையேற்று செயற்பட ஆரம்பித்தான். இதனால் சக்கரவர்த்தியின் சிந்தை குளிர்ந்தது.

இவ்வாறு சில நாட்கள் சென்றதும் அவை கூடியிருக்கும் போது வாயிற்காவலன் வந்து நின்று மன்னருக்கு மரியாதையுடன் வணக்கம் செலுத்தினான். பின்னர் "மன்னர் மன்னவ, விசுவாமித்திர மாமுனிவர் தங்கள் அவையை நாடி வந்து கொண்டிருக்கிறார்" என்று கட்டியம் கூறினான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி இல—2**
**பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்**

1. **எம்.எல்.பீ. முஹைடீன்**
   நெஷனல் பேப்பர் கொம்பனி லிமிட்டெட் வாழைச்சேனை.
2. **எஸ்.பாலக்குமார்**
   ரேஸ்கோஸ். நுவரெலியா.
3. **திருமதி உதயகுமார்**
   பிள்ளையார் கோவில் ரோட்-மாத்தளை.
4. **திருமதி மகாராணி கனகராசா,**
   சென்-பெனடிக்ட் மாவத்தை, கொட்டாஞ்சேனை கொழும்பு 13
5. **செல்வி.க.சகுந்தலாதேவி,** புளுமெண்டோல் அரங்கமாடிவீடு, கொழும்பு – 13

**இராமாயணப் போட்டி 04**

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:– இவ்வாரம் ஒரு திருக்குறள் பாடலை பயன்படுத்தியுள்ளார் இராஜகுமாரன். அது என்ன?**

நவம்பர் 4 ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:04.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல– 1772
கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

# எங்க வீட்டுப்பிள்ளை




➡ 125 வது வெற்றிப்படிகளில் முரசு காலடி வைத்திருக்கிறது. வாசகர்களின் வியத்தகு நேசம் பிரமிக்க வைத்திருக்கிறது. பிரமிப்பு பளிச்சென்று தெரிகிறது. முரசை தழுவ எங்கெல்லாமோ போட்டி நடக்கிறது. முரசோடு போட்டி கிடையாது. முரசை தழுவுகிறவர்களுக்குள் தான் போட்டி. எனினும் சுவாரசியமில்லாத போட்டி. ஆனால் முரசை நேசிப்பதில் வாசக நெஞ்சங்கள் காட்டும் ஆர்வம் வசீகரமானது. அதுவே முரசுக்கு நிரந்தர வாழ்த்துமானது. படத்தில் இருக்கும் சுட்டிப் பெண் பிரியா. மாத்தளையைச் சேர்ந்தவர், 1 முதல் 125வது முரசுவரை சேர்த்துவைத்து பெருமிதமாய் ஒரு போஸ்.

அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11

# மறுபடி வேண்டாம்

➡ அணுகுண்டுகளே வேண்டாம் என்று உலகெங்கும் குரல் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அதனைக் காதில் போட்டுக் கொள்ளாமல் கடந்த செப்டம்பர் மாத நடுப் பகுதியில் ஃபிரான்ஸ் அணுகுண்டுப் பரிசோதனை நடத்தி

⬇ முடித்தது. 20 ஆயிரம் தொன் எடை கொண்ட அணுகுண்டை தென் பசுபிக் கடல் பிராந்தியத்தில் வெடிக்க வைத்து வேடிக்கை பார்த்தபோது, நீலக் கடல் வெண்உலோக வர்ணமாகமாறியது. பலகோடி கடல் ஜீவன்கள் துடிதுடித்து மடிந்து போயின. உலகெங்கும் பலத்த கண்டனங்கள் எவுகணைகள் போல கிளர்ந்தெழுந்தன. ஃபிரான்ஸிலும் பயங்கரமான எதிர்ப்பு, அணுகுண்டால் ஏற்படும் தாக்கத்தை விபரிக்க தீவிர சமாதான விரும்பி ஒருவர் முக மூடியுடனும், கொடியுடனும் ஆர்ப்பாட்டத்தில் குதித்திருப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.




# வீட்டுக்குள் ஒரு நந்தவனம்





⬆ கறுப்பு-வெள்ளைப்படத்தில் இருக்கும் ஜோடி நடிகை மீராவோக்கரும், அவரது காதலன் நிம்லாக்லேயும். இருவருக்கும் குழந்தையுள்ளம். அதனால் தமது வீட்டை குழந்தைகள் இல்லம் போல விளையாட்டுப் பொருட்களால் நிரப்பி வைத்திருக்கிறார்கள். இத்தனைக்கும் வீட்டில் குழந்தைகளே கிடையாது. நடிகை மீராவொக்கருக்கு மற்றொரு ஆசையும் இருக்கிறது. காட்டுச் சூழலில் இன்பமாய் வாழவேண்டுமாம். அதற்காக காட்டிற்கு போகவும் பயம். எனவே வீட்டுக்குள் காடு போன்ற காட்சியமைப்பை உருவாக்கி விட்டார்கள். சுவரில் விலங்குகளின் படங்கள், வரவேற்பறையிலும், படுக்கையறையிலும் பூஞ்செடிகள். அதாவது ஒரு குட்டி நந்தவனம். சில நேரங்களில் சில மனிதர்கள். சில மனிதர்களுக்குச் சில ஆசைகள். எப்படியோ அழகான வீடுதான். அதற்கேற்ற ஜோடிதான்.

# இது விற்பனைக்கல்ல



➡ பெரிய பூசணிகளில் லேட்டஸ்ட் பூசணி இதுதான். கனடாவிலுள்ள நாயாகாரா நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள நாதன் பிலிப்ஸ் என்னும் சந்தையில் இதனை ஏலம் விட்டார்கள். பலத்த கிராக்கி. இறுதியில் 2 வயது சுட்டிப் பையன் சாம் கில்லீஸின் அப்பா இதனை வாங்கினார். சுட்டிப்பையனுக்கு அரியாசனம் கிடைத்தது போன்ற பூரிப்பு. என்ன அழகாகப் போஸ் கொடுக்கிறான் பாருங்கள். இந்தப் பூசணியின் எடை 180 கிலோ. சுட்டிப்பையனிடம் பூசணியை தருமாறு பலர் கேட்டார்கள். விற்பனைக்கல்ல என்று ஒரேயடியாகக் கூறிவிட்டானாம். ஆசனத்தை விட்டுக் கொடுக்க மனம் வருமோ?

# மேனியில் முத்திரை



⬅ படத்தில் பள பள மேனியில் சிரிப்பவர் நடிகை டெமிமோர். கில்டா என்னும் படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது ரசிகர்கள் மொய்த்தனர். உடனே டெமிமோர் உணர்ச்சிவசப்பட்டு தனது மேலாடையைக் கழற்றி ரசிகர்களை நோக்கி வீசிவிட்டார். (அன்புப்பரிசு) அதே நேரம் டெமியை கூர்ந்து கவனித்த படப்பிடிப்பாளர் ஒருவரின் கண்ணில் பட்டது முதுகில் இருந்த முத்திரை. பல வர்ணத்தில் 'பிளநெற் ஹொலிவூட்' என்று முதுகில் பச்சை குத்தியுள்ளார் நடிகை. முதுகில் என்ன இருக்கு என்று நடிகை வெளிப்படுத்தி விட்டதால், ரசிகர்கள் பலர் தமது முதுகிலும் பல வர்ணத்தில் பச்சை குத்த ஆரம்பித்துவிட்டார்களாம்.



படிப்பகம்